




# 1

அந்த பெண், போலீஸ் ஸ்டேஷன் வாசலில் ஆட்டோவில் இருந்து இறங்கி வேகவேகமாய் உள்ளே நுழைந்தபோது - அரசாங்கத்துக்கு விசுவாசமாய் உழைக்கும் அந்த ரோமன் காலத்து கடிகாரத்தில் பதினொரு மணி தீர்க்கமாய் அடித்துக் கொண்டிருந்தது. கான்ஸ்டபிள்கள் கொட்டாவிகளில் இருந்தார்கள்.

நாற்பது வயதை நோக்கிப் போய்க்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் பால்ராஜ் தூக்கம் வழிகிற கண்களோடு - பார்த்துக் கொண்டிருந்த 'கேஸ்' ஃபைலை தள்ளி வைத்து விட்டு அந்தப் பெண்ணை ஏறிட்டார்.

வந்தவள் தனக்கு வயது இனிக்கும் இருபது என்றாள். மெலிதான வெளிர் நீல நிற சைனா சில்க் சேலை உடம்பை கச்சிதமாய் சுற்றியிருந்தது. கடலில் மின்சாரத்தை எடுக்கும் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, அவள் கண்களில் மின்சாரம் தயாரிக்கலாம் போலிருந்தது. உடம்பு ரோஜா நிறத்தில் ததும்பிக் கொண்டிருந்தது. அந்த நிமிடம் வியர்த்திருந்தாள்.

''எஸ்...'' என்றார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

அவள் லிப்ஸ்டிக் பூசாமலேயே சிவந்து போயிருந்த தன் சதைப் பிடிப்பான உதடுகளைப் பிரித்தாள். ''இன்ஸ்பெக்டர்... நான் ஒரு பத்திரிகை நிருபர். என் பேர் அற்புதா.''

அவள் ஒரு பத்திரிகை நிருபர் என்று தெரிந்ததுமே, பால்ராஜ் தன் குரலில் மரியாதையை வரவழைத்துக் கொண்டார். எதிரே இருந்த மர நாற்காலியைக் காட்டினார்.

''உட்காருங்க மிஸ் அற்புதா.''

அவள் தன் செழுமையான பின்புறங்களை நாற்காலிக்குக் கொடுத்து - அதில் புதைந்தாள். இப்போது அவளுடைய உடம்பிலிருந்து மெது வாய் சென்ட் வாசனை அடித்தது. பால்ராஜ் கேட்டார். ''எந்த பத்திரிகைக்கு நிருபரா இருக்கீங்க?''

''ஜீப்பிமம்பு...''

''என்ன விஷயம்? சொல்லுங்க!''

அற்புதா தன் அழகான சிறிய நாக்கை கொஞ்சமாய் வெளியே நீட்டி - தன் ரப்பர் உதடுகளுக்கு ஈர மூலாம் பூசிவிட்டு, சொல்ல ஆரம்பித்தாள்.

''இன்ஸ்பெக்டர், நான் இவ்வளவு நேரமும் கலைவாணர் அரங்குல நடந்திட்டிருந்த நட்சத்திரக் கலை விழாவில் செய்திகளை சேகரிச்சிட்டிருந்தேன். செய்திகளை சேகரிச்சதும், அதை பத்திரிகை ஆபீஸ்ல சொல்றதுக்காக, பொது டெலிஃபோன் பூத்துக்கு வந்தேன். பத்திரிகை ஆபீஸ் ஃபோன் நம்பரை டயலில் சுழற்றும் போது, ஏதோ ஒரு குறுக்குப் பேச்சு வந்தது. இரண்டு கரகரப்பான குரல்கள்.''

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் பளிச்சென்று நிமிர்ந்தார்.

அற்புதா தொடர்ந்தாள். ''ஆரம்பத்துல அந்தப் பேச்சை அலட்சியப் படுத்தின நான், அந்தக் குரல்கள் பேசப்பேச உஷாரானேன். '**மயக்கம் தரும் மங்கை' திருமுருகனில் வருகிறாள். ஜி.டி.என் 137. வயது பத்து** - இந்த வார்த்தைகளை ஒரு குரல் சொன்னதும் - இன்னொரு குரல் '**பத்தை தத்து எடுத்துக் கொள்கிறோம்**' என்று சொல்லி ரிசீவரை வெச்சிடுச்சு. அவங்க வார்த்தைகள்ல ஏதோ ஒரு விஷயம் உறைஞ்சிருக்கிறதா என் மனதுக்குப் பட்டது இன்ஸ்பெக்டர். அதான் ஒரு ஆட்டோ பிடிச்சு... நேரா ஸ்டேஷனுக்கு வந்தேன்.''

பால்ராஜின் உடம்பில் ஒரு பதட்டம் வந்து மோதியது. பரபரவென்று ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு அற்புதாவை ஏறிட்டார்.

''அவங்க என்ன பேசிக்கிட்டாங்கங்கிறதை இன்னொரு தடவை சொல்லுங்க, மிஸ் அற்புதா!''

அவள் சொன்னாள்.

**''மயக்கம் தரும் மங்கை திருமுருகனில் வருகிறாள். ஜி.டி.என். 137. வயது பத்து. பத்தை எடுத்துக் கொள்கிறோம்...''**

பால்ராஜ் அந்த வார்த்தைகளை பேப்பரில் எழுதி விட்டு அரை நிமிட நேரம் யோசித்துவிட்டு சொன்னார். ''மிஸ் அற்புதா! ஏதோ ஒரு கடத்தல்



கும்பலைச் சேர்ந்த இரண்டு பேர் சங்கேதமா பேசிக்கிட்ட வார்த்தைகளைத்தான் நீங்க போன்ல கேட்டிருக்கீங்க. **மயக்கம் தரும் மங்கை...** ஒருவேளை அது அபின்... கஞ்சாவாக இருக்கலாம். **திருமுருகன்** என்கிறது ஒரு லாரி அல்லது வேன்... **ஜி.டி.என்** என்பது நெடுஞ்சாலை. 137 என்கிற எண் ஒரு கிலோமீட்டரோட கல்லாயிருக்கும். **வயது பத்து** என்கிற வார்த்தை கொண்டு வரப்படுகிற போதைப் பொருளின் மதிப்பாய் இருக்கலாம். அதாவது பத்து லட்சம் ரூபாய்.''

சொல்லிக் கொண்டே பால்ராஜ் எழுந்தார். நாற்காலியின் நுனியில் தொற்றியிருந்த தொப்பியை எடுத்து தலைக்குக் கொடுத்தார்.

''ஓ. கே. மிஸ் அற்புதா. உங்க பேருக்கேற்ற மாதிரியே ஒரு அற்புதமான தகவலைக் கொடுத்திருக்கீங்க. விடியறதுக்குள்ளே நாங்க அந்த கும்பலை மடக்கிடுவோம். நீங்க கொடுத்த தகவலுக்கு மிகவும் நன்றி. உங்களுக்குப் பரிசு கிடைக்க நான் அரசாங்கத்துக்கு எழுதறேன்! கான்ஸ்டபிள்!''

''சார்...''

''ஜீப்பை தயார் பண்ணு!''

கான்ஸ்டபிள் வாசலை நோக்கி நகர, பால்ராஜிடம் திரும்பினாள் அற்புதா.

''இன்ஸ்பெக்டர்...''

''எஸ்...''

''ஒரு சின்ன அப்ளிகேஷன்...''

அவர் புருவத்தை உயர்த்தினார்.

''சொல்லுங்க.''

''நீங்க இப்போ அந்த இடத்துக்குத்தானே போகப் போறீங்க?''

''ஆமா.''

''நானும் உங்க கூட வரலாமா?''

இன்ஸ்பெக்டர் பால்ராஜின் புருவம் சர்ரென்று மேலே உயர்ந்தது. ''நீங்களும் வர்றீங்களா..? எதுக்கு?''

''சார்... நான் ஒரு பத்திரிகை நிருபர் - **தீப்பிழம்பு** பத்திரிகையில் சூடான அரசியல் கட்டுரைகளையும், சமூக விரோதிகளைப் பற்றியும் எழுதிட்டு வர்றேன். இன்னைக்கு நீங்க நடத்தப் போகிற கள்ளக்கடத்தல் வேட்டையை, நானும்

உங்க கூடவே இருந்து கவனிச்சு, நாளைக்கு எங்க பத்திரிகையில் அதைப்பத்தி எழுதணும்...''

பால்ராஜ் புன்னகைத்தார்.

''என்ன இன்ஸ்பெக்டர் சிரிக்கிறீங்க?''

''நீங்க ஒரு ஆணாயிருந்தால், இந்நேரம் 'ஜீப்பில் ஏறுங்க' என்று சொல்லியிருப்பேன். அந்த மாதிரியான இடத்துக்கெல்லாம் ஒரு பெண்ணைக் கூட்டிட்டு போறது ரொம்பவும் ஆபத்து.''

''எனக்கு ஆபத்துன்னா ரொம்பவும் பிடிக்கும் சார். இல்லேன்னா நான் இந்த பத்திரிகை நிருபர் வேலைக்கு வந்திருக்க மாட்டேன்.''

பால்ராஜ் அவளை ஆச்சரியமாய் பார்த்துவிட்டுக் கேட்டார். ''சென்னையில் நீங்க எங்கே தங்கியிருக்கீங்க?''

''ராஜா அண்ணாமலைபுரம்.''

''எந்த வீதி?''

''அருணாசலம் வீதி. வீட்டு நம்பர் முப்பத்தி ரெண்டு - பி.''

''நீங்க எங்க கூட வர்றதை... உங்க அப்பா - அம்மா ஆட்சேபிக்க மாட்டாங்களா?''

அற்புதாவின் உதடுகளில் ஒரு வறண்ட சிரிப்பு புரண்டது. ''கண்டிப்பா ஆட்சேபிப்பாங்க - அவங்க உயிரோட இருந்திருந்தா..!''

''இரண்டு பேருமே உயிரோடு இல்லையா?''

உதட்டைப் பிதுக்கினாள் அற்புதா.

''அப்போ... நீங்க யாரோட பாதுகாப்புல இருக்கீங்க?''

''அத்தையோட வீட்ல இருக்கேன். அத்தைக்கு நான்தான் பாதுகாப்பா இருக்கேன். ஜீப்புக்கு போகலாமா இன்ஸ்பெக்டர்?''

''கண்டிப்பா வரணும்ன்னு ஆசைப்படறீங்களா?''

''ஆமா.''

''ஓ.கே. நடங்க.''

''ஜீப்புக்கு போறதுக்கு முன்னாடி - நான் ஒரு போன் பண்ணணும்.''

''யாருக்கு?''

''என்னோட பத்திரிகை ஆசிரியருக்கு. என்னோட அப்பா உயிரோடு இருந்திருந்தா என்மேல எவ்வளவு பிரியம் வெச்சிருப்பாரோ அதைவிட ஒருபடி மேலாகவே என்மேலே பிரியம்



வெச்சிருக்கார். கலைவாணர் அரங்கில் நடந்த நட்சத்திரக் கலை விழாவைப்பத்தி அவர்கிட்டே இரண்டு வார்த்தை சொல்லணும்...''

''நீங்க தாராளமா போன் பண்ணிச் சொல்லலாம்...''

அற்புதா மேஜையின் மேலிருந்த போனை நோக்கிப் போய் - ரிசீவரை எடுத்து - தன் சந்தனநிற ஆட்காட்டி விரலால் டயலைச் சுழற்றினாள். மறுமுனையில் ரிங் போய் யாரோ எடுத்தார்கள்.

''அலோ...''

''சார்... நான் அற்புதா பேசறேன்.''

அடுத்த முனையில் - லேசான தூக்கக் கலக்கக் குரலில் எடிட்டர் சிவசைலம் மெலிதான குரலில் பேசினார்.

''என்னம்மா... கலைவிழா முடிஞ்சாச்சா... இன்னும் நடந்துட்டிருக்கா..?

''முடியற நேரம்தான் சார்... நமக்கு வேண்டிய நியூஸ் முழுவதையும் சேகரிச்சுக்கிட்டேன்..''

''நீ இப்போ எங்கிருந்து பேசிட்டிருக்கே..?''

''போலீஸ் ஸ்டேஷன்லயிருந்து... சார்...''

''போலீஸ் ஸ்டேஷனா..?''

''ஆமா சார்... திருவல்லிக்கேணி போலீஸ் ஸ்டேஷனில் இருந்து பேசிட்டிருக்கேன்... நாளைக்குக் காலைல நம்ம பத்திரிகைக்கு ஒரு சூடான நியூஸ் கிடைக்கும் சார்...''

''நீ என்னம்மா... சொல்றே..?''

''நாளைக்குக் காலையில விபரமா வந்து சொல்றேன் சார்...''

''இதோ பாரம்மா அற்புதா... நம்ம பத்திரிகைக்கு சூடான செய்தி கிடைக்கணும் என்பதற்காக நீ போய் ஏதாவது ஆபத்துல மாட்டிக்காதேம்மா...''

''என்னைப்பத்தி கவலைப்படாதீங்க சார்... இன்ஸ்பெக்டர் காத்திட்டிருக்கார்... நான் வெச்சுட்டுமா சார்..?''

''ம்...''

மறுமுனையில் சிவசைலம் 'உம்' கொட்ட ரிசீவரை சாத்தினாள். அற்புதா; வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கி இன்ஸ்பெக்டரோடு இணைந்து நடந்தாள்.

''உங்க அத்தைகிட்டே தகவல் சொல்ல வேண்டாமா மிஸ் அற்புதா..?''

''வேண்டாம்... சார்... அத்தைக்கு என்னைப் பத்தின கவலை இருக்காது... சில சமயம் ராத்திரி நேரங்கள்ல வீட்டுக்கு போகாமே கூட இருந்து - பத்திரிகை ஆபீஸ்லயிருந்து வேலை பார்த்திருக்கிறேன்...''

பால்ராஜ் டிரைவிங் சீட்டுக்கு வர - அவருகே சேலைத் தலைப்பை இடுப்பில் சொருகிக்கொண்டு உட்கார்ந்தாள் அற்புதா.

பின்சீட்டில் நான்கு கான்ஸ்டபிள்கள் எதிரும் புதிருமாய் நிரம்பிக்கொள்ள, ஜீப் புறப்பட்டது. பால்ராஜ் தன் மணிக்கட்டில் இருந்த வாட்ச்சைப் பார்த்தார்.

நேரம் 11.15.

ஜீப்பின் ஆக்ஸிலேட்டரில் காலைவைத்தார். அது இலவசம் பஞ்சாய் பிறிட்டது.

## 2

ஜி.டி. என். தேசிய நெடுஞ்சாலை அந்த நள்ளிரவு நேரத்தில் சோம்பல் முறித்துக்கொண்டு நெடுக்க கிடந்தது. ஜிலு ஜிலு என்ற காற்று ஜீப்பை அலம்ப, நடுவானத்தில் நிலா நட்சத்திரங்களுக்கு மத்தியில் இளவரசியாய் தெரிந்தது.

உளுந்தூர் பேட்டை 137 கி.மீ. என்று சாலையோரமாய் அரைவட்டக் கல் ஒன்று சொல்ல, ஜீப்பை ஓரம் கட்டி நிறுத்தினார் இன்ஸ்பெக்டர் பால்ராஜ். பிரும்மாண்டமாய் வளர்ந்திருந்த அந்தப் புளியமரம் ஜீப்பை தொண்ணூறு சதவீதம் மறைத்தது.

ஹெட்லைட்டுகளை அணைத்துவிட்டு, கீழே இறங்கினார் பால்ராஜ். அவரைத் தொடர்ந்து அற்புதாவும் இறங்கினாள்.

''இது எந்த இடம் சார்..?''

''நெத்திக் குப்பம்... இங்கிருந்து கொஞ்ச தூரத்துல ஒரு செக்போஸ்ட் இருக்கு... அந்த செக்போஸ்ட்ல எல்லா லாரியும் நின்னுதான்



வரணும்... திருமுருகன் என்கிற அந்த லாரியையோ வேனையோ மடக்கறதுக்கு அந்த இடம்தான் சரி... செக்போஸ்ட்டுக்குப் பக்கத்துல போலீஸ் ஜீப் நின்னா... வந்த லாரிகள் உஷாராயிடும்... நான் ஒரு கான்ஸ்டபிளைக் கூட்டிகிட்டு செக்போஸ்ட் போறேன்... நீங்களும் மத்த கான்ஸ்டபிள்களும்... ஜீப்பிலேயே இருங்க...''

அவர் பேசப் பேச -

அற்புதா குறுக்கிட்டாள்.

''சார்...''

''எஸ்...''

''நானும் உங்ககூட அந்த செக்போஸ்ட்டுக்கு வர்றேன் சார்... அந்த லாரியை எப்படி மடக்கி ஆட்களைப் பிடிக்கறீங்கன்னு நான் பார்த்தால்தானே... நாளைக்கு பத்திரிகையில ஒரு கட்டுரையா எழுத முடியும்...?''

''உங்களுக்கு அசாத்திய தைரியம்...'' பால்ராஜ் புன்னகைத்தார்.

''நன்றி. போகலாமா... சார்...?'' நடந்தார்கள்.

ரோட்டில் கொட்டியிருந்த இருட்டில் நனைந்தார்கள்.

''நாம அந்த செக்போஸ்ட்டுக்கு போறதுக்கு முன்னாடி அந்த திருமுருகன் லாரி வந்துடாதா சார்..?''

''வர வாய்ப்பில்லை..?''

''எப்படி சொல்றீங்க..?''

''இந்த கடத்தல் சமாச்சாரங்களே ராத்திரி ஒரு மணிக்கு மேல்தான் ஆரம்பமாகும் மிஸ் அற்புதா... இப்போ நேரம் பனிரெண்டே கால்...''

''நான் உங்களுக்கு க்ளு கொடுத்திருக்கேன்...! எனக்கு என்ன பரிசு சார் கிடைக்கும்?''

''பிடிபட்ட கடத்தல் பொருள்களோட மதிப்பை வெச்சு உங்களுக்கு ஒரு தொகையைக் கொடுப்பாங்க...''

ஐந்து நிமிட நடையில் அந்த செக்போஸ்ட் வந்தது.

சரிந்து போன ஒரு சின்னவீடு செக்போஸ்டாய் மாறியிருந்தது.

உள்ளேயும் வெளியேயும் இரண்டு அரிக்கேன் விளக்குகள் சோகையாய் எரிந்து கொண்டிருக்க - ரோட்டோரமாய் ஒரு லாரி - பட்டை பட்டையாய்

பெயிண்ட் தீட்டப்பட்ட நீளமான மூங்கிலால் மறிக்கப்பட்டிருந்தது.

பால்ராஜ் லாரியின் நெற்றியிலிருந்த வாசகத்தைப் பார்த்தார். மெல்லிய குரலில் வாய்விட்டுப் படித்தார். ''அன்னமார்சாமி துணை''

அந்த லாரி டிரைவர் பில்களை நீட்டி - தேய்ந்து போன ரப்பர் ஸ்டாம்பால் முத்திரைகளை வாங்கிக்கொண்டிருக்க செக்போஸ்ட் அதிகாரி இன்ஸ்பெக்டர் பால்ராஜைப் பார்த்ததும் உட்கார்ந்திருந்த நாற்காலியில் இருந்தும் எழுந்தார். பெயர்பாட்ஜ் - வில்லியம்ஸ் என்றது.

''நான், இன்ஸ்பெக்டர் பால்ராஜ்...''

''உட்காருங்க சார்...''

தனக்காக நகர்த்தப்பட்ட நாற்காலியில் பால்ராஜ் உட்கார்ந்தார். அருகேயிருந்த நாற்காலியில் அற்புதா அமர்ந்தாள். லாரி டிரைவர் வெளியே போகிற வரைக்கும் காத்திருந்த பால்ராஜ் பிறகு செக்போஸ்ட் அதிகாரியை ஏறிட்டார்.

''மிஸ்டர் வில்லியம்ஸ்... இவங்க மிஸ் அற்புதா! ஒரு பத்திரிகை நிருபர்... இவங்க ஏதேச்சையா கேட்ட ஒரு டெலிபோன் கிராஸ் பேச்சில் ஒரு 'க்ளூ' கொடுத்திருக்காங்க. 'திருமுருகன்'னு நெற்றியில் எழுதப்பட்ட லாரி உங்க செக் போஸ்டை கிராஸ் பண்றதுண்டா?''

''என்ன பேர் சொன்னீங்க... திருமுருகனா?''

''ஆமா...''

''அப்படி ஒரு பேரோட லாரி கிராஸ் ஆகலையே இன்ஸ்பெக்டர்...''

''இன்றைக்கு ஆகலாம்...''

''லாரியில என்ன கடத்தறதா தகவல் சார்..?''

''ஏதாவது ஒரு போதைப் பொருள் - அது... அபின், கஞ்சா... ஹெராயின் இப்படி ஏதாவது இருக்கலாம்.''

''தகவல் உண்மையானது தானா..?''

''காத்திருந்து பார்த்தால்தான் தெரியும்...'' பால்ராஜ் சொல்லிக்கொண்டிருக்கும் போதே - செக்போஸ்டுக்கு வெளியே ஒரு லாரி இரைச்சலோடு வந்து நின்றது. கதவைத் திறந்து கொண்டு - கையில் இன்வாய்ஸ் தாள்களோடு - பரட்டைத் தலையும் கிரீஸ் தடவின பனியனோடும் அந்த கிளீனர் இளைஞன் கீழே குதித்து



உள்ளே வந்தான்.

பால்ராஜ் அவனைக் கூப்பிட்டார்.

''இங்கே வாப்பா...''

அவன் வந்தான்.

''லாரியோட பேரென்ன..?''

அவன் விழிக்க-

''அதாம்பா... லாரியோட நெத்தியில ஒரு பேர் எழுதியிருப்பீங்களே... அந்தப் பேரு...''

''அந்தோணியார் சார்...''

''லாரியில் எத்தனை பேர் இருக்கீங்க..?''

''நானும் டிரைவரும் மட்டும்தான்.''

''லாரியில் என்ன இருக்கு..?''

''மிளகாய் மூட்டை சார்...''

''லாரி எங்கிருந்து வருது...?''

''சேலத்திலிருந்து சார்...''

பால்ராஜ் எழுந்து போய் - லாரியை ஒரு தரம் மேய்ந்துவிட்டு வந்தார். காரமான மிளகாய் நெடி - மூக்கில் சுறுசுறுப்பாய் ஏறி கண்களில் நீரைக் கலகலவென்று வழியவைத்தது. உள்ளே போன கிளீனர் இன்வாய்ஸ்களை அள்ளிக் கொண்டு - லாரியை நோக்கி வந்தான். பால்ராஜைப் பார்த்து தயங்கினான்.

''சார்... லாரி போகலாமா...?''

''ம்...''

பால்ராஜ் தலையாட்ட கிளீனர் உற்சாகமாய் லாரியில் தொற்றி ஏறினான். ''ரைட் போலாம்ணே...''

லாரி உறுமிக்கொண்டு புறப்பட்டது. செக் போஸ்ட் அதிகாரி வில்லியம்ஸ் உள்ளிருந்து வெளியே வந்து பால்ராஜோடு இணைந்து நின்றார்.

''இந்த ஏரியாவில் கடந்த ஆறு மாசமாவே... இந்த மாதிரியான புகாரெல்லாம் இல்லை இன்ஸ்பெக்டர்... வேற ஏதாவது ஒரு நெடுஞ்சாலையில் அதுமாதிரி நடக்கலாம்...''

''க்ளூவில் ஜி.டி.என்... ரோடு தான் வருது...'' பால்ராஜ் சொல்லிக்கொண்டே சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒன்றை உருவி உதடுகளில் பொருத்தினார். வில்லியம்ஸிடம் பாக்கெட்டை நீட்டினார். ''சிகரெட்..?''

''நன்றி... எனக்கு பழக்கமில்லை...''

லாரிகள் வர ஆரம்பித்தது வரிசையாய்.

மயிலாத்தாள் டிரான்ஸ்போர்ட் - பாத்திமா துணை - சேவியர் துணை - பத்மா ரோட்வேஸ் - வீரகுமார் - ராஜலட்சுமி.

2.00 மணியை நோக்கி நேரம் நழுவிக் கொண்டிருந்தது.

பால்ராஜ் யோசித்தார்.

'எதிராளிகள் போலீஸ் இங்கே இருப்பதை மோப்பம் பிடித்துவிட்டார்களா?' செக்போஸ்டுக்குள்ளே எட்டிப் பார்த்தார்.

அற்புதா மோவாயில் விரலை பதித்து - முழங்கையை மேசைக்குக் கொடுத்திருந்தாள்.

''மிஸ் அற்புதா...''

''சார்...''

அவள் எழுந்து வந்தாள்.

''நீங்க டெலிபோனில் கேட்ட அந்த வார்த்தைகளை மறுபடியும் சொல்லுங்க...''

அற்புதா சொன்னாள். ''மயக்கம் தரும் மங்கை திருமுருகனில் வருகிறாள். ஜி.டி.என். 137. வயது பத்து...''

அவள் சொல்லி முடிக்கவில்லை.

ஹெட்லைட் வெளிச்சத்தோடு பீறிட்டு வந்த அந்த லாரி - ரோட்டின் குறுக்கே நீட்டியிருந்த மூங்கில் கழிக்கு கட்டுப்பட்டு நின்றது.

தலையை உயர்த்தினார், பால்ராஜ்.

லாரியின் நெற்றியில் - வெள்ளை பெயிண்ட்டில் பெரிது பெரிதான எழுத்துக்களில் அந்தப் பெயர் கண்களில் அறைந்தது.

'திருமுருகன்.'

பெயரின் குறுக்காக - ஒரு வேலின் படம் வரையப்பட்டிருக்க - லாரியின் முன்சீட்டில் - டிரைவரும் இன்னொரு ஆசாமியும் தெரிந்தார்கள்.

பால்ராஜும் வில்லியம்ஸும் லாரியை நோக்கிப் போனார்கள். அற்புதாவும் அவர்களைத் தொடர்ந்தாள்.

## 3

**லா**ரி டிரைவர் திடகாத்திரமாய் இருந்தான். கண்களில் சாராயம் தெரிந்தது. மகா மட்டமான ஒரு



லுங்கியை தொடைகள் தெரியும்படியாக அலட்சியமாய் கட்டியிருந்தான். சட்டையின் மேல் பட்டன்கள் கழன்று போயிருக்க - மார்பில் ரோமம் தாழம்பூ புதராய் தெரிந்தது.

டிரைவரின் அருகே உட்கார்ந்திருந்த அந்த ஆசாமி நடுத்தர வயதில் - கண்ணாடி போட்டு கொஞ்சம் வயோதிகமாய் காட்சியளித்தான். வெள்ளை வேஷ்டி, சிமெண்ட் நிற சட்டை... கையில் ஒரு சிறிய தோல்பை.

செக்போஸ்ட் அதிகாரி வில்லியம்ஸ் - அந்த ஆசாமியை நெருங்கினார். ''லாரி எங்கிருந்து வருது..?''

''உளுந்தூர் பேட்டையிலிருந்து சார்...''

''என்ன சரக்கு..?''

''பஞ்சு பேல் சார்...''

''சென்னையில் யாருக்குப் போகுது..?''

''குரோம்பேட்டையில் இருக்கிற ஒரு மில்லுக்கு சார்...''

''பில் கொடுங்க பார்க்கலாம்...''

அந்த ஆசாமி தோல்பையைப் பிரித்து, கற்றைக் காகிதங்களை எடுத்து வில்லியம்ஸிடம் நீட்ட - வில்லியம்ஸ் அதை உன்னிப்பாய் பார்த்துவிட்டு, தன் அருகே நின்றிருந்த பால்ராஜிடம் அவைகளை நீட்டினார். பால்ராஜ் அவைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே - வில்லியம்ஸ் லாரியை நோக்கிப் போனார்.

லாரியின் முதுகில் அம்பாரமாய்க் குவித்து கயிற்றால் கட்டப்பட்டிருந்த பஞ்சு பேல்களைப் பார்த்துவிட்டு டிரைவரைக் கூப்பிட்டார்.

''டிரைவர்...''

''சார்...'' அவன் ஓடிவந்தான்.

''மேலே ஏறி... ஒரு பஞ்சு பேலைக் கீழே உருட்டு...''

''ஏ...ஏ... எதுக்கு சார்..?''

''சொன்னதைச் செய்...''

''ச...சரி...சார்...''

லாரி டிரைவர் மேலே - தொற்றி ஏறினான். கயிறுகளை அவிழ்த்து - கட்டின் இறுக்கத்தைத் தளர்த்தினான்.

''எந்த பேலை சார் போடட்டும்..?''

வில்லியம்ஸ் பார்த்துவிட்டு சொன்னார்.

''இடதுகை பக்கமாய் இருக்கிற பேலைப் போடு...''

அடுத்த சில நிமிடங்களில் - லாரியின் முதுகிலிருந்து அந்த பேல் 'டொம்' என்று ரோட்டில் விழுந்தது. பால்ராஜும் அற்புதாவும் பேல் அருகில் வந்தார்கள். டிரைவர் மேலிருந்து கீழே குதித்தான். தோல்பை ஆசாமி தவிப்பாய் - சொன்னார்.

''இது எல்லாமே பஞ்சு பேல்தான் சார்...''

''இந்த பேலைப் பிரிச்சுக்காட்டுங்க பார்க்கலாம்...'' வில்லியம்ஸ் அதட்ட டிரைவர் லாரி காபினுக்குப் போய் - வெட்டிரும்பும், சுத்தியலுமாய் வந்தான். தோல்பை ஆசாமி நெற்றி வியர்த்துப்போக - சட்டை பாக்கெட்டில் சர்ப்பைத் தேடினான்.

டிரைவர் பேலின் உடம்பைச் சுற்றியிருந்த இரும்புப் பட்டாவைத் தகர்த்துக் கொண்டிருக்க - பால்ராஜ் தோல்பை ஆசாமியிடம் கேட்டார்.

''உங்க பேரு...?''

''ராமபத்திரன்..''

''இந்த லாரி டிரான்ஸ்போர்ட்ல உங்களுக்கு என்ன வேலை...?''

''கிளார்க்...''

''குரோம்பேட்டையில் எந்த மில்லுக்கு போகுது..?''

''ஜெயம் டெக்ஸ்டைல்ஸ் என்கிற மில்லுக்கு சார்...''

''லாரியோட சொந்தக்காரர் யாரு..?''

''முத்துசாமின்னு உளுந்தூர்பேட்டையில ஒருத்தர் இருக்கார்... அவர் கிட்டேயிருந்து வாடகைக்கு எடுத்து வந்த லாரி சார் இது...''

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே - பேல் உடை பட்டு பாளம் பாளமாய் பிரிந்து விரிந்தது. பால்ராஜ் குனிந்து உட்கார்ந்து - உள்ளே கையைவிட்டு பஞ்சை அளைந்து பார்த்தார். ஒரு பத்து நிமிஷ சோதனைக்குப்பின் சோர்வாய் எழுந்தார்.

வில்லியம்ஸ் பால்ராஜிடம் கேட்டார்.

''இன்னொரு பேலை கீழே இறக்கச் சொல்லட்டுமா இன்ஸ்பெக்டர்..?''

''கொஞ்சம் பொறுங்க...'' அற்புதா குறுக்கிட்டாள். ''நான் உங்களுக்கு உதவலாமா..?''



''எஸ்...''

''ஒரு டார்ச்லைட் எனக்கு வேணும் சார்...''

வில்லியம்ஸ் செக்போஸ்ட் அறையை நோக்கிக் குரல் கொடுக்க -

சில நிமிட நேரங்களில் ஒரு ஐந்து செல் டார்ச் பிரகாசமான ஒளியோடு அற்புதாவின் கைக்கு வந்தது.

அற்புதா டார்ச்சின் ஒளியை - குப்பென்று பஞ்சு பேல்களின் மேல் பாய்ச்சினாள். வெளிச்சத்தை அங்குலம் அங்குலமாய் நகர்த்தினாள்.

வில்லியம்ஸும் பால்ராஜும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அற்புதா ஒரு கால்மணி நேரம் லாரியைச் சுற்றிச் சுற்றி வந்து பேல்களை டார்ச் வெளிச்சத்தில் பார்த்துவிட்டு பால்ராஜிடம் திரும்பினாள்.

''சார்...''

பால்ராஜ் அவளருகே வர, வெளிப்பக்கமாய் துருத்திக் கொண்டிருந்த ஒரு பேலைக் காட்டினாள்.

''இந்த பேலை கீழே உருட்டச்சொல்லுங்க சார்...'' பால்ராஜ் ஆச்சரியமானார்.

''இந்த பேல் மேலே மட்டும் உங்களுக்கு எப்படி சந்தேகம் வந்தது மிஸ் அற்புதா?''

அற்புதா புன்னகைத்தாள். ''ஒரு யூகம்தான் சார். லாரியில் இருக்கிற மொத்த பேல்ஸ் அம்பதுன்னு உங்க கையில இருக்கிற பில் சொல்லுது. வரிசைக்கு பத்து விதமா அஞ்சு வரிசை அடுக்கியிருக்காங்க. இந்த அஞ்சாவது வரிசை மட்டும் கொஞ்சம் உயரமா இருக்கு. என்னோட கணக்குக்கு இந்த லாரியில மொத்தம் அம்பத்தியொரு பேல் இருக்கு- இந்த அஞ்சாவது வரிசை பேல்களை கவனிச்சுப் பார்த்தால், நாலாவது பேல் எனக்கு வித்தியாசமா படுது சார். அதன் மீது சிவப்பு மையில் ஒரு புள்ளி வெச்சிருக்காங்க. நாலைஞ்சு இரும்புப் பட்டா எக்ஸ்ட்ரா போட்டிருக்காங்க. அதனால... நாம எதிர்பார்க்கிற 'மயக்கும் மங்கை' அதுலதான் இருக்கணும்...''

அற்புதா சொல்லிக் கொண்டிருக்கும்போதே - கண் இமைக்கிற நேரத்தில் அந்த சம்பவம் நடந்தது.

லாரி டிரைவர் தன் இடுப்பின் மறைவிலிருந்து, அந்த பிஸ்டலை உருவி அருகே நின்றிருந்த

தோல்பை ஆசாமியை நேருக்கு நேராய் - மார்பில் சரியாய் சுட்டான்.

அவன் அலறிக்கொண்டு -

துடித்து முன்பக்கமாய் விழ, ரத்தம் அந்த இருட்டில் சிதறியது. பால்ராஜ் தன் இடுப்பிலிருந்த பிஸ்டலை நோக்கிக் கையைக் கொண்டு போக டிரைவர் சிரித்தான்.

''இன்ஸ்பெக்டர்... உங்க சேவை போலீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கு தொடர்ந்து கிடைக்கணும்னு நீங்க ஆசைப்பட்டா, அசையாமே நில்லுங்க...''

பால்ராஜ் மவுனமானார்.

டிரைவரின் கையிலிருந்த பிஸ்டல், இப்போது அற்புதாவின் பக்கமாய் திரும்பியது. ''சும்மா சொல்லக் கூடாது அம்மணி. உண்மையாகவே உனக்கு அபாரமான மூளைதான். போலீசும், செக்போஸ்ட் ஆசாமியும் ஏமாந்த மாதிரி, நீ ஏமாறலை. நீ யார்ன்னு எனக்குத் தெரியாது. இருந்தாலும் இந்த பிஸ்டலுக்கு புத்திசாலிகளைக் கண்டா கொஞ்சமும் பிடிக்காது. உடனே தோட்டாவைத் துப்பிடும்...''

சொல்லிக் கொண்டே-

பிஸ்டலை அற்புதாவின் நெஞ்சுக்கு நேராய் குறி வைத்தான் டிரைவர்.

அற்புதாவின் உடல் லேசாய் நடுங்கியது. கண்கள் மிரட்சியோடு அவனையே பார்த்தது. அவனுடைய கை டிரிக்கரின் நாக்கை கண்டியது.



## 4

''டுமீல்...''

காற்றைக் கிழித்துக் கொண்டு பிஸ்டல் இருமியது. பிஸ்டலின் வாயில் தீப்பொறி பறந்த விநாடி, அற்புதா குப்ரென்று பிரித்துப் போட்டிருந்த பேலுக்கு கீழே புரண்டாள். தோட்டா இருட்டில் திசை மாறி எங்கோ பாய்ந்து எதையோ சிதறடித்தது.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ் தனக்குக் கிடைத்த அந்த சொற்ப விநாடிகளை உபயோகப்படுத்தி



டிரைவரின் மீது பாய்ந்தார். வலது காலின் ஷூவை உயர்த்தி 'நெக்'கென்று பிஸ்டலைப் பற்றியிருந்த அவனுடைய மணிக்கட்டில் உதைத்தார்.

''அம்மா...'' - கையை உதறினான் டிரைவர்.

பிஸ்டல் ஆகாயத்தில் நீச்சலடிக்க, வில்லியம்ஸ் அதை தாவிப் பற்றினார். தன் மேல் மூர்க்கமாய் வந்து விழுந்த பால்ராஜை சிரமப்பட்டு உதறிவிட்டு, எதிர் பக்கமாய் கொட்டியிருந்த இருட்டில் ஓட ஆரம்பித்தான் டிரைவர்.

''வில்லியம்ஸ்... பிடியுங்க. அவனை!''

வில்லியம்ஸ் ஓடினார்.

''மிஸ் அற்புதா, நீங்க அங்கேயே இருங்க. எங்க கூட ஓடிவராதீங்க'', பால்ராஜ் கத்திக்கொண்டே தன் இடுப்பில் இருந்த பிஸ்டலை உருவிக் கொண்டு - டிரைவரின் பின்னால் 'தட் தட்' என்று ஓடினார்.

கொட்டியிருந்த அபாரமான இருட்டில் - மங்கலாய் - நிழல் உருவமாய் ஓடிக்கொண்டிருந்தவனை நோக்கி முழங்காலுக்குக் கீழே அனுமானமாய் குறி வைத்து சுட்டார் பால்ராஜ்.

தோட்டா குறி தவறி இருட்டில் எங்கோ பாய்ந்து சிதறியது-

டிரைவரின் ஓட்ட வேகம் இன்னமும் அதிகமாகி - அவன் மரண பயத்தில் ஓட ஆரம்பித்தான். வில்லியம்ஸ் கூப்பிட்டார்.

''இன்ஸ்பெக்டர்...''

''சொல்லுங்க வில்லியம்ஸ்.''

''இந்த இருட்ல சுடாதீங்க. குறி தவறினால் ஆள் போயிடுவான்.''

''அவன் ஓடற வேகத்தைப் பார்த்தால் இருட்ல ஆள் தப்பிச்சுடுவான் போலிருக்கே. முழங்காலுக்கு கீழே தைரியமா சுடுங்க!''

''ஓ. கே. இன்ஸ்பெக்டர்.''

வில்லியம்ஸும் சுட ஆரம்பித்தார். இருட்டில் அசுர வேகத்தில் ஓடிக்கொண்டிருந்த அவன் சில விநாடிகளுக்கு மட்டுமே கண்களில் பட்டு பட்டு மறைந்தான்.

வயிற்றுக்குள் இருந்த தோட்டாக்கள் பூராவும் வெளியே வந்துவிட, பிஸ்டல்கள் சோர்ந்து போயிற்று. வில்லியம்ஸும், பால்ராஜும் ஏராளமான பெருமூச்சுகளோடு இருட்டில் நிதானம்

பார்த்து ஓடிக் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று-

அந்த அலறல் எழுந்தது. "அம்...மா... ஆ...ஆ...ஆ...ஆ...ஆ..."

முன்னால் ஓடிக் கொண்டிருந்த டிரைவரின் அலறல்.

ஓடிக் கொண்டிருந்த வில்லியம்ஸும், பால்ராஜும் சரேலென்று பிரேக் போட்ட மாதிரி நின்றார்கள். பால்ராஜ் பதட்டமாய் கேட்டார்.

"என்ன வில்லியம்ஸ்... என்னாச்சு?"

"தெரியலை சார்."

வேகமாய் சிறிது தூரம் நடந்து, லைட்டரை 'பிளக்'கென்று கிளிக்கிய போது உதித்த வெளிச்சத்தில் - அந்த கைப்பிடிச் சுவரில்லாத மொட்டைக் கிணறு தெரிந்தது. அதன் ஓரத்தில் வளர்ந்திருந்த செடி கொடிகள் உடைந்து போயிருக்க, சறுக்கின மண் தெரிந்தது.

வில்லியம்ஸ் வேகமான குரலில் சொன்னார். "இன்ஸ்பெக்டர்... இந்த ஏரியாவில் இதை 'ஆள் விழுங்கி கிணறு'ன்னு சொல்லுவாங்க. அந்த டிரைவர் இதுலதான் விழுந்துட்டான் போலிருக்கு..."

பால்ராஜ் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தார்.

உள்ளே - பார்வை எட்டின வரைக்கும், கும்மென்ற இருட்டு மட்டுமே தெரிந்தது. கிணற்றின் பக்கவாட்டு சுவர்களிலிருந்து, வண்டுகள் 'ரொய்ங்' என்று கோஷ்டியாய் 'ஹம்' பண்ணிக் கொண்டிருந்தது. பால்ராஜ் கூப்பிட்டார்.

"மிஸ்டர் வில்லியம்ஸ்..."

"சார்..."

"நான் இங்கேயே நின்னுட்டிருக்கேன், நீங்க செக்போஸ்டுக்குப் போய் பக்கத்திலிருக்கிற ஃபயர் சர்வீசுக்கும் ஆம்புலன்சுக்கும் போன் பண்ணுங்க. நான் வந்த ஜீப் செக்போஸ்ட்டுக்கு கொஞ்சம் தள்ளி நின்னுட்டிருக்கு. அங்கேயும் தகவல் கொடுத்துடுங்க."

வில்லியம்ஸ் தலையாட்டிக்கொண்டே செக்போஸ்ட் இருந்த திசையை நோக்கி ஓடினார். இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அந்த இருட்டில் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு நின்றார்.



# 5

செக்போஸ்ட்டுக்குள் நுழைந்தார் வில்லியம்ஸ். அவருக்குப் பின்னாலேயே ஓடி வந்தாள் அற்புதா.

"என்ன சார் ஆச்சு? ஆளை அமுக்கிட்டீங்களா?"

"இல்லேம்மா. அந்த டிரைவர் கிணத்துல விழுந்துட்டான்" டெலிபோன் ரிசீவரை கையில் எடுத்துக்கொண்டே சொன்னார் வில்லியம்ஸ்.

"இன்ஸ்பெக்டர்..?"

"அவர் அந்த கிணத்துக்குப் பக்கத்திலே நின்னுட்டிருக்கார். ஃபயர் சர்வீசுக்கும், ஆம்புலன்சுக்கும் போன் பண்ணத்தான் நான் வந்தேன். இன்ஸ்பெக்டர் வந்த ஜீப் எந்த இடத்துல நின்னுட்டிருக்கும்மா?"

"இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தள்ளி."

"உன் கூட எங்க செக்போஸ்ட் ஆள் ஒருத்தனை அனுப்பி வைக்கறேன். நீ போய் கான்ஸ்டபிள்களைக் கூட்டிக்கிட்டு வந்துடறியம்மா?"

"சரி சார்."

வில்லியம்ஸ் வாசலைப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

"நாகராஜ்..."

"சார்..." தலைக்கு மப்ளர் சுற்றிய ஆசாமி கையில் டார்ச்லைட்டோடு ஓடி வந்தான். உயரமாய் - முகம் எலும்பு தட்டிப் போய் தெரிந்தான்.

"நாகராஜ்! அந்த பொண்ணு கூட போய் ஜீப்பில கான்ஸ்டபிள்களைக் கூட்டிகிட்டு வந்துடு. போயிட்டு சீக்கிரமா வரணும்."

"சார்... வெளியே நாலைஞ்சு லாரி காத்திட்டிருக்கு. குண்டடிபட்ட ஆளை என்ன பண்றதுன்னு தெரியலை. ரோட்டோரமாவே எடுத்துப் போட்டிருக்கேன்..."

சில விநாடி நேரம் யோசித்த வில்லியம்ஸ் சொன்னார். "எந்த லாரியையும் செக்போஸ்ட்ல நிறுத்தாதே. போய்கிட்டே இருக்கச் சொல்லு. ஃபயர்சர்வீஸ் ஆட்களும், ஆம்புலன்சும் வந்து

போன பிறகு பார்த்துக்குவோம். முதல்ல நீ போய் கான்ஸ்டபிள்களைக் கூட்டிட்டு வா.''

''எஸ் சார்.''

அந்த நாகராஜ் அற்புதாவோடு வெளியே வர - வில்லியம்ஸ் ஆம்புலன்சுக்கும் ஃபயர்சர்வீசுக்கும் போன் செய்து விஷயத்தைச் சொல்லிவிட்டு காத்திருந்தார்.

குண்டடிபட்டு செத்துப்போன அந்த தோல் பை ஆசாமியின் பிணம் செக்ஸ்போஸ்ட் வாசலில் போர்த்தப்பட்டு தெரிய, வரும் லாரிகளை செக்போஸ்ட் சென்ட்ரி ஆள் விரட்டிக் கொண்டிருந்தான். ''லாரியை நிறுத்தாதே. அப்படியே ஓட்டிகிட்டு போயிடு.''

சரியாய் இருபது நிமிடம்!

ஃபயர் சர்வீஸ் வேனும், ஆம்புலன்ஸ் வேனும் வீ... வீ... வீய்ய்ய்ங்க்' என்னும் சைரன் சத்தங்களோடு வந்து சேர்ந்தது. அதற்கு முன்பே அற்புதா போலீஸ் ஜீப்பில் கான்ஸ்டபிள்களோடு வந்து சேர்ந்திருந்தாள்.

''எந்த இடத்துல சார் அந்தக் கிணறு இருக்கு?'' தீயணைப்பு படை அதிகாரி வில்லியம்ஸிடம் கேட்டார்.

''வாங்க அந்த இடத்துக்குப் போகலாம்.''

வில்லியம்ஸ் எல்லோரையும் கூட்டிக்கொண்டு, அந்த கிணற்றை நோக்கி நடந்தார். தீயணைப்பு வீரர்கள் பிரகாசமான டார்ச் வெளிச்ச வட்டங்களோடும், கயிற்றுச் சுருள்களோடும் தொடர்ந்தார்கள். தீயணைப்பு அதிகாரி வில்லியம்ஸிடம் பேசிக்கொண்டே வந்தார்.

''ஆள் கிணற்றில் விழுந்து எவ்வளவு நேரமாகியிருக்கும்?''

''அரை மணி நேரம்.''

''விழுந்த ஆள் வயசானவனா?''

''நடுத்தர வயசு, ஆனால் உடம்பு திடகாத்திரம்.''

''ரோட்டோரமா செத்துக்கிடக்கிற ஆள் யாரு?''

''அவனும் லாரியில வந்தவன்தான். போலீஸ் கையில மாட்டினால், அவன் எங்கே உண்மையைச் சொல்லிடுவானோங்கிற பயத்துல அவனைச் சுட்டுட்டு டிரைவர் ஓடி வந்து கிணத்துல விழுந்திருக்கான்.''

இருட்டில் பத்து நிமிட நேரம் நடந்து-



கிணற்றை நெருங்கினார்கள்.

ஆச்சரியப்பட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜை அங்கே காணோம்.

வில்லியம்ஸ் சுற்றும் முற்றும் பார்த்தார். கிணற்றை வலம் வந்து குரல் கொடுத்தார்.

''இன்ஸ்பெக்டர் சார்...''

பதிலுக்கு -

மவுனம்.

''எங்கே நின்னுட்டிருந்தார்?'' அற்புதா கேட்டான்.

''இந்தக் கிணற்றுக்குப் பக்கத்துலதான்.''

''இங்கே நின்னுட்டிருந்தவர், எங்கே போயிருப்பார்?''

தீயணைப்பு வீரர்கள் டார்ச் வெளிச்சக் கொத்துகளை அப்படியும் இப்படியுமாய் வீசி இருட்டை அழித்துப் பார்த்தார்கள். கற்றாழைச் செடிகளும், பார்த்தீனியம் செடிகளும் வெளிச்சத்தில் பட்டு மறைந்தன. எல்லோரும் நகர்ந்து நகர்ந்து தேடினார்கள்.

நிசப்தத்தில் நிமிடங்கள் கரைய - கிணற்றின் வலது பக்க ஓரமாய் நடந்து போன அற்புதா சட்டென்று - அதிர்ச்சியில் உறைந்துபோனாள். கையிலிருந்த டார்ச் நடுங்கியது.

அந்த கருவேல முட்செடியின் மேல் போலீஸ் தொப்பி தெரிய - அதற்குப் பக்கத்தில் பால்ராஜ் கால்களையும் கைகளையும் எக்ஸ் வடிவத்தில் பரப்பிக் கொண்டு - ரத்தமாய் செத்துக் கிடந்தார்.

பாதி முகம் நசுக்கப்பட்டிருந்தது.

பக்கத்தில் நசுக்க உபயோகமான - அந்த பத்துகிலோ கருங்கல் ரத்தத்தில் குளித்திருந்தது. அற்புதாவின் தொண்டையிலிருந்து அவளுடைய அனுமதியில்லாமலேயே - ஒரு அலற விறிடல் புறப்பட்டு - கிணற்றருகே நின்றிருந்தவர்களை திடும்மென பார்க்கச் செய்தது.

## 6

மறு நாள் காலை பத்து மணி.

டி. எஸ். பி. பரந்தாமன் கூட்டியிருந்த நிருபர்கள்

கூட்டத்தில் கேள்விகள் பிறிட்டுக் கொண்டு வந்தன. பிளாஷ் காமராக்கள் அடிக்கடி வெளிச்சமாய் சிரிக்க எல்லோருடைய கைகளிலும் நோட்புக்கும் பேனாவும் பரபரத்தது.

''இன்ஸ்பெக்டர் பால்ராஜைக் கொலை செய்தது யார்ன்னு கண்டுபிடிச்சிட்டீங்களா சார்?'' ஒரு புதிய நிருபர் கேட்டார்.

''இல்லை. சீக்கிரமாவே கண்டுபிடிச்சுடுவோம்.''

''ஏதாவது க்ளூ கிடைச்சிருக்கா சார்?''

''பால்ராஜோட முகத்தை நசுக்க உபயோகப்படுத்தின கல்லில் கைரேகை தடயம் கிடைச்சிருக்கு...''

''அது தெளிவா இல்லைன்னு அதுசம்பந்தப்பட்ட சோதனையில் சொல்லியிருக்காங்களே?''

''மைக்ரோ பிரிண்ட்ஸ் மூலமா அந்த ஃபிங்கர் பிரிண்ட்டை தெளிவா எடுத்துடலாம். இன்னும் ரெண்டு நாள்ல ரிப்போர்ட் வந்துடும்...''

''லாரியில் கடத்தப்பட்ட அபின், கஞ்சா, தங்க பிஸ்கெட்... இவற்றோட மொத்த மதிப்பு எவ்வளவு சார்?''

''சுமார் பத்து லட்சம்.''

''கிணத்துல விழுந்து செத்துப்போன லாரி டிரைவர் யாரு, எந்த ஊர்ன்னு தெரிஞ்சுதா சார்?''

''இன்னும் இல்லை. அந்த லாரியோட ஓனர் முத்துசாமியை உளுந்தூர் பேட்டையில வெச்சு கைது பண்ணிக் கொண்டு வந்தோம். அவரை விசாரிச்ச அளவில் அவருக்கும் நடந்த கடத்தலுக்கும் சம்பந்தமில்லைன்னு தெரியுது. லாரியை வாடகைக்கு விடறதுதான் அவர் வேலை. டிரைவர்கூட வாடகைக்கு எடுக்கிறவர்தான் ஏற்பாடு பண்ணிக்கணும். அதனால லாரியோட சொந்தக்காரருக்கே தெரியாமல் தான் இந்தக் கடத்தல் வேலை நடந்திருக்கு...''

''துப்பாக்கியாலே சுடப்பட்டு செத்துப்போன ராமபத்திரன் எந்த ஊர்ன்னு கண்டுபிடிச்சிட்டீங்களா சார்?''

''அவரைப் பத்தியும் சரியான தகவல் தெரியலை. ஒரேயொரு உண்மை மட்டும் தெளிவா தெரியுது. இந்த கடத்தலோட பின்னணியில ஒரு முக்கியமான புள்ளி இருக்கார். போலீஸ்ல



மாட்டிக்கிற மாதிரி நிலைமை உருவானால் மாட்டிக்கிற யாருமே உயிரோட இருக்கக் கூடாதுன்னு அவங்களுக்கு எச்சரிக்கை தரப்பட்டிருக்கு. அதுதான் போலீஸ் உண்மையைக் கண்டுபிடிச்சதுமே, லாரி டிரைவர்தன்னோட வந்த ராமபத்திரனை சுட்டுக் கொன்னுட்டு தப்பிக்க முயற்சி பண்ணியிருக்கான். அந்த முயற்சியும் பலிக்காமே போனதாலேதான் லாரிடிரைவர் கிணத்துல குதிச்சு தற்கொலை பண்ணிகிட்டான்...''

''கடத்தல் பொருள்களோட அந்த லாரியில வந்தது இரண்டு பேர்ன்னு சொன்னீங்க. அந்த இரண்டு பேருமே இறந்துட்டாங்க. அவங்க இறந்த பின்னாடிதான் இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கொலை செய்யப்பட்டிருக்கார். அப்படியானால் அந்த கள்ளக் கடத்தலில் சம்பந்தப்பட்ட இன்னொரு நபர் அந்த இடத்தில் இருந்திருக்கணும்... இல்லையா சார்?''

''ஆமா.''

''அந்த நபர் யார்?''

''அந்த நபர் ஏற்கெனவே அந்த இடத்தில் இருந்திருக்கணும். செக்போஸ்ட்ல ஏதாவது பிராப்ளம் வந்தா அதை சமாளிக்கிறதுக்காக அங்கே வந்திருக்கலாம். மறைவா நின்னு காத்துக் கொண்டிருந்திருக்கலாம். லாரி டிரைவரை துரத்திக் கொண்டு - செக்போஸ்ட் ஆபீசர் வில்லியம்ஸும் இன்ஸ்பெக்டர் பால்ராஜும் ஓடினபோது - அந்த ஆசாமி அவர்களைப் பின்தொடர்ந்திருக்கலாம். லாரி டிரைவர் கிணற்றில் விழுந்து இறந்ததும், ஆத்திரமான நபர் தனியாய் இருந்த பால்ராஜை கல்லால் தாக்கி கொலை செய்திருக்கலாம். அந்த மூன்றாவது நபர் யார் என்கிறதை இன்னும் ஒரு வாரத்துல கண்டுபிடிச்சுடுவோம்.''

''இந்த கள்ளக் கடத்தல் விஷயத்தை போலீசுக்கு தெரியப்படுத்தின பிரஸ் ரிப்போர்ட்டர் அற்புதாவுக்கு ரிவார்ட் கிடைக்குமா?''

''கண்டிப்பாய். ஒரு பெண் பத்திரிகை நிருபர், இவ்வளவு துணிச்சலாய் இருப்பது ஒரு ஆச்சரியமான விஷயம். கூடிய சீக்கிரமே மிஸ் அற்புதாவுக்கு, போலீஸ் - பொது மக்களின்

சார்பாக, ஒரு பாராட்டு விழா எடுக்க உள்ளோம்.''

நிருபர்கள் எல்லோரும் கைதட்டிக் கொண்டே பின் வரிசையில் உட்கார்ந்திருந்த அற்புதாவைத் திரும்பிப் பார்த்தார்கள்.

அற்புதா எழுந்து நின்றாள். முகத்தில் ஒருவித சோகம் தெரிந்தது. டி. எஸ். பியைப் பார்த்து, ''சார்... ஒரு வேண்டுகோள்'' என்றாள்.

''எஸ்...''

''எனக்கு எந்தவிதமான பரிசோ, பாராட்டு விழாவோ வேண்டாம் சார்...''

''ஏன் அப்படி சொல்றீங்க..?''

''இன்ஸ்பெக்டர் பால்ராஜ் கொலையான அதிர்ச்சி என் மனசுல இன்னும் அப்படியே உறைஞ்சு போயிருக்கு சார்... அவர் உயிரோட இருந்திருந்தால், எனக்கு நீங்க தர்ற பரிசும் பாராட்டும் சந்தோஷமாயிருக்கும். இப்போ, அதை ஏற்றுக் கொள்கிற மன நிலையில் நான் இல்லே.''

டி.எஸ்.பி. புன்னகைத்தார்.

''மரணத்தை எதிர்பார்த்துதானே போலீஸ்காரன் காக்கி டிரஸ்சை மாட்டுகிறான்...! உங்களை மாதிரி போலீசுக்கு உதவி பண்றவங்க ரொம்பவும் கம்மி... உங்களுக்கு பரிசு தர்றதை நாங்க பெருமையா நினைக்கிறோம்...''

''இன்ஸ்பெக்டர் பால்ராஜைக் கொலை செய்தது யார் என்கிறதை நீங்க கண்டுபிடிச்சாலே போதும்சார்... அதுவே எனக்கு ஒரு பெரிய பரிசு கிடைச்ச மாதிரி...''

''நிச்சயம் அதைச் செய்வோம்...''

''கொலையாளியைப் பிடிக்க நீங்க என்ன முயற்சி எடுக்கப்போறீங்க சார்?'' அற்புதா கவலையான குரலில் கேட்டாள்.

''இன்றைக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு பெரிய போலீஸ் அதிகாரிகள் கூட்டம் ஒன்றை நடத்தப் போகிறோம். அந்த கூட்டத்தில் சில ரகசியமான நடவடிக்கைகளை எடுக்கப் போகிறோம்... அதைப்பத்தி இப்போ எதுவும் சொல்லமுடியாத நிலைமை... நாளைக்குக் காலையில பத்து மணிக்கு மறுபடியும் நிருபர் கூட்டத்தைக் கூட்டி, அதில் சொல்றேன்...''

டி.எஸ்.பி. எழுந்தார்.

நிருபர்கள் கலைந்தார்கள்.



அற்புதா எல்லோருக்கும் முதல் ஆளாய் - அறையை விட்டு வெளியே வந்து - வராந்தாவில் நடந்தாள். சூரியகாந்திப் பூக்கள் சிதறிய - கருநீல சல்வார் கம்மீசில் அன்றையதினம் இருந்தாள். தோளில் டம்பப் பை வேகமாய் ஆடியது.

கிரைம் பகுதி அலுவலகத்தை விட்டு வெளியே வந்து ரோட்டோரத்தில் தெரிந்த அந்த டெலிபோன் பூத்துக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள். டம்பப் பையில் இருந்த ஒரு ரூபா நாணயத்தைப் பொறுக்கிக்கொண்டு - டயலில் எண்களைச் சுழற்றினாள். மறுமுனையில் 'அலோ' கிடைத்ததும் ரூபாயைப் 'போட்டாள். லைன் உயிருக்கு வந்தது.

''அலோ... ஜெயகங்கா இண்டஸ்ட்ரியல்ஸ்...?''

''எஸ்...''

''அங்கே மிஸ்டர் சத்யேஷ் இருக்காரா?''

''அக்கவுண்ட்டண்ட் சத்யேஷ்தானே?''

''ஆமா...''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் ஒருமணி நேர, முன் அனுமதியில் வெளியே போனார்.''

''என்ன விஷயமா வெளியே போனார்ன்னு சொல்ல முடியுமா சார்..?''

''சாரி... தெரியலை...''

மறுமுனையில் ரிசீவர் வைக்கப்பட - தானும் ரிசீவரை வைத்துவிட்டு - 'கொஞ்சம் கூட பொறுப்பில்லாத சத்யேஷ்' என்று திட்டிக்கொண்டே டெலிபோன் கண்ணாடிக் கூண்டைத் திறந்து கொண்டு வெளிப்பட்ட அற்புதா, 'அட' என்று ஆச்சரியத்துப் போனாள்.

வெளியே...

மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிக்கொண்டு அந்த சத்யேஷ் உதட்டில் தடவின புன்னகையோடு நின்றிருந்தான். மாநிறத்துக்கும் ஒருபடி தூக்கலான நிறம். காற்றில் அலையும் அடர்த்தியான தலைக்கேசம். கண்களைக் கவ்வியிருந்த தேன் நிற கூலிங்கிளாஸ். வெள்ளை பின்புறத்தில் மெலிதான நீலக்கோடுகள் போட்ட சட்டையிலும் - கறுப்புநிற பேண்ட்டிலும் - பார்க்கிறவர்களின் கண்களை நிரப்பினான்.

''அலோ குட்மார்னிங் மிஸ் வீராங்கனை...'' - சத்யேஷ் சிரித்துக்கொண்டே அவளை

நெருங்கினான்.

"என்ன... பேச்சு ஒரு மாதிரியா இருக்கு..."

"ஆமா... இன்னைக்கு காலையில வந்த தினத்தந்தி பேப்பரை எடுத்துப் பாரு... 'பத்து லட்ச ரூபாய் மதிப்புள்ள கடத்தல் பொருள்களை மீட்டுத்தந்த வீராங்கனை அற்புதா' அப்படீன்னு செய்தி போட்டிருக்காங்க... நீ பார்க்கலையா..?"

"நான் இன்னும் பார்க்கலை..."

"ஒரே நாள்ல தமிழ்நாடு பூராவும் பிரபலமாயிட்டே அற்புதா ஆமா... போன் யாருக்கு பண்ணினே..?"

"உங்களுக்குத்தான்... இன்னைக்கு கல்யாணப் பத்திரிகை கொடுக்க வேளச்சேரி வரைக்கும் போயிட்டு வரலாம்ன்னு நேத்தைக்கு காலையிலேயே சொல்லியிருந்தீங்களே... போக வேண்டாமா..? அதுக்காகத் தான் போன் பண்ணினேன்..."

"என்னோட படிப்பாளி நண்பன் ஒருத்தன் அந்த வேளச்சேரியில இருக்கான். பொண்ணும் மாப்பிள்ளையும் ஜோடியா வந்து கல்யாணப் பத்திரிகை கொடுத்தா தான் கல்யாணத்துக்கு வருவேன்னு கண்டிப்பா சொல்லிட்டான்... வர்றதுல உனக்கொண்ணும் சிரமமில்லையே அற்புதா..?"

"நோ... நோ... இதிலென்ன சிரமம்..? இன்னையிலிருந்து அடுத்த பத்தாவது நாள் ஹேமமாலினி கல்யாண மண்டபத்துல வைத்து என் கழுத்துல தாலி கட்டப் போறீங்க... உங்க பேச்சைக் கேட்காமல் இருக்க முடியுமா? வேளச்சேரி என்ன... ஐரோப்பாவுக்கு கூப்பிட்டாலும் வர்றேன்..."

"எதுல போகலாம்..? பஸ்..?"

"கஞ்ச மகாப் பிரபுவே! காசு வேணும்னாலும் நான் கொடுத்துடறேன்... ஒரு ஆட்டோவைக் கூப்பிடுங்க..."

"அப்படின்னா சரி..."

ரோட்டுக்கு வந்து - காலியாகப் போன ஆட்டோ ஒன்றை நிறுத்தி இருவரும் ஏறிக்கொண்டார்கள். சந்தோஷ் போகுமிடத்தை சொல்ல - ஆட்டோ வேகம் எடுத்தது.



"டி.எஸ்.பி. கூட்டத்தில் என்ன சொன்னார்..?"

"ரொம்பவும் திணறுகிறார்..."

"பாவம் அந்த இன்ஸ்பெக்டர் பால்ராஜ்..."

"நான் போய் தகவல் கொடுத்ததும் ரொம்பவும் தைரியமா நடவடிக்கை எடுத்தார்... நல்ல தைரியசாலி. அவரை எப்படி கொலை செய்தாங்கன்னு எனக்கு ஆச்சரியமாயிருக்கு..."

ஆட்டோ டிரைவர் குறுக்கிட்டார். "போலீசுனால கொலையாளியைக் கண்டுபிடிக்க முடியும்னு நீங்க நினைக்கறீங்களாம்மா..?"

ஆட்டோ டிரைவரை ஏறிட்டாள் அற்புதா. அவருடைய குறுக்கீட்டுப் பேச்சுக்காகக் கோபப்படாமல் சொன்னாள்.

"கண்டிப்பாக கண்டுபிடிச்சுடுவாங்க..."

"எனக்கென்னமோ நம்பிக்கையில்லேம்மா... பேப்பர் செய்தியை நானும் படிச்சேன். உங்க போட்டோவையும் பார்த்தேன்... இந்த கள்ளக் கடத்தலுக்கும், இன்ஸ்பெக்டரோட கொலைக்கும் பின்னாடி ஏதோ ஒரு அரசியல் கட்சி இருக்கு... நீங்க வேணுமின்னா பாருங்க... இந்த ரெண்டு கேசும் கொஞ்ச நாள் பேப்பர்ல அடிபட்டு - அப்புறம் காணாம போயிடும்."

ஆட்டோ வேளச்சேரி போகும் ரோட்டில் திரும்பியதும், போக்குவரத்து குறைந்த ரோட்டில் விர்ரென்று பறந்தது. ஒரு ஐந்துநிமிட நேர மவுனத்திற்கு பிறகு ஆட்டோ டிரைவர் மெல்லிய குரலில் கூப்பிட்டார்.

"அம்மா..."

"என்ன டிரைவர்?"

"கொஞ்சம் பின்னாடி திரும்பிப் பாருங்கம்மா... நம்ம ஆட்டோவை ஃபாலோ பண்ணிட்டு வர்றாங்க..."

சந்தோஷும் அற்புதாவும் திரும்பிப் பார்த்தார்கள்.

ஒரு வெள்ளை பியட் கார் தெரிந்தது.

"அந்த பியட் காரா, டிரைவர்...?"

"ஆமாம்மா..."

"அது ரொம்ப நேரமா பின்னாடி வருதா..?"

"நாம புறப்பட்ட இடத்திலிருந்தே தொடர்ந்து வருது..."

''நம்ம ஆட்டோவோட வேகத்தைக் குறைச்சு ஓட்டுங்க பார்க்கலாம்.'' அற்புதா சொன்னதும் ஆட்டோவின் வேகத்தைக் குறைத்தார், டிரைவர்.

பின்னால் வந்த அந்த பியட் கார் வேகத்தை கொஞ்சமும் குறைக்காமல் ஆட்டோவை விர்ரென்று கடந்து போனது.

அற்புதா கார் ஓட்டிச் சென்றவனைப் பார்க்க முயன்று தோற்றாள். பின்பக்க சீட் வெறிச்சோடி யிருந்தது.

''டிரைவர்...''

''என்னம்மா...''

''நீங்க இப்போ அந்தக் காரைத் தொடருங்க...'' சத்யேஷ் குறுக்கிட்டான்.

''வேண்டாம்... அற்புதா... கார்ல போறவன் எவனாகவோ இருந்துட்டுப் போகட்டும்... அவன் ஏதேச்சையாக நம்ம ஆட்டோ பின்னாடி வந்திருக்கலாம்...''

''நோ... சத்யேஷ்... அவன் திட்டமிட்டு தான் வந்திருக்கான்.. அவனோட காரை மதிக்க அவன் யார்ன்னு... டிரைவர்... ஆட்டோவை பறக்கவிடுங்க... அந்த பியட் காருக்கு பின்னாடியே போங்க...''

ஆட்டோ பீறிட்டது.

அரை கிலோ மீட்டர் தொலைவில் அந்த வெள்ளை பியட் வெயிலில் பளபளத்துக் கொண்டே போய்க் கொண்டிருந்தது.

அதிகபட்ச வேகத்தில் ஆட்டோவின் உடம்பு அதிர்ந்து - ரோட்டின் வளைவுகளில் டயர்களில் சூடு பறந்தது.

அற்புதா தொலைவில் போய்க் கொண்டிருந்த அந்த பியட்டையே பார்த்தாள்.

''வேகம் போதாது டிரைவர்... இன்னும் பறக்கணும்...''

''இந்த வேகத்துக்கு மேலே போனால் வண்டி தாங்காதம்மா... வண்டியில ஏகப்பட்ட ரிப்பேர் இருக்கு... ஸ்பீடாமீட்டர் முள் அறுபதுக்கு மேலே போனால் வம்பு...''

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது... நீங்க வேகத்தை எழுப்புங்க... அந்த பியட் வண்டியை மதிச்சு அதுல யார் இருக்காங்கன்னு பார்த்தே ஆகணும்...''



அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஆட்டோ 'கர்ரக்...கர்ரக்' என்ற சத்தத்தோடு வேகம் குறைந்தது. ரோட் ஓரமாய் ஒரு மரத்தைத் தேடி ஒதுங்கி நின்றது.

''என்ன டிரைவர்..?''

''நான்தான் சொன்னேனேம்மா... இந்த வேகமெல்லாம் நம்ம வண்டிக்கு ஆகாது... கேட்ட சத்தத்தை வெச்சுப் பார்த்தால் 'வீல் ட்ரம்' போயிருக்கணும்னு நினைக்கிறேன்... அதை கழட்டிட்டு புதுசா ஒண்ணை மாட்டறதுக்கு எப்படியும் அரை மணி நேரமாயிடும்...''

''போச்''

அற்புதா தலையில் கை வைத்துக்கொண்டு ஆட்டோவின் பின் சீட்டுக்கு சோர்வாய் சாய்ந்தாள். சத்யேஷ் அவளைப் புன்னகையோடு பார்த்தான்.

''அந்த 'பியட் கார்' காரன் அதுக்குள்ளே... முப்பது கிலோமீட்டர் தூரம் போயிருப்பான்.''

''கார் நெம்பரை நோட் பண்ணீங்களா சத்யேஷ்...?''

''பார்த்தேன். சரியா தெரியலை...''

''டிரைவர்... நீங்க..?''

''நானும் பார்க்கலைம்மா...''

''அற்புதா..''

''என்னங்க சத்யேஷ்..?''

''எனக்கென்னமோ அந்த பியட் கார் நாம வந்த ஆட்டோவை பின்தொடர்ந்த மாதிரி எனக்குத் தெரியலை...''

''எப்படி சொல்றீங்க..?''

''பின்தொடர்ந்திருந்தால் நம்ம ஆட்டோவோட வேகம் குறைஞ்சதுமே அவனும் பியட்டோட வேகத்தைக் குறைச்சிருப்பான்... ஆனால் வேகத்தைக் குறைக்காமே நம்ம ஆட்டோவைக் கடந்து போயிட்டானே..?''

''அவன் உஷாராகியிருப்பான்...''

டிரைவர் கீழே இறங்கிப் போய், பார்த்துவிட்டு வந்து சொன்னார்.

''நான் நினைச்ச மாதிரியே வீல் ட்ரம்தான் போயிருக்கம்மா... கழட்டி அரைமணி நேரத்துக்குள்ளே மாட்டிடுவேன்...''

''சீக்கிரம்'' - என்றாள் அற்புதா.

# 7

இரவு பத்து மணி.

ஆட்டோவில் இருந்து இறங்கி, மீட்டர் பார்த்து சார்ஜ் கொடுத்து அனுப்பி விட்டு வீட்டு வாசற்படி ஏறி காலிங்பெல்லில் தலைமேல் கையை வைத்தாள் அற்புதா.

அது ஊரையே கூப்பிடுகிற மாதிரி அலறியது. தொடர்ந்து கதவுக்குப் பின்னாடி பெருமூச்சுகளோடு யாரோ நடந்து வந்தார்கள்.

''யாரது..?'' தளர்வான பெண் குரல்.

''நான் தான் அத்தே...''

''ப்ளக்'' கதவின் தாழ்ப்பாள் அவசரமாய் விலகியது. திறந்த கதவுக்குப் பின்னால் அறுபத்தைந்து வயதான கோபமான முகம் தெரிந்தது.

''தினமும் உன்கூட பெரிய ரோதனையா போச்சு...!''

''ஏன் அத்தே..?''

''அடுத்த வாரம் கல்யாணம் பண்ணிக்கப்போகிற பொண்ணு... இப்படித்தான் லேட்டா வர்றதா..? பாக்கிறவங்க என்ன நினைப்பாங்க..?''

''ஒன்னும் நினைக்கமாட்டாங்க அத்தே... நான் என்ன கம்பா ஊரைச்சுத்தவா போனேன்..? என்னோட தோழிகள், சொந்தக்காரப் பெரியவங்க... இவங்களுக்கெல்லாம் கல்யாண அழைப்பிதழைத் தரவேண்டாமா..?''

அற்புதா சொல்லிக் கொண்டே உள்ளே போக - அத்தை கதவைச் சாத்தினாள். ''மத்தியானம் ஏண்டி - சாப்பாட்டுக்கு வரலை..?''

''வேளச்சேரி போயிருந்தேன்..''

''எதுக்கு..?''

''அவரோட நண்பர்களுக்கு எல்லாம் அழைப்பிதழ் தர்றதுக்கு...''

''சரி இப்பவாவது சாப்பிடறியா..?''

''வேண்டாம்... நானும் அவரும்... ஓட்டல்லேயே சாப்பிட்டோம்...'' தோளில் ஊசலாடிக் கொண்டிருந்த டம்பப்பையை சுவரின்



ஆணியில் மாட்டிவிட்டு - அணிந்திருந்த சல்வார் கம்மீசை உருவிக் கொடியில் போட்டுவிட்டு வேறு சேலைக்கு அத்தையின் கண் எதிரிலேயே மாறினாள்.

''நீ சாப்பிட்டியா, அத்தை..?''

''ஆச்சு...''

''எனக்கு ஏதாவது போன் வந்ததா?''

''வந்தது... ஆசிரியர் பேசினாரு...''

''என்ன சொன்னார்...''

''நீ வீட்டுக்கு வந்ததுமே போன் பண்ணச் சொன்னார்...''

''பண்ணிட்டா போகுது...'' சொல்லிக்கொண்டே - அந்த சின்ன அறையின் ஓரமாய் இருந்த டெலிபோனை நோக்கி நடந்தாள் அற்புதா. அத்தை தொடர்ந்தாள்.

''ஏண்டி... உன்னோட போட்டோ பேப்பர்ல வந்திருக்காமே... உண்மையா?''

''உனக்கு யார் சொன்னா...?''

''யார் சொல்லணும்... இந்த தெருவே பேசிக்குதே... போலீஸ்காரர்களுக்கு என்னவோ உதவி பண்ணினியாம்... பரிசு தரப் போறாங்களாம்...''

''ஆமா...''

''என்ன தருவாங்க..?''

''பத்து பவுன்ல இரட்டைவடச் சங்கிலி...''

''அம்மாடியோவ்... அப்படியெல்லாம் கொடுத்தா கவர்மெண்ட்டுக்கு கட்டுப்படியாகுமா..?'' கிழவி தன் பல்செட் வாயைத் திறந்து ஆச்சரியப் பட்டுக் கொண்டிருக்கும் போதே அற்புதா டெலிபோன் டயலில் ஆசிரியரின் எண்களைச் சுழற்றினாள்.

ஆசிரியர் கிடைத்தார்.

''நான் சிவசைலம் பேசறேன்...''

''வணக்கம் சார்... நான் அற்புதா...''

''என்னம்மா... காலையிலிருந்து கண்ணிலேயே படலை... டி.எஸ்.பி.யோட சந்திப்பு முடிஞ்சதும் போன் பண்ணுவேன்னு நினைச்சேன்... போனும் பண்ணலை... வீட்டுக்கு நானாகவே போன் பண்ணினேன்... அத்தையம்மாதான் பேசினாங்க... எங்கேம்மா போயிருந்தே..?''

''கல்யாண அழைப்பிதழ் தர்றதுக்காக நானும்

அவரும் போனோம்...''

''அம்மா அற்புதா... நான் ஒண்ணு சொன்னா, நீ கண்டிப்பா கேக்கணும்..''

''என்ன சார்..?''

''கொஞ்ச நாளைக்கு தனியா வெளியே எங்கேயும் போகாதேம்மா...''

''ஏன் சார்..?''

''காலையிலிருந்து நாலைஞ்சு மிரட்டல் கால் வந்தாச்சு... உன்னை உடனே வேலையை விட்டு நிறுத்தும்படியா முகம் தெரியாத அரசியல்வாதிகிட்டேயிருந்து ஒரு நிர்ப்பந்தம்...''

''இந்த மாதிரியான மிரட்டலெல்லாம் நமக்கு சகஜம்தான் சார்... நான் எதுக்காகவும் யார்க்காகவும் பயப்பட மாட்டேன்...''

''உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதாம்மா..? உன்கிட்ட இருக்கிற துணிச்சல்தானே எனக்குப் பிடித்தமான அம்சம்... அதுக்காகத்தானே உனக்கு வேலையே போட்டுக்கொடுத்தேன். ஆனால் நேற்று நடந்த சம்பவம் ஒரு பெரிய இடத்து விவகாரம்ன்னு நான் நினைக்கிறேன்... எதுக்கும் நீ கொஞ்சம் எச்சரிக்கையா இரும்மா...''

அற்புதா சிரித்தாள்.

''என்னை யாரும் ஒண்ணும் பண்ணிட முடியாது சார்... நீங்க தைரியமாயிருங்க...''

''சரி... நாளைக்குக் காலையிலே பத்து மணி சுமாருக்கு ஆபீஸ் வந்துட்டு போம்மா... நீ எழுதிக் கொடுத்த கடத்தல் கேஸ் கட்டுரையில இன்னும் சில காரமான விஷயங்களை சேர்க்கணும்...''

''சேர்த்துடலாம் சார்...''

''போனை வெச்சுடட்டுமா..?''

''சரி... சார்...''

இரண்டு பக்கங்களிலும் ரிசீவர்களை சாத்திக் கொண்டார்கள். அற்புதா தன் படுக்கையறையை நோக்கி நகர்ந்த நிமிடம் அத்தைக் கிழவி கூப்பிட்டாள்.

''இந்தாடீ... ஒரு நிமிஷம் நில்லு...''

அற்புதா நின்றாள்.

''என்ன அத்தே..?''

''நேத்தைக்கும் இன்னைக்கும் ஊர் கண்ணுல நீ நிறைய பட்டிருக்கேடி... அப்படி கிழக்கு பார்த்து உட்காரு... மிளகாயும் உப்பும் கொண்டு



வர்றேன்...''

''அதெல்லாம் எதுக்கு அத்தே...''

''பேசாமே உட்காருடி...''

அத்தை சமையலறைக்குள் நுழைந்து கைப்பிடி உப்பும் மிளகாயுமாய் வெளியே வந்தாள். புன்னகைத்துக் கொண்டு நின்றிருந்த அற்புதாவின் தோள்பட்டையைப் பற்றி இழுத்து சுவரோரமாய் உட்கார வைத்தாள். சற்று எட்ட நின்று கொண்டு, ''நாய்க் கண்ணு... பேய்க் கண்ணு... மோசமா பார்த்த எல்லாக் கண்ணும்... மாரியம்மா உன்னாலே நாசமாகணும்...'' என்று சொல்லி அற்புதாவின் வாயருகே கொண்டு போய் ''துப்பு...துப்பு'' என்றாள்.

அற்புதா சிரித்துக் கொண்டே துப்பினாள். அத்தைக்காரி நெட்டி முறித்துவிட்டு - உப்பையும் மிளகாயையும் தெருவில் எறிவதற்காக - கதவைத் திறந்துகொண்டு வாசலில் இறங்கினாள். அற்புதா படுக்கையறைக்குள் நுழைந்து - ஃபேனை சுழலவிட்டுக் கட்டிலில் சாய்ந்தாள். கைநீட்டி சுவர் அலமாரியில் இருந்த - ஒரு ஆங்கில நாவலை எடுத்துக்கொண்டாள். நேற்றைக்கு முன்தினம் ராத்திரி படித்து வைத்திருந்த அடையாள மடிப்பைத் தேடி, அது கிடைத்ததும் படிக்க ஆரம்பித்தாள்.

இரண்டு பக்கங்களைப் படித்துவிட்டு - மூன்றாவது பக்கத்தைத் திருப்பும் போது தான் அற்புதாவுக்கு அந்த உணர்வு ஏற்பட்டது.

'திருஷ்டி கழித்து - வாசலில் உப்பையும் மிளகாயையும் எறியப்போன அத்தையை எங்கே இன்னமும் காணோம்...?'

'ஒருவேளை எறிந்துவிட்டு உள்ளே வந்துவிட்டாளோ?'

குரல் கொடுத்தாள்.

''அத்தே...''

''......''

கையிலிருந்த புத்தகத்தைக் கட்டிலில் எறிந்து விட்டு - படுக்கையறையில் இருந்து வெளியே வந்தாள். அந்த சின்ன அறை நிசப்தமாயிருந்தது.

''அத்தே...''

குரல் கொடுத்துக் கொண்டு வாசல் கதவை

நோக்கிப் போனவள் ஆச்சரியமானாள்.

கதவு உட்பக்கமாய் - அழுத்தமாய் தாளிடப்பட்டிருந்தது.

'அத்தை எப்போது உள்ளே வந்தாள்?'

'சமையலறைக்குள் இருப்பாளோ...?' யோசித்த அற்புதா வேக வேகமாய் நடந்து - சமையலறைக்குள் நுழைந்தவள், திக்கிட்டென்று சமையலறை வாசலிலேயே நின்றாள்.

வாயில் செவ்வகமாய் ஒரு பிளாஸ்திரி ஒட்டியிருக்க கையும் காலும் பிசகாய் கட்டப்பட்டு 'ட' மாதிரி கிடந்தாள் அத்தை.

"அத்தே..."

கண்களில் அதிர்ந்துபோய் - வேக வேகமாய் அவளை நெருங்கினாள் அற்புதா. மண்டியிட்டு உட்கார்ந்து பரபரவென்று கயிற்றின் கட்டுகளை அவிழ்க்க ஆரம்பித்தாள்.

"சாரி... அற்புதா..."

தன் முதுகுப் பக்கமாய் எழுந்த ஆண் குரலைக் கேட்டு விருட்டென்று திரும்பினாள்.

சமையலறை வாசலில் - நீளமான அங்கி தரித்து தலையில் கவிழ்ந்த தொப்பியோடு அவன் உயரமாய் நின்றிருந்தான். வலதுகை விரல்களில் துப்பாக்கி ஒன்று அரை வட்டமாய் ஆடிக்கொண்டிருந்தது.

அத்தையை விட்டுவிட்டு ஸ்லோமோஷனில் எழுந்தாள் அற்புதா. உலர்ந்துபோன உதடுகளில் குரல் சடுகுடு ஆடியது.

"யா... யார்... நீ...?"

"என்னைத் தெரியலையா அற்புதா...?"

அவன் சிரித்துக்கொண்டே தொப்பியைக் கழற்ற - அந்த முகம் பளீரென்று மனதில் உறைந்தது. 'இ... இவன் இ... இவர்...?'

செக்போஸ்ட் அதிகாரி வில்லியம்ஸ்.

## 8

செக்போஸ்ட் அதிகாரி வில்லியம்ஸ் மெல்லச் சிரித்தபடி அற்புதாவை நெருங்கினார். "என்ன அற்புதா... நான் இங்கே வருவேன்னு நீ



எதிர்பார்க்கலை... அப்படித்தானே...?"

"நீ... நீ... நீங்க...?"

"எதுக்காக வந்திருக்கேன்னு கேட்கறியா...? உனக்கு போலீஸ்ல ஏதோ பரிசு தரப்போறதா சொல்லிட்டிருக்காங்களாமே...? அவங்க உன்னோட தேச பக்தியைப் பாராட்டி பரிசு தர்றதுக்கு முன்னாடி - நான் தரணும்னு ஆசைப்பட்டேன்... அதான் வந்தேன்."

"எ... எ... என்ன சொல்றீங்க...?"

"அரசாங்க உத்தியோகத்துல நான் இருந்தாலும்... அரசாங்கத்துக்கு விசுவாசமா நடந்துகிட்டதேயில்லை... ஆனால் நீ அரசாங்க உத்தியோகத்துல இல்லேன்னாலும் அரசாங்கத்துக்கு விசுவாசமா நடந்துக்கிறே... அப்படி நடந்துக்கிறவங்களைக் கண்டா... என்னோட தலைவருக்கும் பிடிக்காது... எனக்கும் பிடிக்காது... ஆமா... இந்த பாட்டியம்மா யாரு...? உன்னோட அத்தையா...? உன் வீட்டுக்குள்ளே எப்படி நுழையலாம்னு யோசிச்சிட்டிருக்கும் போதே... பாட்டியம்மா உப்பும் மிளகாயும் எடுத்துகிட்டு வீதிக்கு வந்தாங்க... நான் உள்ளாற வந்துட்டேன்... பாட்டியம்மா பயத்துல ரொம்பவும் அரண்டு போயிட்டாங்க..."

அற்புதா வில்லியம்ஸையே முறைத்தாள். அவர் புன்னகைத்தார். "முறைச்சு பயன் இல்லை அற்புதா... போன்ல எதையாவது கேட்டால் நீ பாட்டுக்கு கேட்டுட்டு போகவேண்டியதுதானே..? உனக்கெதுக்கு அந்த வேலையெல்லாம்... அபினும், கஞ்சாவும், தங்கமும் இந்தியாவில் இன்னைக்கு நேத்தைக்கா கடத்துறாங்க...? பணம் இருக்கிறவங்களோட பாரம்பரிய தொழிலே அதுதானே..! அதையெல்லாம் ஒரு இன்ஸ்பெக்டராலே தடுக்க முடியுமா...?"

அற்புதாவின் குரல் நடுங்கியது.

"இன்ஸ்பெக்டர் பால்ராஜைக் கொன்னது..?"

"நான்தான்... இன்னும் கொஞ்ச நேரத்துல சாகப்போகிற உன்கிட்டே உண்மையைச் சொன்னால் நான் ஒண்ணும் குறைஞ்சுட மாட்டேன்... எந்த இன்ஸ்பெக்டராவது... அந்த அத்துவான இருட்டுல தனியா நிற்பானா...? அந்த இன்ஸ்பெக்டர் அசாத்திய துணிச்சலோடு

நின்றான். செக்போஸ்ட்டுக்குப் போற மாதிரி பாவ்லா காட்டிட்டு - மறுபடியும் இருட்டிலேயே வந்து ஆளை முடிச்சேன்... ஆள் செத்துட்டான்னு தெரிஞ்ச பிறகு செக்போஸ்ட்டுக்கு வந்து ஃபயர் சர்வீசுக்கும், ஆம்புலன்ஸ் வேனுக்கும் போன் பண்ணினேன்...''

''நீ... நீ... ராஸ்கல்...''

''நான் ராஸ்கல்தான்... இந்த ராஸ்கலுக்கு ஒரு பெரிய குடும்பம் இருக்கு... கல்யாணத்துக்கு தயாரா நிக்கிற நாலு பொண்ணு இருக்கு... அரசாங்கம் தர்ற சம்பளம் வயித்துப்பாட்டுக்கு போதும்... மத்த பிரச்சினைகளை சமாளிக்க பணம் வேண்டாமா... செக்போஸ்ட்ல ஒரு லாரியைக் கண்டுக்காமே விட்டால் மடியில் ஐயாயிரம் வந்து விழும்... நேத்தைக்கு வந்த திருமுருகன் லாரியை நான் கண்டுக்காமே விட்டிருந்தேன்னா என்னோட கூலி ஐம்பதாயிரம் ரூபாய். எனக்குக் கிடைக்கவேண்டிய அந்த ஐம்பதாயிரம் ரூபாய், உன்னோட கெட்டிக்காரத்தனத்தாலே எனக்குக் கிடைக்கலை... என்னோட தலைவருக்கு பணம் போனதுகூட பொருட்டில்லை... இரண்டு ஆட்கள் செத்துப் போனதுதான் பெரிய விஷயம்னு சொல்றார்.... இன்னைக்கு காலையில்தான் திடீர்னு அவர் முடிவெடுத்தார். என்கிட்டே இந்த துப்பாக்கியைக் கொடுத்து - ''இன்ஸ்பெக்டர் பால்ராஜுக்கு ஆத்ம சாந்தியைத் தேடிக்கொடுத்த மாதிரி... அந்த பொண்ணு அற்புதாவுக்கும் ஆத்ம சாந்தியைக் கொடுத்துட்டு வா' என்று சொன்னார்... அதான் வந்தேன்...''

அற்புதா மெல்ல பின்னுக்கு நகர்ந்தாள்.

வில்லியம்ஸ் கையிலிருந்த துப்பாக்கியை உயர்த்தினார். அதன் கறுப்பு வாய் மேலும் கீழும் அசைந்தது.

''இது சைலன்சர் துப்பாக்கி... வெடிச்சாலும் சத்தம் வெளியே போகாது. நான் உள்ளே வந்ததும் யாருக்கும் தெரியாது.''

கீழே உருண்டு கிடந்த அத்தை உடம்பைத் திமிறிக் கொண்டு - தன் பலவீனமான கண்களால் மிரண்டாள்.

வில்லியம்ஸ் சிரித்தார்.

''பாட்டியம்மா உனக்கு திருஷ்டி கழிச்ச நேரம்



சரியில்லை அற்புதா... திருஷ்டி கழிச்சா ஆயுசு கூடும்னு சொல்லுவாங்க... ஆனால் நீ திருஷ்டி கழிச்ச அன்னைக்கே சாகப் போறே..! ஆமா அற்புதா... உனக்கு அடுத்த வாரத்துல கல்யாணம்னு கேள்விப்பட்டேன்... உண்மையா..?''

அவர் பேசிக்கொண்டிருக்க பேசிக்கொண்டிருக்க - மெல்ல மெல்ல பின்னுக்கு நோக்கி நகர்ந்த அற்புதா, வில்லியம்ஸ் எதிர்பார்க்காத ஒரு விநாடியில்-

சமையலறைத் திட்டின் மேலிருந்த

அந்த எவர்சில்வர் தட்டை எடுத்து-

குபீரென்று வீசினாள்.

தட்டு அவளுக்கு விசுவாசமாய் - விஷ்ணு சக்கரமாய் சுழன்று - வில்லியம்ஸின் கழுத்துப் பிரதேசத்தை நெக்கென்று தாக்க, அது உற்பத்தி செய்த வலியைக் கண்மூடி மென்று ஜீரணம் செய்வதற்குள்-

அற்புதா சமையலறையில் இருந்து வெளியே தாவி, ஹாலுக்கு வந்தாள்.

எவர்சில்வர் தட்டு 'கணகண' வென்று தரையில் விழுந்து அடங்கிக் கொண்டிருக்க - வில்லியம்ஸும் சுதாரித்து அற்புதாவின் பின்னால் பாய்ந்தார்.

அற்புதா ஒரு நேர்க்கோடு மாதிரி - தன் படுக்கையறைக்குள் பாய்ந்து, சட்டென்று கதவின் பின்பக்கம் ஒண்டிக்கொண்டு - அறைக்குள் அதே வேகத்தில் பாய்ந்த வில்லியம்ஸின் கால்களுக்கு நேரே தன் வலதுகாலை நீட்டினாள்.

அடுத்த விநாடி -

வில்லியம்ஸ் தரையில் நீச்சலடித்து உருண்டார். பிஸ்டல் எகிறி விழுந்தது.

அவர் உருண்டு எழுவதற்குள் பிஸ்டலை பொறுக்கிக் கொண்ட அற்புதா, பளிச்சென்று வெளியேறி - படுக்கையறைக் கதவை இழுத்து சாத்தி, வெளிப்பக்கமாய் தாழிட்டாள். வில்லியம்ஸ் கதவின் மேல் வந்து விழுந்து - 'தபதப' வென்று தட்டினார்.

அற்புதா மூச்சிறைத்துக் கொண்டு கதவைப் பார்த்தாள். பார்த்துக்கொண்டே சொன்னாள். ''சாரி மிஸ்டர் வில்லியம்ஸ். இன்னைக்கும் நான் அரசாங்கத்துக்கு விசுவாசமாகத்தான் நடந்துக்கப்

போறேன்.''

'தடதட' வென்று கதவு அதிர்ந்தது.

''அது பழங்காலாட்டிமரக் கதவு வில்லியம்ஸ், உங்க பாச்சா அதுகிட்டே பலிக்காது. கதவைத் தட்டிட்டே இருங்க. நான் இரண்டு நிமிடத்துல உங்களாலே கட்டிப் போடப்பட்ட - என்னோட அத்தையைக் கூட்டிட்டு வந்துடறேன்.''

''தட்...தட்...''

அற்புதா சமையலறைக்கு ஓடினாள். வலியால் முனகிக்கொண்டு கிடந்த அத்தையின் கயிற்றுக் கட்டுகளை அவிழ்த்து வெளியே கூட்டி வந்தாள்.

''எங்கே அந்த கடன்காரன்?''

''கத்தாதே அத்தே. ஆள் அறையில் மாட்டிகிட்டான். வெளிப்பக்கமாய் தாள் போட்டிருக்கேன்.''

''என் ராசாத்தி... ஒரு ஆம்பிளைக்குக்கூட இவ்வளவு தைரியம் வராதுடி'' தன் இரண்டு கைகளையும் அற்புதாவின் முகத்திற்கு கொண்டு போய், வருடி திருஷ்டி கழிக்க முயன்றாள்.

''வேண்டாம் அத்தே. நீ திருஷ்டி கழிக்கப் போய் தான், அந்த ஆள் உள்ளே நுழைஞ்சான். நீ பேசாம அந்தப் பக்கமா போய் உட்கார். நான் இவனை கவனித்துக் கொள்கிறேன்.''

கதவருகே வந்தாள் அற்புதா.

''மிஸ்டர் வில்லியம்ஸ், ஒரு இரண்டு நிமிடம் கதவைத் தட்டாமே இருக்கீங்களா? நான் போலீசுக்கு போன் பண்ணனும். நீங்க கதவைத் தட்டற சத்தத்துல நான் டெலிபோன் பேச முடியாது.''

கதவு தொடர்ந்து தட்டப்பட்டுக் கொண்டிருக்க, அதைப் பொருட்படுத்தாமல் டெலிபோனை நோக்கிப் போனாள்; அவசர போலீசுக்கு டயலைச் சுழற்றி அரை நிமிட நேரத்தில் விபரத்தை அஞ்சல் செய்துவிட்டு கதவருகே வந்தாள்.

கதவு தட்டப்படும் சத்தம் இப்போது நின்று போயிருந்தது. அற்புதா குரலில் கிண்டலைக் கலந்து கொண்டாள். ''வில்லியம்ஸ்... அது படுக்கை அறைதானே என்று நினைச்சு தூங்கிடாதீங்க. போலீசுக்கு தகவல் போயாச்சு. அவங்க இந்நேரம் வந்திட்டிருப்பாங்க...''

உள்ளே நாற்காலி இழுபடும் சத்தம் கேட்டது.



''உட்கார்ந்து இருக்கப் போறீங்களா? அதுவும் சரிதான். அலமாரியில் இங்கிலீஷ் புத்தகம் இருக்கும். மேசை மேலே புத்தகம் நிறைய ராஜேஷ்குமார், ராஜேந்திரகுமார் புஷ்பா தங்கதுரை, இருக்கும். எடுத்து படிச்சிட்டிருங்க.''

உள்ளே புரியாத சில சத்தங்கள்.

அத்தைக்காரி அற்புதாவை நெருங்கி தோள் மேல் கையை வைத்தாள். ''அந்த கடன்காரன் உள்ளே என்னமோ பண்றான். நான் போய் எதிர்வீட்டு பலராமனையும், அடுத்து வீட்டு சிவாவையும் கூட்டிட்டு வரட்டுமா?''

''வேண்டாம் அத்தே! அவனால் இந்த இடத்தை விட்டு தப்பிக்க முடியாது. அந்தப் பக்கம் நெருக்கமா கம்பி போட்ட சன்னல் இருக்கு. அவன் தப்பிச்சு வெளியே வரணும்னா இந்த வழியாத்தான் வந்தாகணும்.''

''போலீஸ் எப்ப வருவாங்க?''

''இதோ பார் அத்தே. கொஞ்சம் நொணநொணக்காமல் அப்படி உட்கார். போலீஸ் இப்ப வந்துடுவாங்க. என்ன வில்லியம்ஸ், கடைசியா என்கிட்டே என்னமோ கேள்வி கேட்டீங்களே! என்ன கேள்வி அது? ஆங்... எனக்கு எப்போ கல்யாணம்னு கேட்டீங்க? பதில் சொல்லட்டுமா! எனக்கு இன்றையிலிருந்து அடுத்த பத்தாவது நாள் ஹேமாமலினி கல்யாண மண்டபத்துல கல்யாணம். மாப்பிள்ளை பேர் சந்தோஷ். இது ஒரு காதல் கல்யாணம். இன்னும் இரண்டு நாள்ல நானே லாக்கப்புக்கு வந்து உங்களுக்கு இன்விடேஷன் தர்றேன்.''

''தத்த்தட்டார்.''

உள்ளே நாற்காலி ஒன்று கீழே விழும் சத்தம் கேட்டது.

''என்ன வில்லியம்ஸ்... இது உங்களுக்கே சரியா? அடுத்தவங்க வீட்டுக்கு வந்து இப்படித்தான் நடந்துக்கிறதா? பேசாமே கையையும் காலையும் வெச்சுகிட்டு ஒரு இரண்டு நிமிடம் உட்கார்ந்திருங்க. இப்ப போலீஸ் வந்துடும். என்னோட அத்தை எனக்கு திருஷ்டி கழிச்ச நேரம் நல்ல நேரமா இருந்திருக்கணும். இல்லேன்னா வளர்த்த உடம்புக்கு பழுதில்லாமே முழுசா இப்படி வந்து மாட்டுவீங்களா?''

உள்ளே மவுனம்.

''மாட்டிகிட்ட பின்னாடிதான் பலருக்கு ஞானோதயமே வருது...''

மேலும் இரண்டு நிமிடம் வளர்ந்தபோது - வெளியே போலீஸ் ஜீப் சர்ர்ரென்று டயர்களைத் தேய்க்கும் சத்தம் கேட்டது.

அற்புதா எட்டிப் பார்த்தாள்.

மீசையும் காதோர கிருதாக்களும் நரைத்த இன்ஸ்பெக்டர் ஒருவர் - கான்ஸ்டபிள்களோடு இறங்கி - வேக வேகமாய் உள்ளே வந்து கொண்டிருந்தார்.

''வாங்க இன்ஸ்பெக்டர்...'' அற்புதா எதிர்கொண்டாள்.

''நீங்க சொன்ன வில்லியம்ஸ் எந்த அறையில் இருக்கான்?''

அவள் தன் படுக்கை அறையைக் காட்டினாள். கதவருகே கூட்டிப் போனாள். இன்ஸ்பெக்டர் கேட்டார். ''அந்த ஆசாமி கொண்டு வந்த துப்பாக்கி எங்கே?''

''ஒரு கர்ச்சீப்பில் சுத்தி வெச்சிருக்கேன் இன்ஸ்பெக்டர்.''

''அதுதான் நல்லது. கதவைத் திறங்க.'' தன் இடுப்பிலிருந்து துப்பாக்கியை எடுத்து ஜாக்கிரதைத்தனத்தோடு வைத்துக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

''கவனம், இன்ஸ்பெக்டர். கதவைத் திறந்ததும் ஆள் திமுர்ன்னு மேலே பாய்வான்.''

''அவனை நாங்க பார்த்துக்கிறோம். தாழ்ப்பாளை திறந்துட்டு நீங்க தள்ளிப் போயிடுங்க.''

அற்புதா தாழ்ப்பாளை சத்தமில்லாமல் விலக்கினாள். விலக்கிவிட்டு பின்வாங்கி - இன்ஸ்பெக்டர் அருகே நின்று கொண்டாள்.

கான்ஸ்டபிள் ஒருவர் தன் பூட்ஸ் காலை உயர்த்தி கதவை லேசாய் எட்டி உதைக்க, கதவு கைகளை விரித்துக்கொண்டு உள்ளே போயிற்று.

கதவு உள்ளே போகப் போகவே-

அற்புதா அதிர்ச்சிக்குள் விழுந்து உறைந்து போனாள். இன்ஸ்பெக்டர் மெதுவாக திடுக்கிடலை வாங்கி, தன் தலையில் இருந்த தொப்பியைக் கழற்றினார்.



அற்புதாவின் கண்கள் நிலைகுத்தியிருந்தன.

அறையின் நடுவேயிருந்த சீலிங் ஃபேனில், தலையின் ஒரு பக்க முடிக்க இறுக்கமாய் தெரிய, ஒரு துணி கழுத்துக்கு சுருக்காக மாறி - அதிலிருந்து நேரமாய் தொங்கி - நாக்கு வெளி தள்ளி - உயிரை விட்டிருந்தார் வில்லியம்ஸ்.

உயிர் போகும்போது, அவர் எட்டி உதைத்த நாற்காலி - முதுகைக் காட்டிக்கொண்டு குப்புற விழுந்து கிடந்தது.

## 9

டி.எஸ்.பி. பரந்தாமனின் தனியறை. கொஞ்சம் தள்ளியிருந்த கண்ட்ரோல் ரூமில் கம்ப்யூட்டர் சாதனங்கள் இயங்கிக் கொண்டிருந்தன. எதிரே மைதானத்தில் போலீஸ் அணிவகுப்பு பயிற்சி நடந்துகொண்டிருக்க-

எதிரே உட்கார்ந்திருந்த அற்புதாவை ஏறிட்டார் டி.எஸ்.பி. ''மிஸ் அற்புதா, உங்க கல்யாணம் என்னைக்குன்னு சொன்னீங்க?''

தேதியைச் சொன்னாள் அற்புதா.

''நீங்க கல்யாணம் முடிகிற வரைக்கும் தனியா எங்கேயும் போகாதீங்க. போலீசுக்கு நீங்க உதவி பண்ணிட்டு வர்றதுனால எதிரிங்க உங்க மேலே ரொம்பவும் கோபமா இருக்காங்க. ராத்திரி நேரத்துல வீட்டுக் காவலுக்கு இரண்டு பேரை அனுப்பட்டுமா?''

''வேண்டாம் சார். என்னைப் பாதுகாத்துக்க எனக்குத் தெரியும். சின்ன வயசிலிருந்தே எதிர்ப்புகளை சந்திச்சு பழக்கமாயிடுச்சு. சில சமயங்களில் எனக்கும் பயம் வரும். ஆனால் அந்த பயமெல்லாம் தற்காலிக பயம்தான். அப்புறம் சமாளிச்சுடுவேன்...''

டி.எஸ்.பி. புன்னகைத்தார். ''நீங்க ஒரு பெண்ணா இருக்கிறதுனாலதான் எனக்கு இந்தக் கவலை. நேத்தைக்கு ராத்திரி வில்லியம்ஸ் கிட்டயிருந்து தெய்வாதீனமா தப்பிச்சுட்டீங்க. ஆனால், நாளைக்கும் யாராவது வரமாட்டாங்கங்கிறது என்ன நிச்சயம்? சாயந்திரம் ஆறு

மணிக்கு மேலே கல்யாணப் பத்திரிகை தர்றதுக்கு வெளியே எங்கேயும் போயிடாதீங்க''

''சரி, சார்'' என்றவள் தன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த டம்பப் பையைப் பிரித்து அந்த திருமண அழைப்பிதழை எடுத்து, பெயரை எழுதி டி.எஸ்.பி. யிடம் நீட்டினாள். ''என்னோட கல்யாணத்துக்கு நீங்க கண்டிப்பா வரணும் சார்.''

''நிச்சயமாக. என்னுடைய அட்வான்ஸ் வாழ்த்துக்கள்! டிபார்ட்மெண்டுக்கு உதவி செய்யறவங்க யாராயிருந்தாலும் சரி, அவங்க வீட்டுக் கல்யாணத்துக்கு நான் கண்டிப்பா வருவேன்.''

''நன்றி சார்.''

அற்புதா எழுந்தாள்.

''உங்களுக்கு எந்த உதவி - எந்த சமயத்துல தேவைப்பட்டாலும் எனக்கு போன் பண்ணுங்க மிஸ் அற்புதா. நான் உதவக் காத்திருக்கேன்.'' டி.எஸ்.பி. சொன்னார்.

மறுபடியும் ஒரு நன்றியை உதிர்த்துவிட்டு, அறையை விட்டு வெளியே வந்தாள் அற்புதா. எதிர்ப்பட்ட போலீஸ் அதிகாரிகள் ஒரு மரியாதைதனத்தோடு புன்னகைக்க, இவளும் புன்னகைத்துவிட்டு ரோட்டுக்கு வந்தாள்.

காலியாக வந்த ஆட்டோ ஒன்றை நிறுத்தினாள். ஏறிக்கொண்டாள்.

''எங்கேம்மா போகணும்?''

'' 'தீப்பிழம்பு' பத்திரிகை ஆபீஸ்.''

டிரைவர் மீட்டரைப் போட்டுவிட்டு ஆட்டோவைக் கிளப்பினான். சீட்டுக்கு சாய்ந்து உட்கார்ந்துகொண்ட அற்புதாவின் மனதில் கடந்த இரண்டு நாட்களின் சம்பவங்கள் சினிமா சிலைடுகளாக மனத்திரையில் மாறி மாறி விழுந்தது.

'லாரி டிரைவர், டிரான்ஸ்போர்ட் கிளார்க் - இப்படி எல்லாருமே இந்த கடத்தல் வேலைக்கு உடந்தையாய் இருந்திருக்கிறார்கள். இவர்களுக்கு மத்தியில் ஒரு ரகசிய இணைப்பு மின்சார செப்புக் கம்பியாய் ஓடியிருக்கிறது.'

'இதனுடைய சூத்ரதாரி யார்...?'

'இந்த கும்பலில் இன்னும் எத்தனை பேர்



இருக்கிறார்கள்?' யோசித்துக்கொண்டே போனதில் ஆட்டோ தீப்பிழம்பு ஆபீசை வேகமாய் எட்டியிருந்தது. இறங்கி ஆட்டோ கட்டணத்தைக் கொடுத்துவிட்டு, உள்ளே போனாள் அற்புதா.

முன்புறத்திலேயே கண்ணாடிக் கூண்டு போன்ற அறையில் ஆசிரியர் சிவசைலம் புருப்புகளை திருத்திக் கொண்டு நாற்காலியில் தெரிந்தார். வழுக்கை மண்டையின் பளபளப்பில் - மேலே சுற்றிக்கொண்டிருந்த ஃபேன் நிழலாய் சலனம் காட்டியது. அறுபது வயது உடம்பை முரட்டு கதராடையில் சிக்க வைத்திருந்தார். அறைக் கதவைத் தட்டிவிட்டு நுழைந்தாள்.

''வணக்கம் சார்...''

''வாம்மா...'' தன் கையிலிருந்த கட்டைப் பேனாவை நகர்த்தி வைத்தார். கைவிரல்களை நெட்டி முறித்துக் கொண்டு நிமிர்ந்தார். ''இப்பத்தான் டி.எஸ்.பி. ஆபிசுக்கு போன் பண்ணினேன்... நீ கிளம்பி வெளியே வந்துட்டதா சொன்னாங்க.''

அற்புதா நாற்காலியில் உட்கார்ந்தபடி - டம்பப் பையைப் பிரித்து ஒரு கற்றை காகிதங்களை வெளியே எடுத்தாள். ''நேத்தைக்கு ராத்திரி என் வீட்ல நடந்த சம்பவங்களை அப்படியே பிசகாமல் எழுதிட்டு வந்திருக்கேன் சார்...''

சிவசைலம் புன்னகைத்தார்.

''ஏன் சார் சிரிக்கறீங்க..?''

''நீ எழுதிட்டு வந்தும் பயன் இல்லையேம்மா...''

அற்புதா நெற்றியைச் சுருக்கினாள். ''ஏன் சார்... அப்படி சொல்றீங்க..?''

''அந்தக் கடத்தல் சம்பந்தப்பட்ட கொலைகளுக்கு அதிகபட்ச முக்கியத்துவம் கொடுத்து செய்தி போடக்கூடாதுன்னு டெலிபோன் கட்டளை...''

''டெலிபோன் கட்டளையா...?''

''ஆமாம்மா... அரசாங்கத் துறையில் இருந்து நம்ம பத்திரிகைக்கு யாரோ போன் பண்ணி - இன்ஸ்பெக்டர் பால்ராஜ், செக்போஸ்ட் அதிகாரி வில்லியம்ஸ் இரண்டு பேரோட கொலைகளைப் பத்தி விரிவா செய்தி போடக்கூடாதுன்னு மிரட்டினாங்க...''

அற்புதா சிலிர்த்தாள்.

''அதெப்படி சார்... நடந்த உண்மைச் செய்திகளைப் போடாமே இருக்க முடியும்...? இது பச்ச அநியாயமா இருக்கே..?''

''அநியாயம்தான்... நாம என்ன பண்ண முடியும்..? பேச்சை மீறி செய்தியைப் போட்டால் அரசாங்கம் கோபப்படும். நமக்கு நஷ்டம் ஏற்படுத்துவார்கள்.''

''எந்தப் பத்திரிகையுமே இந்தச் செய்தியைப் போடப் போறதில்லையா சார்...?''

''போடுவாங்க... ஆனால் அந்த செய்திக்கு முக்கியத்துவம் தராமே கடைசி பக்கம் எட்டாவது பத்தியில் ஏனோ தானோன்னு போடுவாங்க...''

''உங்களுக்கு போன் பண்ணி சொன்னது யார் சார்..?''

''யாரோ ஒரு முன்னாள் மந்திரியோட பி. ஏ. வா இருக்கலாம். பத்து லட்ச ரூபாய் கடத்தல் சமாச்சாரம்ன்னு தெரிஞ்சதுமே - இந்த கடத்தலுக்கு பின்னாடி அரசியல் சம்பந்தப்பட்ட ஒரு புள்ளி இருக்கணும்னு நான் ஊகம் பண்ணினேன். அந்த ஊகம் தப்பலை...''

''சார்... நான் ஒண்ணு சொன்னா கோபிச்சுக்க மாட்டீங்களே..?''

''சும்மா சொல்லம்மா...''

''வேற எந்த பத்திரிகை இந்த செய்தியை இருட்டடிப்பு பண்ணினாலும் சரி... சின்னதா போட்டாலும் சரி... நாம இதுக்கு முக்கியத்துவம் கொடுத்து தான் போடணும்... நான் இது சம்பந்தமா டி. எஸ். பி. கிட்டே பேசி போலீஸ் சம்பந்தப்பட்ட போட்டோக்களை வாங்கிட்டு வந்திருக்கேன்.''

சிவசைலம் கன்னத்தை தேய்த்துக் கொண்டு யோசித்தார்.

''என்ன சார் யோசிக்கறீங்க..?''

''அரசாங்கத்தோட பகையை நாம சம்பாதிக்க வேண்டாமேன்னு நான் பார்க்கிறேன்மா... இந்த பத்திரிகை தொழிலில் நீயும் நானும் மட்டுமா இருக்கோம்... நூத்தம்பது பேர் வேலை செய்யற தொழில் இது. அதான் யோசிக்கிறேன்...''

அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே-

அறைக்கதவு தட்டப்பட்டது.



''எஸ்... உள்ளே வாங்க.'' என்றார் சிவசைலம்.

கதவைத் திறந்து கொண்டு அந்த இளைஞன் ஆத்திரமாய் உள்ளே நுழைந்தான். கலைந்த தலை; தோள்பட்டையில் ஜோல்னாபை, மெலிதான நீல நிறத்தில் பைஜாமா. களையான முகத்தில் கண்கள் கோபமாய் இருந்தது.

''வாங்க... இதயவேந்தன்'' என்றார் ஆசிரியர்.

அவனைப் பார்த்ததும் புன்னகை பூத்து 'அலோ' சொன்னாள் அற்புதா.

இதயவேந்தனின் கண்களில் இருந்த கோபம், அற்புதாவைப் பார்த்ததும் சட்டென்று கழன்று கொண்டது. ''நீங்களும் இங்கேதான் இருக்கீங்களா... அற்புதா... உங்களைப் பற்றித்தான் ஒரு கவிதை எழுதிட்டு வந்திருக்கேன்...''

''கவிதையா..?''

''எஸ்... புதுக்கவிதை படிக்கிறேன் கேட்கறீங்களா..?'' சொல்லிவிட்டு பையிலிருந்த அந்த தாளை உருவினான். முகத்திற்கு நேராய் வைத்துக்கொண்டு படித்தான்.

ஆண்களே! ஒரு நிமிடம்
எல்லோரும் நில்லுங்கள்.
நாம் எல்லோரும்
இனிமேல்-
சேலையைக் கட்டி-
வளையலைப் பூட்டிக் கொள்வோம்.
மஞ்சள் பூசி - பூ வைப்போம்.
ஏனென்றால்-
ஒரு அற்புதப் பெண் - தாசகாரர்களை
துணிச்சல் ரதமேறி - நாசம் செய்து -
ஆட்சி செய்கிறாள்.

இதயவேந்தன் படித்துக் கொண்டிருக்கும் போதே அற்புதா கையை உயர்த்தி படிப்பதை அமர்த்தினாள். ''போதும் இதயவேந்தன்... கவிதை பாட இது நேரமில்லை... நீங்க கவிதை பாடற அளவுக்கு நான் எதுவும் பண்ணிடலை...''

''நீங்க பண்ணின காரியம் உங்களுக்கு சாதாரணமா இருக்கலாம் அற்புதா... ஆனா வெளியே ஜனங்க மத்தியில உங்களோட பேர் ஒரு மந்திரம் மாதிரி ஆயிடுச்சு... கடத்தல் செய்திக்கும்,

இன்ஸ்பெக்டர் - செக்போஸ்ட் அதிகாரி கொலைக்கும் முக்கியத்துவம் கொடுத்து செய்தி போடக்கூடாதுன்னு தகவல் வந்தாச்சு. சப் எடிட்டர் சொன்னார். கடத்தல்காரனுக்குத் துணை போகிற... இந்த அநியாயம் இந்திய நாட்டில் மட்டுந்தான் நடக்கும்... இந்த அநியாயத்தைக் கண்டிக்கிற மாதிரி ஒரு கவிதை எழுதப் போறேன்... ஆசிரியர் இந்த ரெண்டு கவிதைகளை யும் நாளைய தேதி பேப்பர்ல பிரசுரிச்சே யாகணும்...''

சிவசைலம் அவனைப் புன்னகையோடு பார்த்தார். ''இதய வேந்தன்! நீங்க ஒரு கவிஞர், சம்பவங்களைக் கண்டு உணர்ச்சி வசப்படலாம்... பத்திரிகையாசிரியரான நான் அப்படியெல்லாம் உணர்ச்சிவசப்பட்டா... தொழில் நடத்த முடியாது...''

இதயவேந்தன் பளிச்சென்று சொன்னான்.

''யாருக்கு முதுகெலும்பு இருக்கோ... அவங்க தான் ஒரு பத்திரிகைக்கு ஆசிரியரா வரணும்...'' இதயவேந்தன் சொல்லி முடிக்கவில்லை; மேசையின் மேலிருந்த டெலிபோன் கூப்பிட்டது.

எடிட்டர் சிவசைலம் ரிசீவரை எடுத்தார்.

'அலோ' சொல்லி மறுபக்கக் குரலை செவிமடுத்து விட்டு ரிசீவரை அற்புதாவிடம் நீட்டினார். ''போன் உனக்குத் தாம்மா...''

அற்புதா ரிசீவரை வாங்கி காதுக்குக் கொடுத்தாள்.

''அலோ...''

''அற்புதா... நான் சத்யேஷ் பேசறேன்...''

''என்னங்க..?''

''நான் உன்கிட்டே கொஞ்சம் பேசணும்...''

''எப்போ..?''

''இப்பவே...''

''நான் எங்கே வரட்டும்?''

''தேவிபாரடைசுக்கு எதிர்ல மதுரா ஒட்டல் தெரியுமா, உனக்கு...?''

''தெரியும்...''

''அங்கே வந்துடு... நான் காத்திருக்கேன்...''

''என்ன விஷயம்னு போன்ல சொல்லக் கூடாதா... சத்யேஷ்..?''

''இல்லே அற்புதா... அந்த விஷயத்தை



நேர்லதான் பேசணும்...''

''சரி வர்றேன்... ஆமா... உங்க குரல் ஏன் ஒரு மாதிரியா இருக்கு... ஏதாவது பிரச்சினையா..?''

''நேரில் வா சொல்றேன்...''

சத்யேஷ் மறுமுனையில் ரிசீவரை 'டொக்' என்று வைத்துவிட, அற்புதாவும் ரிசீவரை குழப்பமாய் சாத்தி விட்டு எழுந்தாள்.

''சார்...''

''என்னம்மா... என்ன விஷயம்...?''

''சத்யேஷ் என்னை எதுக்காகவோ கூப்பிடறார்... நான் போயிட்டு ஒருமணி நேரத்துல வந்துடறேன் சார்...''

''போயிட்டு வாம்மா...''

அற்புதா அருகே உட்கார்ந்திருந்த இதய வேந்தனிடம் விடைபெற்றுக் கொண்டு - அறையில் இருந்து வெளியே வந்து - ரோட்டில் சங்கமித்து காலியாய் போன ஆட்டோவைப் பிடித்து மதுரா ஒட்டலை சேர்ந்தபோது - நேரம் 11.30.

ஒட்டல் வாசலிலேயே காத்திருந்தான் சத்யேஷ்.

முகம் என்னவோ போல் மாறி கறுத்துப் போயிருந்தது. தலைமுடி சிரத்தையில்லாமல் வாரப்பட்டிருந்தது. அவனைப் பார்த்ததுமே அற்புதாவின் மனசுக்குள் எதுவோ 'மளுக்' என்றது.

''என்ன சத்யேஷ்... ஏன் ஒருமாதிரியா இருக்கீங்க..?''

''உள்ளே வா... அற்புதா... சொல்றேன்..!''

வெள்ளை உடுப்பு தரித்த பணியாள் ஒட்டலின் கனமான கண்ணாடிகளைத் திறந்துவிட, இருவரும் உள்ளே போனார்கள். ஏர்கண்டிஷனின் ஜில்லிப்பு உடம்பு பூராவும் மொய்த்தது. கூட்டம் சொற்பமாய் இருந்த மூலை மேசைக்குப் போய் - எதிரெதிராய் உட்கார்ந்து கொண்டார்கள்.

அரை நிமிட நேர மவுனத்திற்கு பின்-

சத்யேஷ் கம்மிப்போன குரலில் சொன்னான்.

''அற்புதா... நான் சொல்லப்போகிற விஷயத்தைக் கேட்டு நீ மனசு உடைந்துவிடக்கூடாது...''

''பீடிகையில்லாமல் சொல்லுங்க...''

''வ... வந்து... வ... வந்து''

''ம்... சொல்லுங்க...''

''நா... நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுல என்னோட அம்மாவுக்கும்

அப்பாவுக்கும் இஷ்டமில்லை...''

''ஏன்..?'' அதிர்ந்து போய் நிமிர்ந்தாள், அற்புதா. சத்யேஷ் தன் சட்டைப் பாக்கெட்டில் வைத்திருந்த கடிதத்தை எடுத்து நீட்டினான்.

வாங்கிப் பிரித்து-

படித்த அற்புதாவின் முகம் கொஞ்சம் கொஞ்சமாய் ரத்தத்தை தொலைத்துவிட்டு, வெளிறிப்போக ஆரம்பித்தது.

## 10

**மா**றிப்போன முகத்தோடு மறுபடியும் ஒருதடவை தமிழில் டைப் செய்யப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை நிதானமாய் படிக்க ஆரம்பித்தாள் அற்புதா.

**அன்புள்ள சத்யேஷ் என்கிற துரதிர்ஷ்டசாலிக்கு, உண்மையான கரிசனத்தோடு ஒரு 'உண்மை விளம்பி' எழுதிக்கொண்ட கடிதம். நீ இந்த பூவுலகில் நெடுநாள் உயிரோடு இருக்க வேண்டும் என்கிற காரணத்துக்காகவே எழுதப்பட்டது. உனக்கு அடுத்த வாரம் கல்யாணம் என்பதை அறிந்து சந்தோஷம். ஆனால் அந்த அற்புதாவின் கழுத்தில் தாலி கட்டுமுன் ஒரு நிமிடம் யோசிக்கவும். அந்த அற்புதாவுக்கு யார் கணவனாக வந்தாலும் சரி - அவனுடைய ஆயுள் நாள் அந்தக் கல்யாண நாளோடு முடிவடைகிறது என்கிற உண்மையை நீ புரிந்து கொள்ள வேண்டும். இது வெறும் மிரட்டல் கடிதம் இல்லை. நாளை நடக்கப்போவதை சொல்கிற கடிதம் இது.**

**புத்திசாலித்தனமான முடிவை எடு.**

**இந்தப் பூவுலகில் நிறைய நாள் வாழலாம்.**

**இப்படிக்கு**
**சொன்னதைச் செய்பவன்.**

கடிதத்தைப் படித்து முடித்த அற்புதா - அதை நான்காய் மடித்து சத்யேஷிடமே நீட்டினாள். மெல்லிய குரலில் கேட்டாள். ''இந்த லெட்டரை உங்க அம்மா அப்பா படிச்சாங்களா சத்யேஷ்?''

''ஆமா...''



''உடனே இந்தக் கல்யாணம் வேண்டாம்னு சொல்லிட்டாங்க.... அப்படித்தானே?''

''ஆமா...''

''அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க..?''

சத்யேஷ் அவளை நிமிர்ந்து பார்க்காமல் மேசையின் முனையை தன் வலது கை விரல்களால் தடவினான்.

''ம்... சொல்லுங்க சத்யேஷ்... நீங்க என்ன சொன்னீங்க..?''

சத்யேஷ் நிமிர்ந்தான். அவனுடைய கண்கள் லேசாய் கலங்கியிருந்தது. ''அற்புதா..! நான் என்னோட அம்மாகிட்டேயும் அப்பாகிட்டேயும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன். அவங்க பிடிவாதமா நம்ம கல்யாணம் நடக்கக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க...''

''நீங்களும் சரின்னு சொல்லி தலையாட்டிட்டீங்க?''

''வேற வழி...? அற்புதா..! நான் சொல்றேன்னு நீ கோபப்படாதே. மொதல்லே இந்த பிரஸ் ரிப்போர்ட்டர் வேலையை ராஜினாமா பண்ணிட்டு வேற வேலைக்குப் போ...''

''ஏன்... இந்த வேலைக்கு என்ன..?''

''இது விவகாரம் பிடிச்ச வேலை... நீ நிறைய பேர் விரோதத்தை சம்பாதிச்சிக்கிறே... இது உனக்கு கொஞ்சம் கூட நல்லாயில்லை...''

''எனக்கு புத்தி சொல்றது இருக்கட்டும் சத்யேஷ்... என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதுல உங்க தீர்மானமான முடிவு என்ன?''

''அதான் சொல்லிட்டேனே...''

''உங்களுக்கு உங்க உயிர் மேல அவ்வளவு ஆசையா..?''

''யாருக்குத்தான் அவங்கவங்க உயிர் மேலே ஆசை இருக்காது..? எதுக்கும் ஒரு ஆறுமாசம் போகட்டும் அற்புதா! இந்த கடத்தல் கேஸ்... கொலை கேஸ் அமளியெல்லாம் ஓய்ஞ்ச பின்னாடி நம்ம கல்யாணத்தைப் பற்றி யோசிப்போம்...''

''சாரி மிஸ்டர் சத்யேஷ்... என்னிக்கு என்னைக் காட்டிலும் உங்க உயிர் உங்களுக்கு உசத்தியா தெரிஞ்சதோ... அப்பவே நீங்களும் நானும் கணவன் மனைவியா இருக்கத் தகுதியில்லேன்னு ஆயிடுச்ச... ஆறுமாசம் கழிச்சு நீங்க என்னைக்

கல்யாணம் பண்ணிகிட்ட பின்னாடி - வழியில எவனாவது கத்தியைக் காட்டி மறிச்சு... 'உன்னோட உயிர் உனக்கு வேணுமானால் உன் பொண்டாட்டியைவிட்டுட்டு ஓடிப்போயிடு'ன்னு சொல்லுவான். அந்த சமயத்திலும் நீங்க இப்படித் தானே கைகழுவிட்டு ஓடப்பார்ப்பீங்க..?''

''அற்புதா...'' கத்தினான் சத்யேஷ்.

''உங்களைப்பத்தி நான் எவ்வளவோ பெருமையா... மதிப்பா நினைச்சிருந்தேன் சத்யேஷ்... கடைசில ஒரு கஷ்டம்ன்னு வந்தா காதலை கசாப்புகடைக்கு அனுப்பற ஆண்கள்ல நீங்களும் ஒருத்தர் என்கிறதைப் புரிஞ்சுகிட்டேன். ஒரு மொட்டைக் கடிதம் மேல் நீங்க வெச்ச நம்பிக்கையைக் காட்டிலும் - நம்ம காதல் மேலே வெச்ச நம்பிக்கை குறைஞ்சா போயிடுச்சு..?''

ஓட்டல் சர்வர் அவர்களை நெருங்கினான்.

மெனுகார்டை நீட்ட - அதை வாங்கி மேசை மேல் போட்டுவிட்டு ''ரெண்டு ரிச்சி...ரிச்சி... ஐஸ்கிரீம்...'' என்றான்.

சர்வர் நகர்ந்ததும்-

சீட்டைவிட்டு எழுந்து - டம்பப்பையை தோளில் மாட்டிக் கொண்டே அற்புதா சொன்னாள்.

''குட்பை... மிஸ்டர் சத்யேஷ்... நாம ரெண்டு பேரும் காதலிக்க ஆரம்பிச்சதும் முதல் முதலா ஒரு ஓட்டலுக்கு போய் ரெண்டு பேரும் ஐஸ்கிரீம்தான் சாப்பிட்டோம்... நீங்க அன்னிக்கு ஆரம்பிச்சு வெச்சீங்க... நான் இன்னிக்கு முடிச்சு வெக்கிறேன்... கவுண்ட்டரில் பில்லைக் கொடுத்து விட்டுப் போறேன்... நீங்க என்னோட பங்கையும் சேர்த்து நிதானமா சாப்டுட்டு வாங்க...''

கோபம் கொப்பளிக்கும் குரலில் படபடவெனப் பொரிந்து விட்டு - ஓட்டல் கவுண்ட்டரை நோக்கிப்போய் விபரம் சொல்லி பணத்தைக் கொடுத்துவிட்டு - ஓட்டலுக்கு வெளியே வந்தாள்.

## 11

அற்புதா சொன்னதைக் கேட்டு அயர்ந்து போனார் சிவசைலம்.

''நீ என்னம்மா சொல்



றே..? சொல்றது நிஜந்தானா..?''

''ஆமா சார்... உயிருக்குப் பயந்தவனெல்லாம் காதலிச்சா... முடிவு இப்படித்தான் இருக்கும் சார்... ஒரு மொட்டைக் கடுதாசுக்கே தொடை நடுங்கிற இவனெல்லாம் மீசையை ஏன் வெச்சிருக்கிறான்... சுத்தமா எடுத்துட்டு மஞ்சள் பூசிக் குளிக்க வேண்டியதுதானே..?''

''அம்மா... அற்புதா... ஆத்திரப்படாதேம்மா... நான் வேணும்ன்னா அந்த தம்பிகிட்டே சொல்லிப் பார்க்கட்டுமா..? ரெண்டு மூணு தடவை அவன் இங்கே வந்ததுல எனக்கும் நல்லா பழக்கமாயிருக்கான். நான் நியாயத்தை எடுத்துச் சொன்னா அவன் நிச்சயமா கேட்பான்.''

''வேண்டாம் சார். நீங்க ஒரு வேலைக்கு சிபாரிசு பண்ணலாம். ஆனா கல்யாணத்துக்காக சொந்தக் காதலன் கிட்டேயே சிபாரிசுக்கு போகக்கூடாது. இதனாலே எனக்கோ அவருக்கோ கேவலம் இல்லை. காதல் என்கிற வார்த்தைக்கே அது கேவலம்...''

சிவசைலம் குறுக்கிட்டார்.

''நீ விபரம் புரியாமே பேசாதேம்மா. கல்யாண அழைப்பிதழை அச்சடிச்சு ஊர்பூராவும் கொடுத்திருக்கே. நாளைக்கு அத்தனை பேரும் மண்டப வாசல்ல வந்து நின்னுட்டிருப்பாங்களே. பின்விளைவைப் பத்தி கொஞ்சமும் யோசிக்காமே, படபடன்னு பேசறதுல ஒரு பயனும் இல்லேம்மா. நீ சொன்ன தேதியில கல்யாணம் நடந்தாகணுமே..?''

''நடக்கும் சார்.''

அற்புதாவின் குரலில் எஃகுத்தனமான உறுதி தெரிந்தது.

சிவசைலம் நெற்றியைச் சுருக்கினார்.

''எப்படிம்மா நடக்கும்? சத்யேஷ்தான் மாட்டேன்னு சொல்லிட்டானே..?''

''சத்யேஷ்தான் எனக்குத் தாலி கட்டணுமா சார்?''

''அற்புதா, நீ என்னம்மா சொல்றே?''

''அந்த தேதியில என்னோட கல்யாணம் நடந்தேயாகணும் சார். உயிரைப் பணயம் வெச்ச தாலி கட்டற ஆண்மகன் யாராயிருந்தாலும் சரி. ... இன்னிக்கே ஒரு விளம்பரம்

போடுங்க சார்...''

சிவசைலம் திடுக்கிட்டார்.

''கொஞ்சம் பொறும்மா. கல்யாணங்கிறது விளையாட்டுக் காரியமில்லை. அவசரத்துல கல்யாணம் பண்ணிகிட்டு சாவகாசமா சங்கடப் படக்கூடாதுன்னு பெரியவங்க சொல்லுவாங்க.''

''நோ... சார். இது அவசரமான கல்யாணமில்லை. அவசியமான கல்யாணம். உயிருக்கு பயந்த அந்தப் பேடி சத்யேஷுக்கு மனசுல 'சுருக்'ன்னு படணும். அவன் மூஞ்சியில அவனே கரி பூசிக்கணும். அதே சமயத்துல சத்யேஷுக்கு லெட்டர் எழுதின ஆசாமிகளுக்கும் நான் யாருங்கிறதைக் காட்டணும்...''

''நீ தீர்க்கமாத்தான் சொல்றியாம்மா?''

''தீர்க்கமா - தெளிவா - சொல்றேன் சார். நீங்க பத்திரிகையில விளம்பரத்தைப் போடுங்க. இரண்டு நாள்ல ஏகப்பட்ட அப்ளிகேஷன் வரும். நீங்களும் நானும் உட்கார்ந்து, எனக்குப் பொருத்தமான மாப்பிள்ளை ஒருத்தரை தேர்ந்தெடுப்போம். என்னோட அப்பா இடத்தில் நீங்க இருந்து இந்தக் கல்யாணத்தை முடிச்சுக் கொடுக்கணும் சார்...''

''சரிம்மா. நாளைக்கே வர்ற எடிஷன்ல மொதல் பக்கத்திலேயே இந்த விளம்பரத்தைப் போட்டுடறேன்.''

''டொக்... டொக்...''

அறைக் கதவை யாரோ தட்டினார்கள்.

''யாரு? உள்ளே வாங்க.''

சிவசைலம் சொல்ல, கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான் இதயவேந்தன்.

''என்ன இதய வேந்தன், இன்னுமா நீங்க வீட்டுக்குப் போகலை?'' சிவசைலம் கேட்டதும் புன்னகைத்தான் இதயவேந்தன்.

''கம்போசிங் பிரிவுக்குப் போய் மேட்டரைக் கொடுத்துட்டு வர்றப்போ, எழுதின கவிதையில ஒரு சந்தேகம். கேட்டுட்டுப் போகலாம்ன்னு வந்தேன்...''

''வாங்க, உட்காருங்க, இதயவேந்தன். ஒரு பிரச்சினை...''

''என்ன பிரச்சினை... அற்புதாவோட கல்யாணந்தானே?''



''நீங்க...?'' இருவரும் திகைக்க, இதயவேந்தன் சிரித்தான்.

''ஒட்டுக் கேட்டதா நினைக்கக்கூடாது. கதவைத் தட்ட கையை எடுத்தேன். நீங்களும் அற்புதாவும் உணர்ச்சிவசப்பட்டு பேசிட்டிருந்தீங்க. பேச்சை முடிக்கிற வரை வெளியே காத்திட்டிருந்தேன். அற்புதா எடுத்த முடிவு நல்ல முடிவு. சத்யேஷோட மூஞ்சியில கரியைப் பூசணும்னா, கல்யாணம் நிச்சயம் பண்ணின அதே தேதியில அற்புதாவோட கல்யாணம் நடந்தேயாகணும்...''

''நன்றி, மிஸ்டர் இதயவேந்தன். என்னோட கருத்துக்கு நீங்க மறுப்பு சொல்லுவீங்களோன்னு பயந்தேன்.''

''என்றைக்குமே நியாயம் இருக்கக்கூடிய திசை நோக்கித் தான் என்னோட தலை திரும்பும் அற்புதா. நீங்க என்றைக்கு அந்த விளம்பரத்தைத் தரப்போறீங்க?''

''நாளைக்கு.''

''அதுக்கு முன்னாடி தான் என்னோட யோசனையை சொல்லட்டுமா அற்புதா? நான் ஏறக்குறைய உங்க மாதிரிதான். அம்மா, அப்பா கிடையாது. கூடப் பிறந்தவங்களும் கிடையாது. நீங்க விரும்பினால், சத்யேஷ் இருந்த இடத்துக்கு நான் வர்றேன். விளம்பரமும் வேண்டாம். யார்கிட்டேயிருந்தும் எந்த அப்ளிகேஷனும் வேண்டாம்...''

அற்புதாவும், சிவசைலமும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொண்டார்கள். அரை நிமிட மவுனத்திற்குப் பிறகு அற்புதா உதடுகளை அசைத்தாள்.

''மிஸ்டர் இதயவேந்தன். சத்யேஷ் என்ன காரணத்துக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொன்னார் தெரியுமா?''

''தெரியும். உங்க கழுத்துல தாலி கட்டறவன் உயிரோடு இருக்கமாட்டான்னு எவனோ எழுதிப் போட்ட மொட்டைக் கடிதத்துக்குப் பயந்துதானே?''

''ஆமா! அந்த பயம் உங்களுக்கு இல்லையா?''

''மரண பயம் என்றைக்குமே என்கிட்ட இருந்தது இல்லை.''

''நல்லா யோசிச்சுகிட்டு உங்க முடிவை சொல்லுங்க இதயவேந்தன். அந்த மொட்டைக்

கடிதத்தை நான் அலட்சியம் பண்ணலாம். ஆனா நீங்க பண்ணக்கூடாது. நிதானமா உங்க முடிவைச் சொல்லுங்க.''

''நான் என்னோட முடிவைச் சொல்லி ஒரு நிமிடமாச்சு. இனிமே நீங்கதான் எனக்கு முடிவு சொல்லணும்.''

அற்புதா சிவசைலத்தைப் பார்த்தாள்.

''நீங்க என்ன சார் சொல்றீங்க?''

''நான் பட்டுன்னு ஒரு வார்த்தையில சொல்லட்டுமா அற்புதா?''

''சொல்லுங்க சார்...''

''பத்திரிகையில விளம்பரம் பண்ணி - ஆயிரத்தெட்டு அப்ளிகேஷன் வந்து - அதுல ஒரு முன்னே பின்னே தெரியாதவனைத் தேர்ந்தெடுக்கிறதைக் காட்டிலும் - உன்னோட குணத்தைப் புரிஞ்சுகிட்ட - உன்னோட செயல்களைப் புரிஞ்சுகிட்ட இதய வேந்தனை தேர்வு பண்றது ரொம்பவும் உத்தமம் அம்மா.''

அற்புதா புன்னகையோடு தலையசைத்தாள்.

''நம்ம பிரஸ்ல... உங்க கையினால... திருமணப் பத்திரிகை அடிக்கக் கொடுத்துடுங்க சார்... நாளைக்கு காலையில மொதல் காரியமா ஒரு அழைப்பிதழை எடுத்து அந்த பேடி சத்யேஷுக்கு அனுப்பணும்..''

''அனுப்பிடலாம்...''

தலையை ஆட்டிச் சிரித்தார் சிவசைலம்.

## 12

மறுநாள் மத்தியானம் மூன்று மணிக்குத்தான் அத்தையிடம் விஷயத்தை சொன்னாள் அற்புதா.

அத்தை கண்கள் சுருங்க முகத்தைச் சுளித்தாள். குரலை உயர்த்தி வெடித்தாள்.

''ஏண்டி உனக்கு புத்தி இப்படிப் போகுது..?''

''எப்படிப் போகுது...?''

''அந்தப் பையனும் நீயும் ஒருத்தர்க்கொருத்தர் உசிரா பழகினீங்க... அவன்தான் ஏதோ சொன்னாங்கிறதுக்காக நீயும் முகத்தைத் திருப்பிகிட்டு



டறதா..? அப்படியே வந்தாலும் சும்மா க்க வேண்டியது தானே..? மனசுல ரோதத்தை வெச்சிகிட்டு அந்தப் பையனைப் வாங்கிற மாதிரி... இன்னொரு கல்யாணம் ணிக்கவேண்டியது அவசியந்தானா...''

''ரொம்பவும் அவசியம் அத்தே..! உயிருக்குப் ந்தவனெல்லாம் காதல் செய்யக்கூடாது. அந்த யேஷ் சத்தர்ப்பவாதி...''

''யாருக்குத்தான் உயிர்மேல் ஆசையில்லை..? னக்கு வேணுமானா உன்னோட உயிர் அல்பமா தரியலாம்... மத்தவங்களும் அதே மாதிரி னைக்கணும்னு நீ எதிர்பார்க்கிறது சரியில்லை... ந்த பையன் கிட்டேயே கொஞ்சம் இதமா பேசி - வனுடைய அநாவசியமான பயத்தைப் போக்கி ல்யாணத்துக்கு ஒத்துக்க வெச்சிருக்கலாம்...''

''அதாவது... கெஞ்சிப் பார்த்திருக்கணும்ன்னு சொல்றே?''

''ஆமா...''

''இதோ பார் அத்தே... உன்னோட காலம் வேறே. என்னோட காலம் வேறே... நான் முடிவு பண்ணியாச்சு. அழைப்பிதழ் வந்தாச்சு... குறிப்பிட்ட தேதியில கண்டிப்பா கல்யாணம் நடந்தே தீரும்... இதயவேந்தன் என்னோட கழுத்துல தாலிகட்டப் போறார்...''

''என்னடியோம்மா... நல்லா... இரு... உங்க அம்மாவும் அப்பாவும் உயிரோடு இருந்திருந்தா... உன் மனசுல கொஞ்சம் பயம் இருக்கும்...''

''சரி... நீ இப்போ சாப்பிட்டாச்சுதானே..?''

''ஆமா...''

''என்கூட கொஞ்சம் கடைவீதிக்குப் புறப்படு...''

''எதுக்கு..?''

''கல்யாணப் பட்டுச் சேலை எடுக்கணும்...''

''அதான் மொதலிலேயே எடுத்து வெச்சிருக்கியே... அந்த சேலையை என்ன பண்றது..?''

அத்தைக்காரி ஆச்சரியப்பட்டாள்.

''அந்த சேலையை நான் கட்டிக்க மாட்டேன்...''

''ஏண்டி..?''

''அந்த சேலை அந்தப் பேடி சத்யேஷோட தேர்வு. அந்த ஆள் விரும்பி எடுத்த பட்டுச்சேலை

எனக்கு வேண்டாம்... அதை அப்படியே வெச்சிருந்து எவனாவது பாத்திரக்காரன் வந்தா அதைப் போட்டு ரெண்டு அண்டா வே குண்டா வோ வாங்கி வை..''

''அதையேண்டி பாத்திரக்காரனுக்குப் போட ணும்... அந்தப் பட்டுச்சேலையை எடுத்துக்கிட்டு நீ வாங்கின கடைக்கே போவோம்...''

''அப்படி மாத்திக் கொடுப்பானா..?''

''நான் வாங்கித் தர்றேண்டி...''

''சரி புறப்படு...''

வீட்டைப் பூட்டிக் கொண்டு அற்புதாவும் அத்தையும் புறப்பட்டார்கள். வாசல் கதவில் பூட்டை மாட்டிக் கொண்டிருந்த சமயம் உள்ளே டெலிபோன் மணி அடித்தது.

''புறப்படற நேரத்துல போன் வருது...'' அத்தைக்காரி சலித்துக்கொள்ள அற்புதா வேக வேகமாய் ரிசீவரை எடுத்தாள். குரல் கொடுத்தாள்,

''அலோ...''

''நான் சத்யேஷ் பேசறேன்...''

மறுமுனையில் சத்யேஷ் குரலைக் கேட்டதும் - அற்புதா தன் குரலில் கேலியையும் கிண்டலையும் நிரப்பிக் கொண்டாள்.

''அலோ... மாஜி காதலன் சாரா..? வணக்கம் சார்...''

''இந்த கேலியும் கிண்டலும் என்கிட்டே வேண்டாம். நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா..?''

''என்ன கேள்விப்பட்டீங்க..?''

''உன்னோட கல்யாணத்தைப் பத்தி...''

''அதான்... என்ன கேள்விப்பட்டீங்கன்னு கேட்டேன்...''

''நீ அந்த கவிதை எழுதற இதயவேந்தனைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியாமே..?''

''ஆமா...''

''உனக்கு வெட்கமாயில்லை..?''

''எதுக்கு வெட்கம்..?''

''காதலிக்கிறது ஒருத்தனை... கழுத்தை நீட்டறது இன்னொருத்தனுக்கா..?''

''என்ன சார் பண்றது..? என்னைக் காதலிச்ச ஒருத்தர் திடீர்ன்னு பல்டி அடிச்சுட்டார்... எல்லோர்க்கும் அழைப்பிதழ் கொடுத்த பின்னாடி



யாணத்தை நடத்தாமே இருந்தா... நல்லா இருக்குமா..? அதான் ஓர் இராத்திரியில் மாப்பிள்ளை மாறிட்டார். தேதி அதே தேதிதான்... கல்யாண மண்டபமும் அதே மண்டபம் தான்... பொண்ணும் அதே பொண்ணு தான்.... மாப்பிள்ளை மட்டும் வேறே...''

''ச்சீ... நீயெல்லாம் ஒரு பொண்ணு..?''

சத்யேஷ் ரிசீவரில் எரிந்து விழுந்தான். அற்புதா புன்னகைத்து ரிசீவரைப் பார்த்தாள். ''மிஸ்டர் சத்யேஷ்! இது மாதிரியான முட்டாள்தனமான கேள்வியெல்லாம் கேட்டு என்னோட நேரத்தை வீணாக்காதீங்க... நாளைக்கு காலை தபாலில் உங்களுக்கு என்னோட திருமண அழைப்பிதழ் வரும்... தவறாமே வாங்க...''

''நீ...நீ... வேடக்காரி...''

''இதோ பாருங்க, சத்யேஷ்... இதைவிட மோசமான வார்த்தையெல்லாம் எனக்குப் பேசத் தெரியும்... மரியாதையா ரிசீவரை நீங்க வெச்சுட றீங்களா...? இல்லை நான் வெச்சுடட்டுமா...?''

மறுமுனையில் கோபமாய்-

ரிசீவரை அறைந்தான் சத்யேஷ்.

## 13

பாண்டி பஜார்.

பட்டுச்சேலை மாற்றிக் கொண்டு - ஜவுளிக்கடை முதலாளியின் தங்கப்பல் சிரிப்பை வாங்கிக்கொண்டு - கடைக்கு வெளியே வந்து பிளாட்பாரத்தில் இறங்கினார்கள் அற்புதாவும் அத்தைக்காரியும்.

மூன்றரை மணி நேர பாண்டிபஜார் இன்றையதினம் நிறைய சோம்பலாயிருந்தது- முந்தினநாள் போலீஸ் எடுத்த நடவடிக்கையில் - தொண்ணூறு சதவீத நடைபாதை கடைகள் காணாமல் போயிருந்தது- மக்கள் வெயிலுக்கு பயந்து வீடுகளில் பதுங்கியிருந்தார்கள்.

''என்ன அத்தே... ஏதாவது கூல்ட்ரிங் சாப்பிடறியா...?''

''ஒண்ணும் வேணாம்டியம்மா... முதல்ல வீடு

போய் சேருவோம்... அடிக்கிற வெயில் ஆளையே இரண்டா வருத்துடும் போலிருக்கு..."

"எதிர்ல ஒரு டாக்சி நிக்குது... புடிச்சு போயிடுவோமா...?"

"ம்..."

"டாக்சி..."

அற்புதா கையை அசைத்துக் கூப்பிட - டாக்சி உயிர் பிடித்து ஊர்ந்து வந்தது. பிளாட்பாரத்தை தொட்ட மாதிரி நின்றது. டிரைவர் தலையை வெளியே நீட்டினான்.

"எங்கேம்மா போகணும்...?"

"ராஜா அண்ணாமலைபுரம்..."

மீட்டரின் கழுத்தைத் திருப்பிவிட்டு டாக்சியின் பின்பக்கக் கதவைத் திறந்துவிட்டான். பின்சீட்டுக்கு இருவரும் போனதும் - கதவு சாத்தப்பட்டு டாக்சி வேகமெடுத்தது. கையிலிருந்த பார்சல் பெட்டியை - மடியில் வைத்துக் கொண்டு கண்ணாடிக் கதவுகளை இறக்கி விட்டாள், அற்புதா.

"ராஜா அண்ணாமலைபுரத்துல எங்கேம்மா போகணும்?"

இடத்தைச் சொன்னாள் அற்புதா. டாக்சி டிரைவர் தலையாட்டிக் கொண்டு டாக்சியை திருப்பினான். பாண்டிபஜார், காருக்குப் பின்னே இரண்டு நிமிட நேரத்தில் மறைந்து போக ஜி.என்.செட்டி ரோட்டில் திரும்பியது டாக்சி.

ஆள்நடமாட்டம் அற்ற அந்த ரோட்டின் இரண்டு பக்கமும் சில குடிசைகள் மட்டும் தெரிய - டாக்சி வீறிக்கொண்டு போனது.

அத்தை சொன்னாள். "அந்த மயில் கழுத்துக் கலர் சேலை ரொம்ப நல்லாயிருந்தது. நீதான் வேண்டாம்ன்னு சொல்லிட்டே...! அந்த சேலை இன்னும் என் கண்ணு முன்னாலேயே நிக்குது..."

"தண்ணியிலே நனைச்சா... சாயம் போனாலும் போகும்ன்னு கடைக்காரன் சொன்னானே மறந்துட்டியா அத்தே..?"

"அந்த நிறம் சாயம் போகாது..." அத்தைக்காரி தீர்மானமாய் சொல்லிக் கொண்டிருக்கும் போதே டாக்சி அந்த வளைவில் 'க்றீச்'சிட்டு நின்றது. முன் சீட்டில் போய் தலையை முட்டிக்கொண்டாள் அற்புதா.



"என்ன டிரைவர்... என்னாச்சு..?"

கேட்டுக்கொண்டே நிமிர்ந்தவளின் கண்களில் - டாக்சிக்கு முன்னால் நின்றிருந்த அந்த மெட்டாடர் வேன் பட்டது.

"வேனை யாரோ குறுக்காலே நிறுத்தியிருக்காங்கம்மா..." டிரைவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இரண்டு பேர் வரி வரியான பனியன்களோடு திமு திமுவென்று ஓடிவந்து டாக்சியின் பின்பக்கக் கதவைத் திறந்து - அற்புதாவையும் அத்தைக்காரியையும் ராட்சசத்தனமாய் இழுத்தார்கள்.

"டேய்... யார்ரா... நீங்க...?"

கேட்ட டாக்சி டிரைவரின் முகத்தில் - ஒருத்தனுடைய இரும்புக் கை மூர்க்கமாய் - 'நச்'சென்று பதிய, அவன் அந்த அடியின் வேகம் தாளாமல் கண் சொருகி - முன் சீட்டில் துவண்டான்.

ஒருத்தனின் பிடியில் - அற்புதா திமிறத் திமிற - இன்னொருவன் தன் கையிலிருந்த ஈரமான மயக்க மருந்து தடவின கர்ச்சீப்பை - அற்புதாவின் முக மையத்தில் வைத்து அழுத்தினான்.

"அடப்பாவிகளா..!" அலறிய அத்தைக்காரியை - இன்னொரு வரி பனியன்காரன் சுலபமாய் மயக்கத்திற்குக் கொண்டு போனான்.

அற்புதா கர்ச்சீப்பில் இருந்து விடுவித்துக் கொள்ளப் போராடி - முடியாமல் கொஞ்சம் கொஞ்சமாய் சோர்ந்து தலையை ஒரு பக்கமாய் தொங்கப் போட்டாள்.

"டேய்... தயாள்...! கிழட்டுச் சனியனை அப்படியே விட்டுவிட்டு - இந்தக் கிளியை மட்டும் தூக்கு..."

தூக்கினார்கள்.

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் -

அற்புதா மெட்டாடர் வேனின் வயிற்றுக்குள் அடக்கமானாள். ஒருவன் பின்சீட்டில் ஏறிக் கொள்ள - இன்னொருவன் டிரைவிங் சீட்டுக்குப் போனான்.

வேன் நகர்ந்தது.

ரிவர்ஸ் எடுத்து விரியது.

## 14

இன்ஸ்பெக்டர் கமலநாதன் அங்கே வந்த போது - டாக்ஸி டிரைவருக்கு மட்டும் மயக்கம் தெளிந்திருந்தது. அந்தக் கிழவி இன்னமும் மரகட்டையாய் - பின்சீட்டில் சுருண்டு கிடந்தாள். டாக்ஸி டிரைவர் வாயோரம் வழிந்து உறைந்து போன ரத்தக் கோட்டோடு சொன்னான். ''ரெண்டு பேர் வந்தாங்க சார்...''

''எப்படியிருந்தாங்க..?''

''ஆளுங்களைப் பார்க்கிறதுக்குள்ளே... என்னை அடிச்சு மயக்கமாக்கிட்டாங்க சார்..!''

''என்ன வேன் அது..?''

''மெட்டாடர் சார்..''

''நெம்பரை நோட் பண்ணியா..?''

''வண்டியை குறுக்கா அந்த திருப்பத்துல நிப்பாட்டியிருந்தாங்க சார்... வண்டி ஏதோ ரிப்பேர் போலிருக்குன்னு நான் நினைச்சு முடிக்கிறதுக்குள்ளே... தடித்தடியா ரெண்டு பேர் 'திமுதிமு'ன்னு ஓடிவந்து என்னைத் தாக்க ஆரம்பிச்சாங்க சார்...''

''சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது?''

''மூணரை மணிக்கு சார்...''

இன்ஸ்பெக்டர் கமலநாதன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். நேரம் 4.45. ஏறக்குறைய ஒண்ணேகால் மணி நேரம்!

'இதற்குள் அந்த வேன் நகர எல்லையைத் தாண்டி ஏதாவது ஒரு திக்கில் போயிருக்கலாம்.'

அந்தக் கிழவியை மயக்கத்தினின்றும் மீட்க முயற்சித்துக் கொண்டிருந்த அந்த கான்ஸ்டபிள் சோர்வாய் நடந்து இன்ஸ்பெக்டரை நெருங்கினார்.

''சார்... பெரியம்மாவை ஆஸ்பத்திரிக்குத்தான் கொண்டு போகணும்...''

''ஏன்...?''

''மயக்க மருந்து டோசஸ் ரொம்பவும் அதிகம் சார்... நாடித்துடிப்பு குறைச்சலாயிருக்கு...''

''அதே டாக்ஸியிலே போட்டு பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வாய்யா... பெரியம்மா



...ன விழிச்சாத்தான் வந்தவங்க யாரு என்கிற ...ரம் தெரியும்....'' சொன்ன இன்ஸ்பெக்டர் ...தாப்பியை சரிப் படுத்திக் கொண்டு ஜீப்பில் ...ய்ந்து ஏறினார்.

## 15

அற்புதாவுக்கு நினைவு தட்டிய போது, பறவைகளின் கூக்குரல்கள் உச்சபட்சத்தில் இருந்தது. கண்களினின்றும் இமைகளைப் பிரிப்பது சிரமமாய் இருந்தது. பிடிக்காத அந்த மயக்க மருந்து வாசம் நாசித் துவாரங்களில் இன்னமும் அழுத்தமாய் உறைந்திருந்தது. தலை பாறைக்கல் மாதிரி கனக்க - உடம்பு இலவம் பஞ்சாய் காற்றில் அலைந்தது.

கண்களை சிரமப்பட்டுப் பிரித்தாள்.

அந்த சிறிய அறையில் - மங்கல்தனமாய் ஒரு நாற்பது வாட்ஸ் பல்பு சோகையாய் எரிந்து கொண்டிருந்தது. கடப்பைக்கல் தரை. மண் கூஜா. மஞ்சளாய் பழுப்பேறிப் போன இறக்கைகளோடு ஒரு மின்விசிறி. கவரோரமாய் மர மேஜை.

தலையை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு மேலே இருந்த செவ்வக சன்னலில் சாயங்காலத்திற்கு போய்க்கொண்டிருந்த இருட்டு, கறுப்பு பேப்பர் ஒட்டின மாதிரி தெரிந்தது. பறவைகளின் கீச்சிடல்கள் காதுகளை அடைத்தது.

'நான் எங்கேயிருக்கிறேன்?'

'இது எந்த இடம்...?'

யோசித்துக்கொண்டே எழுந்து, சன்னல் கம்பிகளைப் பற்றி, உடம்பை எம்பி வெளியே பார்க்க முயன்றாள் அற்புதா.

''ரொம்பவும் சிரமப்படாதியே, அற்புதா?''

குரல் கேட்டு பளிச்சென்று நிமிர்ந்தாள்.

சிவப்பும் வெள்ளையின் பின்புறத்தில் நீலமும், வரியிட்ட பனியனோடும், காற்றில் பறக்கிற தேங்காய் நார் கிராப்போடும் அந்த தடியன் நின்றிருந்தான். சிரித்தபோது கீழ் வரிசைப் பற்களில் இரண்டு காணாமல் போயிருந்தது.

அவனைப் பார்த்ததும் சுவரை நோக்கிப் பின்வாங்கினாள் அற்புதா. பார்வை அவன் மேல்

நிலைத்துப் போயிருந்தது. ''யா...யார்ரா... நீ...?'' குரல் குழறக் கேட்டாள்.

''உனக்கு வேண்டியவன்.''

''ராஸ்கல்... எதுக்காக என்னை இங்கே கொண்டு வந்திருக்கே?''

''இன்னும் கொஞ்ச நேரம் போகட்டுமே. சொல்றேன். இப்ப ஏதாவது சாப்பிடறியா?''

''வேண்டாம்.''

''வேண்டாம்னு சொல்லாதே. கொஞ்ச நேரம் போனா பசிக்கும். அப்புறம் இந்த காட்டுப் பகுதியில எதுவுமே கிடைக்காது...''

''இ...இது காடா..?''

''ஆமா. வேடந்தாங்கலுக்குப் பக்கத்துல இருக்கிற நரி மேட்டு காட்டுப் பகுதிதான் இது.''

அற்புதா சுற்றும் முற்றும் பார்த்தாள்.

''என்ன அற்புதா பார்க்கிறே? இந்த இடத்துக்கு வந்தவங்க யாரும் தப்பிச்சு போனதா வரலாறே கிடையாது. தொழில்ரீதியா எங்களுக்குத் தொல்லை தர்றவங்களுக்கெல்லாம் இந்த இடத்துலதான் சமாதி கட்டியிருக்கோம்... உனக்கும் கட்டப் போறோம்...''

''அந்த கள்ளக் கடத்தல் ஆசாமியா நீ..?''

''அந்தத் திருப்பணிக் குழுவில் நான் ஒரு தொண்டன்...'' சொல்லிவிட்டு அவன் சிரித்த போது அற்புதாவின் வயிற்றில் கட்டியாய் ஒரு பயம் உற்பத்தியானது.

## 16

இன்ஸ்பெக்டர் கமலநாதனிடம் சிவசைலம் பொரிந்து கொண்டிருந்தார்.

''இதோ பாருங்க இன்ஸ்பெக்டர். ஒரு பெண் திருபரைக் குறி வெச்சு ஒரு கும்பலே அலைஞ்சுட்டிருக்கு. நீங்க அந்தப் பெண்ணுக்கு பாதுகாப்பு தரணும்ன்னு டி.எஸ்.பி.கிட்டே எவ்வளவோ தடவை சொல்லிட்டேன். ஆனால், உங்க இலாகாவில் கடைசி நிமிடம் வரைக்கும் கையைக் கட்டிக்கிட்டு இருந்துட்டு, இப்போ அந்தப் பெண்ணைக்



...ப்பாத்த புறப்பட்டிருக்காங்க. எவ்வளவு வெட்கக்கேடான விஷயம்!''

கமலநாதன் முனகினார். ''அந்தப் பொண்ணு அற்புதா பாதுகாப்பு வேண்டாம்னு சொல்லியிருக்காமே சார்?''

''சரி! இப்போ என்ன முயற்சி எடுத்திருக்கீங்க? அந்தப் பெண்ணைக் கடத்திட்டுப் போன மெட்டாடர்வேன் யாரோடதுன்னு கண்டு பிடிச்சிட்டீங்களா, இன்ஸ்பெக்டர்?''

''இன்னும் இல்லை. கண்டுபிடிக்க முயற்சி எடுத்திட்டிருக்கோம். நகர எல்லை நாலாபக்க செக்போஸ்டிலும் விசாரிச்சுட்டோம். மெட்டாடர் வேன் எதுவும் அந்தக் குறிப்பிட்ட ஒரு மணி நேரத்துல நகர எல்லையைத் தாண்டலையாம். அதனால வேன் இன்னும் இந்த சென்னையில் தான் இருக்கு. வேனோட நிறம் நீலம்ன்னு டாக்சி டிரைவர் சொன்னது ஒண்ணுதான் க்ளூ...''

''அந்த வேன் சென்னையில் இருந்து என்ன பிரயோசனம் இன்ஸ்பெக்டர்! வேன் நெம்பர் தெரியாமே நீங்க என்ன பண்ண முடியும்?''

இன்ஸ்பெக்டர் கமலநாதன் தான் அணிந்திருந்த தொப்பியைக் கழற்றி விட்டு, வியர்த்துப்போன நெற்றியைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டார். கேஸ் தந்த குழப்பத்தில் முகம் இருண்டு போயிருந்தது.

''இன்ஸ்பெக்டர்...''

சிவசைலம் மெல்லிய குரலில் கூப்பிட்டார்.

கமலநாதன் நிமிர்ந்ததும் சொன்னார். ''அற்புதாவுக்கு அந்தக் கள்ளக் கடத்தல் கும்பலினால் மட்டும் ஆபத்தில்லை இன்ஸ்பெக்டர். இன்னொரு ஆபத்தும் இந்த இரண்டு நாளா அரும்பியிருந்தது.''

''இன்னொரு ஆபத்தா?''

''ஆமா... இன்ஸ்பெக்டர்... சத்யேஷ்ன்னு ஒருத்தன் அற்புதாவை கல்யாணம் பண்ணிக்க இருந்தான். 'அற்புதாவை நீ கல்யாணம் பண்ணி கிட்டா... கொலை செய்யப்படுவே'ன்னு எவனோ ஒருத்தன் எழுதின மொட்டைக் கடுதாசிக்குப் பயந்து போய் கல்யாணமே வேண்டாம்ன்னு சொல்லிட்டான் சத்யேஷ். அற்புதாவுக்கு இது அதிர்ச்சியா இருந்தாலும் - அந்த அதிர்ச்சியை ஜீரணம் பண்ணிகிட்டு குறிப்பிட்ட அதே தேதியில்

''சத்யேஷுக்கு பாடம் புகட்டற விதத்துல இதயவேந்தன் என்கிறவரை கல்யாணம் பண்ணிக்க முடிவு எடுத்தா... அழைப்பிதழையும் அச்சடிச்சு... விநியோகிக்க ஆரம்பிச்சா... இது விஷயமா சத்யேஷுக்கு ஏகப்பட்ட ஆத்திரம்... கோபம்... அவமானம்... அவன் ஒருவேளை இந்த விளையாட்டை விளையாடியிருக்கலாம்...''

இன்ஸ்பெக்டர் முகம் மலர்ந்தார்.

''அந்த சத்யேஷோட வீடு எங்கேயிருக்கு...?''

அட்ரஸைச் சொன்னார் சிவசைலம்.

அடுத்த பத்தாவது நிமிடம்-

போலீஸ் ஜீப் சத்யேஷின் பங்களா காம்பவுண்ட்டுக்குள் நுழைந்து - போர்டிகோவில் புதைந்து போயிற்று. வரவேற்பறையில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த - கண்ணாடி அணிந்த வழுக்கைத்தலைக்காரர் போலீஸ் ஜீப்பைப் பார்த்ததும் எழுந்து வந்தார். பேப்பரை மடித்துக் கொண்டே இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

''யார் வேணும் இன்ஸ்பெக்டர்...?''

''சத்யேஷ் இருக்காரா..?''

''இல்லை. வெளியே போயிருக்கான்...''

''நீங்க யாரு?''

''அவனோட அப்பா..''

''பேரு...?''

''சச்சிதானந்தம்.''

''மிஸ்டர் சச்சிதானந்தம்... ஒரு பொண்ணு கடத்தப்பட்ட விஷயமா விசாரணை பண்ணணும்...''

''பொண்ணு கடத்தப்பட்ட விஷயமாவா..?''

''ஆமா..! அற்புதாங்கிற பொண்ணை உங்களுக்குத் தெரியுமா..?''

''தெரியும்...'' - தெரியும் என்று சொல்லும் போதே அவருடைய முகம் இருட்டுக்குப் போயிருந்தது.

''உங்க பையனுக்கும் அந்த பொண்ணுக்கும் கல்யாணம் நடக்க இருந்ததா..?''

''ஆமா... இன்ஸ்பெக்டர். பையனுக்கு யார் கிட்டயிருந்தோ ஒரு மிரட்டல் கடிதம் வந்ததி னாலே கல்யாணத்தை நிறுத்திட்டோம்... அந்தப் பொண்ணுகூட அதைப் பொருட்படுத்தாமே வேற யாரையோ கல்யாணம் பண்ணிக்கப் போறதா



கேள்விப்பட்டேன்...''

''அந்தப் பொண்ணைத்தான் யாரோ... இப்போ... ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடி கடத்திட்டுப் போயிருக்காங்க...''

''சரி... அதுக்காக நான் என்ன பண்ணணும் இன்ஸ்பெக்டர்..?''

''உங்க மகன் சத்யேஷை கொஞ்சம் விசாரிக்கணும்...''

''அவனுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் இன்ஸ்பெக்டர்..?''

''சம்பந்தம் இருக்கோ இல்லையோ... அவரை விசாரிக்கணும்...'' இன்ஸ்பெக்டர் சொல்லிக்கொண்டிருந்த அதே விநாடி-

காம்பவுண்ட் கேட் அருகே அந்த இரைச்சல் கேட்டது.

இன்ஸ்பெக்டர் திரும்பிப் பார்த்தார்.

அந்த நீலநிற மெட்டாடர்வேன் வேகமாய் உள்ளே வந்து கொண்டிருந்தது.

## 17

அந்த மெட்டாடர் வேனைப் பார்த்ததும் ஒரு 'குபீர் வியப்பு' இன்ஸ்பெக்டர் கமலநாதனின் கண்களில் வந்து அப்பிக் கொண்டது.

அந்த வேன் போர்டிகோவுக்கு கொஞ்சம் தள்ளி நின்றது - கமலநாதன், சச்சிதானந்தத்தை ஏறிட்டார்.

''அந்த வேன் உங்களோடதா சார்..?''

''ஆமா!''

''வேன் எங்கே போய்ட்டு வருது..?''

''வாடகைக்கு..!''

''வாடகைக்கா..?''

''ஆமா... இன்ஸ்பெக்டர்... நான் மொதல்ல ஒரு சோப்பு கம்பெனி வெச்சிருந்தேன்... கடைகளுக்கு சோப்பு சப்ளை பண்றதுக்காக... இந்த வேனை வாங்கினேன். அப்புறம் என்னோட பார்ட்னர்க்கும்

எனக்கும் தகராறு வந்ததினாலே சோப்பு கம்பெனியை மூடிட்டோம்... என்னோடபங்குக்கு வந்த வேனை வாடகைக்குவிட ஆரம்பிச்சேன். காலையில ஏழு மணிக்கு டிரைவர் வருவார். சாயந்தரம் ஆறு மணிக்கெல்லாம் கொண்டு வந்து விட்டுடுவார். எனக்கு வாடகை நூறு ரூபா குடுத்துடுவார்.

''டிரைவரோட பேரு..?''

''மாதவன்...''

''எத்தனை வருஷமா... வேலையில இருக்கார்?''

''ரெண்டு வருஷமா...'' அவர் சொல்ல - குள்ளமாய் கறுப்பாய் இருந்த அந்த டிரைவர் மாதவன் போலீஸ் ஜீப்பைப் பார்த்து - கண்களில் மிரண்டு கொண்டே போாடிகோபடியேறி ஒரு நூறு ரூபாய்த்தாளை சச்சிதானந்தத்திடம் நீட்டினான். அவர் அதை வாங்கிக் கொள்ள - ''நான் நாளைக்குக் காலையில ஏழு மணிக்கு வர்றேன்யா...'' என்று சொல்லி நகர்ந்தான்.

''நில்லு...'' என்றார் இன்ஸ்பெக்டர் கமலநாதன்.

அந்த மாதவன் நின்றான். நெற்றி சுருங்க இன்ஸ்பெக்டரைப் பார்த்தான்.

''என்ன சார்..?''

''இன்னிக்கு வாடகைக்கு எங்கெங்கெல்லாம் போயிட்டு வந்தே...?''

''ஏன் சார்..?''

''கேட்ட கேள்விக்கு பதிலைச் சொல்லு...''

''மத்தியானம் ஒரு மணி வரைக்கும் வாடகையே கிடைக்கலை சார்... அப்புறம் வீடு மாத்தறதுக்கு ஒரு கிராக்கி வந்தது... இந்நேரம் வரைக்கும் வீட்டுச் சாமானையெல்லாம் மாத்தி விட்டு வர்றேன் சார்...''

கமலநாதன் டிரைவரை நெருங்கினார்.

''வீட்டை மாத்தினாயா...? இல்லே பொண்ணை மாத்தினாயா?'' இன்ஸ்பெக்டர் கேட்கவும் - கோபமாய் குறுக்கிட்டார் சச்சிதானந்தம்.



''இன்ஸ்பெக்டர்...''

''ஒரு நிமிஷம் பொறுங்க சார்... நான் இப்போ ...ங்க டிரைவரைத்தான் விசாரிச்சிட்டிருக்கேன்...'' சச்சிதானந்தம் அடங்கிப்போக - கமலநாதன் ...ரைவரை ஏறிட்டார். ''ம்... சொல்லு... வீட்டுச்சாமான்களை மாத்தினாயா..? இல்லே பொண்ணை மாத்தினாயா?''

''நீங்க கேக்கிறது எனக்குப் புரியலை சார்...''

''புரியலையா...? சரி எந்த ஏரியாவிலிருந்து எந்த ஏரியாவுக்கு வீட்டுச் சாமான்களை மாத்தினாய்..? அந்த வீட்டு அட்ரஸ் தெரியுமா..?''

''தெரியும் சார்!''

''அந்த அட்ரஸைச் சொல்லு...''

அவன் சொன்னான், ''டாக்டர் நடராஜன், நெம்பர் முப்பத்திரண்டு, ஆலிவர்ரோடு, மைலாப்பூர்...''

''கான்ஸ்டபிள்!'' - இன்ஸ்பெக்டர் கமலநாதன் கூப்பிட, பக்கத்தில் நின்றிருந்த கான்ஸ்டபிள் திடுமென்று விரைப்பானார்.

''சார்...''

''இந்த அட்ரஸை நோட் பண்ணிக்க... ஜீப்புல போய் பத்து நிமிஷத்துல இந்த டிரைவர் சொல்றது உண்மையா பொய்யான்னு விசாரிச்சுட்டு வரணும்...''

''எஸ்... சார்...''

கான்ஸ்டபிள் கிளம்பினார்.

மயிலாப்பூர்.

போலீஸ் ஜீப் ஆலிவர் ரோட்டுக்குள் நுழைந்து - முப்பத்திரண்டாம் நெம்பர் வீட்டைத் தேடிப்பிடித்து வாசலில் மௌனமானது.

கான்ஸ்டபிள் இறங்கி வசற்படி ஏற - உள்ளேயிருந்து - நல்ல சிவப்பில் - உயரத்தில் அந்த நபர் வந்தார்.

''எஸ்...''

''டாக்டர் நடராஜன்...?''

''நான் தான். என்ன விஷயம்..?''

''வீடு புதுசா மாத்தியிருக்கீங்களா சார்?''

''ஆமா.''

''மொதல்ல எந்த ஏரியாவுல இருந்தீங்க சார்?''

''பெசன்ட் நகர்.''

''பெசன்ட் நகரிலிருந்து வீட்டுச்சாமான்களைக் கொண்டுவர மெட்டாடர் வேன் ஏதாவது ஏற்பாடு பண்ணினீங்களா..?''

''ஆமா...''

''வேனோட டிரைவர் பேரு தெரியுமா சார்?''

''கூலி வாங்கிட்டுப் போறப்போ, பேர் கேட்டேன். டிரைவர் மாதவன்னு சொன்னார்.''

''டிரைவர் எப்படியிருந்தார்ன்னு சொல்லமுடியுமா சார்?''

''கொஞ்சம் குள்ளமா... கறுப்பா...''

கான்ஸ்டபிள் சோர்ந்துபோனார். எல்லாமே சரியாய் பொருந்துகிறது... கிடைத்த ஒருபிடியும் நழுவுகிறது.

டாக்டர் கேட்டார்.

''என்ன கான்ஸ்டபிள்..? எதுக்காக இந்த விசாரணை?''

''இன்னிக்கு மத்தியானம் மூன்றரை மணிக்கு தி.நகர். ஜி. என். ரெட்டி ரோட்ல வெச்சு ஒரு பொண்ணு கடத்தப்பட்டிருக்கா சார். அது சம்பந்தமா ஒரு டிரைவர் மேலே சந்தேகப் பட்டோம். அந்த டிரைவர் உங்க அட்ரசையும் சொல்லி, வீட்டுச்சாமான்களையெல்லாம் ஷிப்ட் பண்ணிட்டிருந்தேன்னு சொன்னார். அவர் சொன்னது உண்மையா பொய்யான்னு விசாரிக்கத்தான் இங்கே வந்தேன்.''

டாக்டர் கேட்டார்.

''அந்தப் பொண்ணு எத்தனை மணிக்குக் கடத்தப்பட்டதா சொன்னீங்க கான்ஸ்டபிள்?''

''மூணரை மணிக்கு.''

''என்னோட வீட்டுச்சாமான்களையெல்லாம், அந்த டிரைவர் மாதவன் ஒரு மணிக்குள்ளே மாற்றி கூலியை வாங்கிட்டுப் போயிட்டாரே. மத்தியானத்துக்கு மேலே, அந்த வேனை நாங்க உபயோகப்படுத்தவேயில்லை கான்ஸ்டபிள்.''



டாக்டர் சொல்லச் சொல்ல-

கான்ஸ்டபிள் கண்களில் மின்னல் அடித்தது.

## 18

வெளியே பறவைகளின் சத்தங்கள் சுத்தமாய் அடங்கிப் போயிருக்க, மனதுக்குப் பிடிக்காத ஒரு நிசப்தம் நிலவியது. அற்புதா இருந்த அறைக்குள் கொசுக்கள் 'ஜொம்'மென்று பறந்தது. சன்னலுக்கு வெளியே வானம் அட்டைக்கரியாய் தெரிய, அதில் புஷ்பராகக் கற்களைப் பதித்த மாதிரி நான்கைந்து நட்சத்திரங்கள் மின்னின.

அற்புதாவின் கண்களுக்குள் லேசாய் பசி மயக்கம் வந்து உட்கார்ந்து வயிற்றை இம்சைப் படுத்தியது. அறைக்குள் மெல்ல உலாவிக் கொண்டிருந்தவள் அறைக் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டுத் திரும்பினாள்.

முன்பு வந்த தடியனோடு - இப்போபுதிதாய் ஒரு தடியன் வந்து சேர்ந்து உள்ளே வந்தார்கள்.

''போலாங்களா, ரிப்போர்ட்டரம்மா?''

''எங்கே?''

''எங்க தலைவரை நீ தரிசிக்க வேண்டாமா?''

அற்புதா அசையாமல் நிற்க, ஒருத்தன் நெருங்கி வந்து அவளுடைய தோளைப் பற்றினான்.

''ம்...வா..! என்ன பெரிசா யோசனை பண்ணிட்டிருக்கே?''

''ச்சீ... கையை விடுறா. நானே வர்றேன்...''

தோளைப் பற்றியிருந்த அவனுடைய கையை உதறிவிட்டு நடக்க ஆரம்பித்தாள் அற்புதா.

முன்னால் ஒருவன்; பின்னால் ஒருவன்.

ஒரு சின்ன குறுகலான நடைபாதை போய்க் கொண்டிருக்க, அந்தப் பழமையான கட்டிடத்தின் பரப்பளவை ஓரளவு ஊகிக்க முயன்றாள் அற்புதா.

நடைபாதை சட்டென்று முடிந்து வலப்பக்கமாய் திரும்ப - ஒரு பெரிய கதவு திடீரென எதிர்ப்பட்டது. முன்னால் போனவன்

கதவை நெருங்கித் தட்டினான்.

''டொக்...டொக்...''

சில விநாடி அவகாசத்திற்குப்பின் கதவு திறக்க, மங்கலான வெளிச்சம் பரவிக் கிடந்த அந்த சின்ன ஹால் கண்ணுக்கு சிக்கியது. மேற்கூரையில் இருந்து எங்கோ பச்சை நிற வெளிச்சம் புகை மாதிரி அடித்துக் கொண்டிருந்தது. சுவரின் ஓரமாய் இருந்த சின்ன ஜெனரேட்டர் 'டப்டப்' என்ற தாள லயத்தோடு சத்தம் போட்டுக் கொண்டு, எல்லா விளக்குகளுக்கும் மின்சாரத்தைப் புகட்டிக் கொண்டிருந்தது.

ஹாலின் மையத்தில் நான்கைந்து சோபாக்கள் தெரிய, சுவரில் பெண்டுலத்தை ஆட்டியபடி அந்த பழையகாலத்து ரோமன் கடிகாரம் தொங்கிக் கொண்டிருந்தது.

''என்னடா அம்மாவைக் கூட்டிட்டு வந்துட்டீங்களா?'' கேட்டுக் கொண்டே பக்கத்து அறையில் இருந்து வெளிப்பட்ட உருவத்தைப் பார்த்ததும்-

அற்புதா இதய மத்தியில்-

ஏராளமாய் நொறுங்கிப் போய் நிமிர்ந்தான்.

இதயவேந்தன் வாயில் புகையும் சிகரெட்டோடு மெதுவாய் நடையிட்டு அவனை நோக்கி வந்தான்.

''இ... இத... ய... வே... வேந்தன்... நீ...நீங்களா?''

அவன் சிரித்தான்.

''நீ என்னை எதிர்பார்த்திருக்க மாட்டே இல்லையா அற்புதா..? எதிர்பாராத சம்பவங்கள் நடக்கிறதுக்கு பேர்தான் வாழ்க்கை...''

அற்புதா இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளாமல் இதயவேந்தனையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் எழுதிய கவிதைகள் ஞாபகத்திற்கு வந்தன. 'ஆண்களே! நீங்கள் இனிமேல் சேலையுடுத்தி, கைவளையல் பூட்டி -' என்று அற்புதாவை உயர்த்திப் பாடிய - அந்த கவிதை வரிகள் ஞாபகத்திற்கு வந்தன.

''இதய வேந்தன்... இந்த கும்பல்ல நீங்களா..?''- அற்புதாவின் தொண்டையில்



இருந்து குரல் குழறி குழறி வெளியே வந்து விழுந்தபோது, இதய வேந்தன் சிரித்தான்.

''ஏன் அற்புதா, கவிஞர்கள் கடத்தல் தொழில்ல ஈடுபடக் கூடாதா? வெளிநாட்டுக்குப் போற யாராவது வரும் போது, சும்மா வர்றாரா? எதையாவது கடத்திகிட்டுதானே வர்றார்...? அதெல்லாம் அரசாங்கம் கண்டுக்காம விட்டுடும், நான் அந்த தொழிலை பண்ணினா மட்டும் தப்பா..? இந்த கடத்தல் தொழிலுக்கு அந்த 'கவிஞர்' போர்வை ரொம்பவும் வசதியா இருந்தது அற்புதா. நீ டெலிபோன்ல கேட்ட அந்த 'மயக்கம் தரும் மங்கை திருமுருகனில் வருகிறாள். பத்து தந்து...' இந்த வார்த்தைகள் எல்லாம் அடியேனுடைய உபயம்தான். எப்படியிருக்கு? பரவாயில்லையா, அற்புதா?''

அற்புதா இளப்பமாய் புன்னகைத்தான். ''நீ அகில உலக கள்ளக் கடத்தல் சங்கத் தலைவனா போயிருக்க வேண்டிய ஆள். தவறிப்போய் சென்னையிலேயே இன்னமும் இருக்கே...''

''பாராட்டுக்கு நன்றி அற்புதா! இப்போ உன்னோட நிலைமையைக் கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தியா? சந்தோஷை கல்யாணம் பண்ணிகிட்டு சந்தோஷமா இருக்க வேண்டிய நீ, இந்த வேடந்தாங்கல் காட்டு பங்களாவில் அநாதையா சாகப் போறே. உனக்கு எதுக்கு அற்புதா இந்த துப்பறியற வேலையெல்லாம்..? எவனோ போன்ல பேசிட்டு போறான். அதை அவ்வளவு சிரத்தையா ஒட்டுக்கேக்கணுமா? கேட்டு போலீஸ்ல போய் அவ்வளவு வக்கணையா சொல்லணுமா..? சொன்னதோடு இல்லாமே செக்போஸ்டுக்கு போய், உன்னோட அதி மேதாவித்தனத்தைக் காட்டி, கடத்தல் பொருள்களைக் காட்டித் தரணுமா? அப்படி நீ காட்டித் தந்ததினாலே எங்க சைட்ல அந்த ஸ்பாட்ல ரெண்டு உயிர் நஷ்டம். பதிலுக்குப் பதில் பழிவாங்க வந்த வில்லியம்ஸை, உன்னோட புத்திசாலித்தனத்தாலே அவனையே தூக்குப் போட்டுக்க வெச்சே. எங்க வழியில குறுக்கிடற யாரையுமே நாங்க உயிரோட விட்டு வெச்சதில்லை...''

''குட்... நல்ல பாலிசி. என்னோட பாலிசியும் அதுதான். ஆனா ஒரேயொரு வித்தியாசம். என்னைத் தீர்க்க வர்றவங்க அவங்களாகவே தங்களோட முடிவை தேர்ந்தெடுத்துக்கிறாங்க...''

''இன்னிக்கு அந்த வித்தியாசம் நடக்காது அற்புதா...'' சொன்ன இதயவேந்தன் பின் பக்கமாய் தன் வலது கையை நீட்ட - வரிவரி பனியன் போர்வழி ஒருவன் ஓடோடி வந்து - அந்த கையில் பிஸ்டலைத் திணித்தான்.

இதயவேந்தன் பிஸ்டலை வாங்கிக் கொண்டு - இடது கையால் அருகே இருந்த இண்டர்காமின் ரிசீவரை எடுத்து மெல்லிய குரலில் பேசினான்.

''சார். கிளி சாகப் போகிறது. பார்க்க வர்றீங்களா?''

''......''

''என்னது..? கிளி கூட ஒரு மணி நேரம் கொஞ்சணுமா?''

''.....''

''மேலே கூட்டிட்டு வர்றேன் சார்...'' பவ்யமாய் சொல்லிவிட்டு ரிசீவரை வைத்தான் இதயவேந்தன். அற்புதாவை நோக்கிப் பிஸ்டலை அசைத்தான். ''அற்புதா, கொஞ்சம் வலதுகைப் பக்கமா திரும்பி - அங்கேயிருக்கிற மாடிபடிகளின் வழியா மேலே போய், மொதல் ரூம்ல நுழையறியா?''

அற்புதா எதிர்ப்பு காட்டாமல் அவன் சொன்ன திசைப் பக்கமாய் நடந்து மாடிப்படிகளில் ஏறினாள். பழமையான மரத்தாலான மாடிப்படிகளில் நிதானமாய் ஏறினாள். இதயவேந்தன் பிஸ்டலோடு தொடர்ந்தான். மாடியின் உச்சிக்கு வந்ததும்-

பாதி கதவு திறந்திருந்த அந்த அறை, வெளிர் நீல நிற வெளிச்சத்தோடு தெரிந்தது. உள்ளே திரைச்சீலைகள் அசைந்தது.

''ம்... போ... உள்ளே...''

போனாள்.

அறையின் மையத்தில் - ஒரு சுழல் நாற்காலியில் உட்கார்ந்து அரைவட்டம் ஆடிக் கொண்டிருந்த சிவசைலம் ''வாம்மா அற்புதா...'' என்றார்.

அறைக்குள் மண்டியிருந்த காற்றில் - ஸ்காட்ச்



விஸ்கியின் நெடி நிரம்பவும் ஸ்நேகமாய் கலந்திருந்தது.

## 19

மயிலாப்பூர் போய் டாக்டர் நடராஜனிடம் விபரம் தெரிந்து கொண்டு வந்த கான்ஸ்டபிள், சத்யேஷின் பங்களாவிற்கு வந்து, இன்ஸ்பெக்டர் கமலநாதனிடம் விஷயத்தைச் சொன்னதும் அவர் பிரகாசமாகி டிரைவர் மாதவனை நெருங்கினார்.

''வீணா உதைபட்டு சாகாதே. அந்தப் பெண்ணை எங்கே கொண்டு போய் மறைச்சு வெச்சிருக்கே?''

''எ... எந்தப் பொண்ணு சார்..?''

கமலநாதன் டிரைவர் மாதவனின் காலர் பகுதியை கழுத்தோடு சேர்த்து கொத்தாய் பிடித்தார். சச்சிதானந்தம் குறுக்கிட்டார்.

''இன்ஸ்பெக்டர்...''

திரும்பினார் கமலநாதன்.

''அவனை விசாரிக்கிற பொறுப்பை என்கிட்டே விடுங்க.''

கமலநாதனின் பிடி தளர்ந்தது. சச்சிதானந்தம் மாதவனை நெருங்கினார். ''சொல்லுடா... மாதவா... நீ மத்தியானம் பூராவும் வாடகைக்குப் போகலைங்கிறது வெட்ட வெளிச்சமாயிடுச்சு... அந்தப் பொண்ணை நீ கடத்தினாயா..?''

''நா... நான் இல்ல சார்...''

''பின்னே யாரு...?''

''வெளியே விஷயத்தைச் சொன்னா... என்னோட பெண்டாட்டி குழந்தைகளை கொன்னுடப் போறதா அவங்க சொல்லியிருக்காங்க... சார்!''

''யார் அவங்க...?'' கமலநாதன் கேட்டார்.

''அவங்க யாருன்னு தெரியாது சார்... மைலாப்பூர் போயிட்டு நான் ஸ்டாண்டுக்கு திரும்பிட்டிருந்தேன்... அப்போ மத்தியானம்

ரெண்டரை மணி இருக்கும்... தேனாம் பேட்டைக்கு பக்கத்துல ரெண்டு பேர் வேனை மறிச்சாங்க... நான் வேனை நிறுத்தி என்ன விபரம்னு கேட்டேன்... 'எக்மோரிலிருந்து இரும்புக் குழாய்களை ஏத்திகிட்டு ராயப்பேட்டை போகணும். வேன் வருமா'ன்னு கேட்டாங்க. நான் கேட்ட வாடகைக்கு மறுபேச்சு பேசாமே ஒத்துகிட்டாங்க... வேன்ல ஏறி உட்கார்ந்ததும்தான் அவங்க மோசமான பேர்வழிகள்ன்னு தெரிஞ்சது... துப்பாக்கி முனையில் என்னை மிரட்ட ஆரம்பிச்சுட்டாங்க... ஒரு பெண்ணை வேன்ல வெச்சு கடத்தப் போறதாகவும் - சாயந்தரம் நாலு மணி வரைக்கும் வேன் தேவைப்படும்ன்னும் சொன்னாங்க. அவர்களுக்கு நான் உதவாத பட்சத்துல என்னையும் என்னோட குடும்பத்தையும் தீர்த்துடப் போறதா மிரட்டினாங்க... வேற வழியில்லாமே நானும் அவங்களுக்கு உதவி செய்ய ஆரம்பிச்சேன். ஜி. என். ரெட்டி ரோட்ல டாக்ஸியில வந்த அந்தப் பொண்ணை மடக்கி மயக்கமாக்கி - வேனுக்கு கொண்டு வந்தாங்க... குரோம்பேட்டை வரைக்கும் வேனை விடச்சொல்லி - அங்கே ஆள் நடமாட்டம் இல்லாத இடத்துல - நின்னுட்டிருந்த காருக்கு அந்தப் பொண்ணைக் கொண்டு போனாங்க... நான் இந்த விஷயத்தை போலீஸிலோ... வேற யாரிடமாவதோ சொன்னா... அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ள என்னோட குடும்பத்தையே நாசம் பண்ணிடப் போறதா மிரட்டினாங்க... அவங்க அது மாதிரி செஞ்சுடு வாங்களோன்னு பயந்துதான்... உண்மையை... உங்ககிட்டயிருந்து மறைச்சேன்.''

இன்ஸ்பெக்டர் கமலநாதன் மாதவனின் தோளைத் தட்டினார். ''பயப்படாதே! உனக்கும் உன்னோட குடும்பத்துக்கும் ஆபத்து வராமே பார்த்துக்க வேண்டிய பொறுப்பு என்னோடது. அந்தப் பொண்ணைக் கடத்தின ரெண்டு பேரும் எப்படியிருந்தாங்க..?''

யோசித்து யோசித்து - அடையாளங்களைச் சொன்னான் டிரைவர் மாதவன். கான்ஸ்டபிள் ஒருவர் தன் பாக்கெட் டயரியில் அதை



வேகவேகமாய் குறித்துக் கொண்டிருந்தார்.

''அந்த பொண்ணை குரோம்பேட்டைக்குப் பக்கத்துல வேனிலிருந்து காருக்கு மாத்தினாங்களே... அந்தக் கார் என்ன கார்...''

''அம்பாசிடர்...''

''நெம்பர் நோட் பண்ணியா..?''

''சரியா நோட் பண்ணமுடியலை சார்... எம்.டி.எஸ். என்ற எழுத்துக்களும் - கடைசி ரெண்டு நெம்பர் மட்டும் தெரிஞ்சது...''

''கடைசி நெம்பர் என்ன..?''

''86''

''அது '86' தான்னுதான் நிச்சயமா தெரியுமா..?''

''ஆமா சார்... அந்த ரெண்டு நம்பரை மட்டும் தான் என்னால பார்க்க முடிஞ்சது சார்...''

''கார்... எந்தப் பக்கமா போச்சு..?''

''சிட்டிக்கு அந்தப் பக்கமா சார்...! கார்ல யார் இருந்தாங்கன்னு - தெரியலை சார்...''

இன்ஸ்பெக்டர் கமலநாதன் சுறுசுறுப்பானார். அதே விநாடி வாசலில் - சத்யேஷின் தலை தெரிந்தது.

## 20

அறை வாசலிலேயே உறைந்து போய் நின்று விட்ட அற்புதாவின் தோள்பட்டையை பிஸ்டலால் மெல்லத் தட்டினான் இதயவேந்தன்.

''என்ன அற்புதா... பெரியவரைப் பார்த்ததும் அப்படியே உறைஞ்சு போய் நின்னுட்டே..? எங்களுக்கெல்லாம் மூலஸ்தானமே பெரியவர் தான்... நான்தான் உற்சவமூர்த்தி. உள்ளே போ. நீ இன்னும் நிறைய ஆச்சர்யப்படலாம்...''

அற்புதா தயக்கமாய் நடந்து - கண்களில் வெறுப்பு மண்டிப்போய் சிவசைலத்தின் எதிரே வந்து நின்றாள். ''சார்... நீங்களா... இப்படி...? என்னால நம்பமுடியலை சார்...''

''நம்பு... அற்புதா... நம்பு... இந்த இந்தியநாட்ல

ஒரு தொழிலை மட்டும் நடத்தி லாபம் சம்பாதிக்க முடியுமா..? எத்தனை பேருக்கு லஞ்சம் தரணும்... அதான் இந்த உபதொழிலை வெச்சுகிட்டேன்... ஒரு வருஷமாத்தான் இந்த பிசினஸ்... அமோக லாபம்... செக் - போஸ்ட் வில்லியம்ஸுக்கு பர்செண்டேஜ் பேசிகிட்டா போதும்... லாரி லாரியா சரக்கு மெட்ராசுக்குள்ளே வந்துடும்...''

''சார்... நான் உங்களை.... அப்பாஸ்தானத்துல வெச்ச... எவ்வளவோ மதிப்பா...'' பேச்சு வராமல் திணறினாள் அற்புதா.

சிவசைலம் சிரித்தார். ''ஆமாம்மா... நானும் கூட உன்னை என்னோட மக மாதிரி நினைச்சுட்டிருந்தேன்... நீ எப்போ போலீசைக் கூட்டிகிட்டு அந்த செக்போஸ்ட்டுக்கு போனியோ... அன்னிக்கே நீ என் எதிரியாயிட்டே... உன்னால எனக்கு எவ்வளவு நஷ்டம் தெரியுமா அற்புதா..? எனக்கு நஷ்டத்தை ஏற்படுத்தின உன்னை நான் நஷ்டப்படுத்த வேண்டாமா..? அதுக்காகத்தான் இந்த வேடந்தாங்கல் பங்களாவுக்கு உன்னை வலுக்கட்டாயமா கொண்டு வந்தது... உன்னைக் கடத்தறதுக்காக நாங்க உபயோகப்படுத்தின வேன் யாரோடது தெரியுமா... அற்புதா...? உன்னோட பழைய காதலன் சத்யேஷோடது... போலீஸ் ட்ரேஸ் பண்ணினாலும் மாட்டிக்கப் போறது அவன்தான்...''

இதயவேந்தன் குறுக்கிட்டான். ''சார்... நான் வெளியே வெயிட் பண்றேன். நீங்க அற்புதாவைக் கொஞ்சின பின்னாடி என்னைக் கூப்பிடுங்க... நான் வர்றேன்.''

''இதயவேந்தன் ரொம்பவும் இங்கிதம் தெரிஞ்சவன்...'' சொல்லிக்கொண்டே கதவைத் தாழிட்டு - அற்புதாவை நெருங்கினார். அற்புதாவின் உடல் நடுங்கியது. அவரைக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

''சார்... என்னை ஒண்ணும் பண்ணிடாதீங்க சார்...''

''நீதான் ரொம்பவும் துணிச்சல்காரியாச்சே...! எங்கே... என் கிட்டயிருந்து உன்னைக் காப்பாத்திக்கோயேன் பார்க்கலாம்...'' சிரித்து தோள் மேல் கையை வைத்தார்.



''சார்... என்னை மன்னிச்சுடுங்க சார்... உங்க பலம் தெரியாமே விளையாடிட்டேன். என்னை உயிரோடு விட்டுடுங்க சார்... நான் வேற எதாவது ஊருக்குப் போய்...''

''அடேடே.... என்ன அற்புதா.. சரசரன்னு இவ்வளவு தூரத்துக்கு இறங்கி வந்துட்டே... என்னைப் பார்த்ததும் கன்னாபின்னான்னு எகிறுவேன்னு பார்த்தேன்... இப்படி நோய்க் கோழியாட்டம் ஒடுங்கிப் போயிட்டியே..? ப்ச்...ப்ச்... நீ உயிர் பிழைக்கணும் அவ்வளவு தானே?''

''ஆமா... சார்...''

''நீ உயிர் பிழைக்கணும்ன்னா நான் சொன்னபடி கேக்கணும்... கேப்பியா..?''

''கேக்கறேன் சார்...''

''மொதல்லே நீ கட்டியிருக்கிற சேலையை மாத்திரம் அவுத்து வெச்சுட்டு - ஜாக்கெட்டோடும் பாவாடையோடும் அந்த அலமாரிக்கு நடந்துபோய் - ஸ்காட்ச் பாட்டிலையும் டம்ளரையும் எடுத்துட்டு வர்றே...''

''ச...சார்...''

''சொன்னதை 'பட்பட்'ன்னு செய்யணும்...''

அற்புதா கட்டியிருந்த சேலையைக் களைந்தாள். அவளையே வெறிக்க வெறிக்க பார்த்துக்கொண்டிருந்த சிவசைலம், ''இந்த உடம்போட அனாடமிக்காகத் தான் உனக்கு என்னோட பத்திரிகையில வேலை கொடுத்தேன். அற்புதா. உடம்பை அற்புதமா வெச்சிருக்கே. போய் ஸ்காட்ச்சை கொண்டா... நீ ஸ்காட்ச்சை டம்ளர்ல ஊத்த - ஊத்த நான் அந்த நேரத்தை வேஸ்ட் பண்ணாமே...உன் உடம்புல இருக்கிற மத்த துணிகளையும் கழட்டிடறேன்...''

அற்புதா அலமாரியை நோக்கிப் போனாள். செவ்வக வடிவான அந்த வெளிநாட்டு பாட்டிலையும் புனல் வடிவ டம்ளரையும் எடுத்துக் கொண்டாள்.

''ம்... சீக்கிரமா... வா...'' கட்டிலில் சாய்ந்து

படுத்துக் கொண்டு அற்புதாவை அவசரமாய் கூப்பிட்டார் சிவசைலம்.

அற்புதா நெருங்கினாள்.

அதே விநாடி -

கட்டிலின் மறுபக்க ஸ்டூலில் உட்கார்ந்திருந்த இண்டர்காம் தன் தொண்டையை மெல்ல கனைத்தது.

ரிசீவரை எடுப்பதற்காகத் திரும்பினார் சிவசைலம். அந்த வெளிர் நீலநிற வெளிச்சத்தில் சிவசைலத்தின் வழுக்கை மண்டை சந்திரன் மாதிரி பிரகாசிக்க -

அற்புதமான அந்த விநாடியை உபயோகித்துக் கொண்டாள் அற்புதா. ஒரு கிலோ எடையுள்ள அந்த வெளிநாட்டு விஸ்கி பாட்டிலின் கழுத்தை வாகாய் பற்றிக் கொண்டு - காற்றில் வீசினாள்.

''ஸ்....ஸ்...ஸ்...''

அது என்ன சத்தம் என்று உணர்ந்து திரும்புவதற்குள்-

வழுக்கை மண்டையின் மையத்தில் - பாட்டில் ஆவேசமாய் இறங்கியது.

''ச்ச்சலீர்ர்ர்...''

பாட்டில் சின்னச் சின்ன கண்ணாடித் துணுக்குகளாய் - ரத்தத் துளிகளையும் - விஸ்கி திவலைகளையும் கோஷ்டி சேர்த்துக் கொண்டு சிதறியது.

ரிசீவர் தெறித்து விழ - முகத்தில் கோடு கோடாய் ரத்தம் வழிய - கட்டிலிலேயே முன் பக்கமாய் மடங்கி விழுந்தார் சிவசைலம். அடுத்துவந்த சில விநாடிகளிலேயே கண்களை நிலைகுத்தினார். ரத்தம் மட்டும் குபுகுபுவென்று உற்சாகமாய் பொங்கிக் கொண்டிருந்தது.

யாரோ... மாடிப்படிகளில் வேகமாய் ஏறிவரும் சத்தம் கேட்டது. தொடர்ந்து 'டமடம'வென்று கதவு தட்டப்படும் சத்தம்.

''சார்...சார்...'' இதயவேந்தன் குரல் பதறியது. கைகள் மெஷின்தனமாய் கதவைத் தட்டிக் கொண்டிருந்தது.

அற்புதா சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அறையின் வலதுபக்கக் கோடியில் - கம்பிகள்



இல்லாத அந்தக் கண்ணாடி ஜன்னல் கண்களுக்குப் பட - அதை நோக்கி ஓடிப் போய் - வெளியே எட்டிப் பார்த்தாள்.

வெறும் காலாலேயே குதித்துவிடக்கூடிய தூரத்தில் தரை தெரிந்தது. கட்டிலின் ஓரமாய் கீழே கிடந்த புடவையை எடுத்து உடம்பில் சுற்றிக் கொண்டு - ஜன்னலின் நடுக்கட்டையைப் பற்றி மேலே ஏறி - சில விநாடிகள் தாமதித்து -

'தொம்'மென்று கீழே குதித்தாள். உடம்பின் பாரத்தை தாங்கமாட்டாமல் காலின் நரம்புகள் சுர்ரென்று மடங்கின. நிமிர்ந்தாள்.

சுற்றிலும் அடர்த்தியான இருட்டு. பக்கத்திலிருந்த செடி கொடிகள் காற்றில் வேகமாய் ஆடின. சுவர்க் கோழிகள் ஜோரான சுருதியில் இருந்தது.

எந்தப் பக்கமாக ஓட வேண்டும்?

வழி எது..?

சில விநாடிகள் திணறியவள் - சன்னலில் தெரிந்த இதயவேந்தன் தலையைப் பார்த்ததும் ஏதோ ஒரு திசை நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

''டேய்... தயாள்.. அவ.. அந்தப்பக்கமா ஓடறா...''

''ரோட்டுப் பக்கமாவா...?''

''ஆமா...''

''ரோட்டுக்குப் போறதுக்குள்ளே அவளை முடிக்கணும்...'' கூக்குரல்களோடு காலடிச் சத்தங்கள்.

அற்புதா மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தாள். ஓடுகிற பக்கம்தான் ரோடு என்பது தெரிந்து விட்டது.

சத்தங்கள் மறுபடியும் துரத்தின.

''டார்ச்சை நீ பிடி...''

''ஆள் கண்ணுக்கு தெரிஞ்சா சுட்டுடு... யோசனையே பண்ணாதே... ஆள் எமகாதகியா இருப்பா போலிருக்கே...''

அற்புதா சேலையையும் பாவாடையையும் ஒரு சேர தூக்கிப் பிடித்துக்கொண்டு - வாயில் புஸ்...புஸ்... என்று மூச்சு வாங்கிக் கொண்டு -

செடி கொடிகளுக்கு மத்தியில் லேசாய் தெரிந்த பாதையை அடையாளம் வைத்துக் கொண்டு ஓடினாள்.

'தப்பிக்க முடியுமா..?'

யோசிக்க யோசிக்கவே-

அந்த அடர்த்தியான டார்ச் வெளிச்சம் ஒரு தடவை அவளுடைய உடம்பின் மேல் பட்டு நகர்ந்தது.

''டேய்... தயான்... கடு... முன்னாடிதான் ஓடறா...''

அவன் சொல்லி முடிக்கவில்லை.

தோட்டா ஒன்று காற்று வாகனத்தில் ஏறி - அற்புதாவின் இடது காதுக்குப் பக்கத்தில் 'விஷ்ஷ்ஷ்க்' கென்று கடந்தது.

''தப்பிச்சுட்டா போலிருக்கு... டார்ச்சை இன்னொருதரம் அடி...''

அவன் அடித்தான்.

பளீரென்ற வெளிச்ச மழையில் - மறுபடியும் ஒரு தடவை சிக்கினாள், அற்புதா.

யான் பிஸ்டலை உயர்த்தினான்.

## 21

போலீஸ் ஜீப் உச்சபட்ச வேகத்தில் அந்த நெடுஞ்சாலையில் டயர்களை தேய்த்துக் கொண்டிருந்தது. முன் சீட்டில் இன்ஸ்பெக்டர் கமலநாதனும் சத்யேஷும் உட்கார்ந்திருந்தார்கள். பின்சீட்டில் கான்ஸ்டபிள்களுக்கு மத்தியில் வேன் டிரைவர் மாதவன் தெரிந்தான். மாதவனுக்குப் பக்கத்தில் சிவசைலத்தின் வீட்டு வேலையாள் சபாபதி மருண்ட பார்வையோடு உட்கார்ந்திருந்தான்.

''மிஸ்டர் சத்யேஷ்...''

இன்ஸ்பெக்டர் கமலநாதன் கூப்பிட்டார்.

''என்ன இன்ஸ்பெக்டர்..?''

''அந்த அம்பாசிடர் வண்டி மிஸ்டர் சிவசைலத்தோடதுதானே..? தப்பா இருந்துட்டா... நாம அவர்கிட்டே மாட்டிக்குவோம்...''



''எனக்கு அவர் வண்டி நல்லாவே தெரியும் இன்ஸ்பெக்டர்... அற்புதாவை அந்த வண்டியில் நிறைய தடவை பார்த்திருக்கேன்... இந்த வேலையாளுக்கு அவரோட கார் நெம்பர் நிச்சயமா தெரியும்... ஆனா மறைக்கிறான்...''

சிவசைலத்தின் வீட்டு வேலையாள் அவசர அவசரமாய் மறுத்தான். ''சத்தியமா... கார் நெம்பரெல்லாம் எனக்குத் தெரியாது சாமி... நான் படிக்காதவன்... அய்யா எங்கேன்னு கேட்டாங்க... 'அவர் ஏழு மணிக்கு மேலே தினமும் வேடந்தாங்கல் பங்களாவுக்குப் போவார்'ன்னு சொன்னேன். உங்ககிட்டே மறைக்க பேசியிருந்தா அய்யா இந்த பங்களாவுக்கு போறதைப் பத்தியும் மறைச்சிருப்பேனே... பங்களாவைக் காட்றதுக்காக உங்ககூட புறப்பட்டு வருவேனா சாமி...?''

சத்யேஷ் ஆச்சரியப் பட்டான். ''இதுல சிவசைலம் சம்பந்தப் பட்டிருப்பார்ன்னு என்னால நினைச்சுக் கூடப் பார்க்க முடியலை சார்... குழந்தைகள் இல்லாத அந்த மனுஷனுக்கு அற்புதா மேல ஒரு தனிப் பாசம்... அவராவது... அற்புதாவைக் கடத்தறதாவது..? நேர்ல போய் பார்க்கிறவரை எனக்கு நம்பிக்கை கிடையாது...''

'வேடந்தாங்கல் - பறவைகளின் சரணாலயம் - பறவைகளை வேட்டையாடுவது சட்டப் படி குற்றமாகும். மீறுவோர் தண்டிக்கப்படுவார்கள்' - ஜீப்பின் வெளிச்சத்தில் போர்டு எதிர்ப்பட அந்த வேலையாள் சொன்னான்.

''இந்தப் பக்கமா திரும்பி அந்த மண் ரோட்ல போகணும் சாமி...''

டிரைவர் ஜீப்பைத் திருப்பினார்.

ஹெட்லைட் வெளிச்சம் கத்தி வீச்சாய் பாய -

வெளிச்ச முடிவில்-

தள்ளாடி - ஓடிவரும் அற்புதா தெரிந்தாள்.

சத்யேஷ் கத்தினான்.

''அ...ற்...பு...தா...''

ஜீப் வேகமாய் அவளருகே நின்றது.

கமலநாதனும் சத்யேஷும் பாய்ந்தார்கள். ஓடிப்போய் அற்புதாவைப் பற்றினார்கள். அவள் துவண்டாள்.

முதுகு பூராவும் ரத்தம்.

தோட்டா ஒன்று இடுப்பைக் கவ்வியிருந்தது.

''டேய்... தயான்... போலீஸ்..!'' பின்னால் ஓடி வந்தவர்கள் சட்டென்று நின்று - ஓட ஆரம்பித்தார்கள்.

கான்ஸ்டபிள்கள் பாய்ந்து அவர்களை அமுக்கினார்கள்.

## 22

செங்கல்பட்டு ஆஸ்பத்திரியில் - அதே இரவில் தீவிர கண்காணிப்புப் பிரிவில் சேர்க்கப்பட்ட அற்புதா - டாக்டர்கள் அவசர அவசரமாக செய்த ஒரு ஆபரேஷனுக்கு மதிப்பு தராமல் செத்துப் போனாள். ஆனால் சாவதற்கு முன் பத்து நிமிட நேரம் - இன்ஸ்பெக்டர் கமலநாதனிடம் தெளிவான குரலில் பேசி - கடத்தல் கேஸில் சம்பந்தப்பட்டிருந்த நபர்களைப் பற்றி ஒரு மரண வாக்குமூலம் கொடுத்துவிட்டுத்தான் செத்துப் போனாள்.

சத்யேவிடம் ஒரேயொரு வார்த்தைதான் பேசினாள்.

**''இனிமேலாவது ஒரு ஆண் மகனா இருங்க...''**

## 23

இந்த அத்தியாயம் ராஜேஷ்குமாராகிய எனக்கு. சுருக்கமாய் ஒரு விஷயம் சொல்லிவிட்டு - அடுத்த நாவல் எழுதப் போய்விடுகிறேன் வாசகர்களே!

இந்த சமூகத்தில் வேரோடிக் கிடக்கின்ற புல்லுருவிகளை அடையாளம் கண்டு - அவர்களைத் தண்டிக்கிற பொறுப்பு போலீசுக்கு மட்டுமில்லை... நமக்கும் இருக்கிறது. ஒரு பிக்பாக்கெட் பேர்வழி - ஒருவனின் சட்டைப் பையிலிருந்து பிக்பாக்கெட் அடிப்பதைப் பார்த்தாலும் - நம்மில் எத்தனையோ பேர் அதைக்



கண்டுகொள்ளாமல் இருந்துவிடுகிறார்கள். இது சரியா?

நியாயத்தை நிலைநாட்டும் முயற்சியில் அற்புதா போன்றவர்கள் முடிவில் சாவை சந்திக்கலாம். ஆனால் அந்த சாவில் நியாயம் பிறந்துவிடுகிறது.

ஆண்கள் கோழையாகிவிடும் பொழுது-
பெண்கள் தடியெடுத்துக் கொள்வதில்-
தப்பேயில்லை.
இன்று அற்புதா.
நாளை யாரோ...?

## முற்றும்.

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு (ப்ரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜீ. அசோகன். முகவரி: 352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.
தொலைபேசி: 28544294
ஆசிரியர்: ஜீ.அசோகன்.